ஸ்ரீ

ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்

வேதாந்த விசாரணை

# ஸிவில் ஸூட்

4-வது இஷ்யூ.

188

---

ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி குணகணாலங்க்ருத

ஸ்ரீமதுத்தராதிமடாதீச

ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதங்களவர்களால்

இயற்றப்பட்டு

எஸ். கிருஷ்ணாசார்யரால்

மொழிபெயர்க்கப்பட்டது.

---

4654.

பத்மஸரோவரம் (திருச்சானூர்)

ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ சபையாரால்

ப்ரசுரிக்கப்பட்டது.

1934.

171

Complementary copy from Mr M. Narayana Rao
R65
G74·4
Gr. 30164
1974
4654.
ஸீதாராம தபோவன வாசக சாலை.
In Memory Of
T. Sitaraman 5-6-37
T. Sitaram
Sanitary F.
Presented By
Dr. S. Venkataram
L.M.


ஸ்ரீ

ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்

வேதாந்த விசாரணை

# ஸிவில் ஸுட்

4-வது இஷ்யூ.

ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபநாசார்ய

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி குணகணலங்க்ருத

ஸ்ரீமதுத்தராதிமடாதீச

ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதங்களவர்களால்

இயற்றப்பட்டு

எஸ். கிருஷ்ணசார்யரால்

மொழிபெயர்க்கப்பட்டது.

பத்மஸரோவரம் (திருச்சானூர்)

ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ சபையாரால்

கப்பட்டது.

1934,

T004654
Sarasvati Mahal Library. Thanjavur

ஸ்ரீ:

# பொருளடக்கம்.


| பொருள். | | பக்கம். |
| --- | --- | --- |
| முன்னுரை | ... ... | i-ii. |
| ஜட்ஜ்மெண்ட் | ... ... | 1 |
| டிக்ரி | ... ... | 26 |
| வாதி விசாரணை | ... ... | 27 |
| வாதியின் ஆதாரங்கள் (எக்ஜிபிட்ஸ்)— | | |
| யஸ்ஸர்வஜ்ஞ: என்கிற ஸ்ருத்யர்த்தம் | ... | 28 |
| பராஸ்ய ஶக்தி: என்கிற ஸ்ருத்யர்த்தம் | ... | ,, |
| ஸகாரணம் காரணாதிபோதிப: | ,, ... | ,, |
| தமீஶ்வராணம் | ,, ... | 29 |
| ஏகோ தேவ: | ,, ... | ,, |
| ஏகோ வஶீ | ,, ... | ,, |
| நித்யோ நித்யானம் | ,, ... | ,, |
| உபே அஸ்மின் | ,, ... | 31 |
| ஸர்வே வேதா | ,, ... | ,, |
| வேதைஶ்ச ஸர்வை: | ,, ... | ,, |
| அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா முதலிய ப்ரஹ்ம ஸூத்ரார்த்தம் | ... ... | 32 |
| ஸர்வஸ்யசாஹம் முதலிய கீதா வாக்யார்த்தம் | ... | ,, |
| ப்ரதிவாதி விசாரணை | ... ... | 35 |
| எக்ஜிபிட்ஸ் (ஆதாரங்கள்) | ... ... | 36 |

4654.




| பொருள். | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| கேவலோ நிற்குணஸ்ச என்கிற ஸ்ருதி விசாரணை | | | ... | 39 |
| அஸ்தூலமனணு | ,, | ,, | ... | 44 |
| யத்ததத்ரேஸ்யம் | ,, | ,, | ... | 48 |
| யதோ வாசோ நிவர்த்தந்தே | | ,, | ... | 50 |
| அஸப்தமஸ்பர்ஸம் | ,, | ,, | ... | 53 |
| நிற்குணம் குணபோக்த்ரு ச என்கிற கீதாவாக்யம் | | | ... | 54 |
| ந ஸ்தானதோபி என்கிற ஸூத்ர விசாரணை | | | ... | 55 |
| தத்வமஸி ஸ்ருதி விசாரணை | ... | | ... | 58 |
| நேஹ நாநாஸ்தி கிஞ்சன விசாரணை | | | ... | 59 |
| மாயாஹ்யேஷா என்கிற மஹாபாரதவாக்ய விசாரணை ... | | | | 66 |
| வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | | ... | 75 |
| ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | | ... | 79 |
| வாதி வக்கீல் ரீ ஆர்க்யுமெண்ட் .... | | | ... | 84 |

ॐ

श्रीमतामनेकशासनशासनतिरस्कृतान्तेवासिजनमनस्तमस्तोमानां सर्वतन्त्रस्वतन्त्राणां श्रीमन्मध्वसम्प्रदायप्रधानाचार्याणां श्रीमदुत्तरादिमठाधीश्वराणां श्रीमज्जगद्गुरुवराणां करुणावरुणालयानामवैदिकमतध्वान्तविध्वंसनविधौ प्रचण्डमार्त्तण्डानां तत्रभवतां श्री १०८ श्रीमद्भगवत्पूज्यपाद

श्री सत्यध्यानतीर्थस्वामिवर्य्याणां

श्रीचरणसरोरुहेषु

# भक्तिपुष्पाञ्जलिरयम्—

सत्यध्यानपरायणे गुरुवरे भक्तिप्रचारोद्यते,
मिथ्यावादतमोऽपनोदनविधौ सूर्यप्रभामण्डले ।
सत्यज्ञानमये सदा श्रुतिरते पाण्डित्यपूर्णे प्रभौ,
सत्यध्यानयतीन्द्रनामविदिते तीर्थोपनाम्नाऽन्विते ॥ १ ॥

श्रीदुर्गाविजयोत्सवे सुमिलिते पन्थासुहृन्मेलने,
काशीवासिभिराप्तबन्धुमिलितैर्वङ्गीयविद्वज्जनैः ।
स्मारं स्मारमहर्निशं गुरुगुणान् प्रेमप्रसूनैर्युता,
श्रद्धाभक्तिमयी प्रणामसहिता मालोपहारीकृता ॥ २ ॥

किं भूषणं भक्तिविभूषणाय, ज्ञानात्मने किं वचनीयमस्ति ।
पुष्पाञ्जलिः को यतये प्रदेयः, कर्त्तव्यबुद्ध्यैव समर्पितोऽयम् ॥

श्रीपादपङ्कजपरागपवित्रगात्रा,
वाराणसी सह बुधैर्विविधैः प्रसन्ना ।
सम्पत्स्यते ननु कदा भगवत्कथात-
इत्यर्थ्यते प्रतिदिनं भवतो दयालोः ॥ ४ ॥

कार्तिक कृष्ण द्वितीया
संवत् १९९२ ।

वाराणसी-साधनपन्थाकार्यालयतः
सभ्यवर्गाणाम् ।

श्रीमद्दिग्विजय रामो विजयते ।



श्री लक्ष्मीन्द्रतीर्थरु (शीरूरु मठ) श्री सत्यध्यानतीर्थरु (उत्तरादि मठ) श्री विद्यासिन्धुतीर्थरु (सुब्रह्मण्य मठ)

4654

श्रीः
श्रीमद्दिग्विजयरामोविजयते ॥

# முன்னுரை.

---

"सुखमेव मेस्याद्दुःखं मनागपि माभूत्"

'ஸுகமே ஸர்வகாலத்திலும் நமக்கு இருக்கவேண்டும். துக்கம் எப்பொழுதும் வரக்கூடாது' என்று எல்லா ப்ராணிகளாலும் அபேக்ஷிக்கப்படும் துக்கமற்ற ஸுகம் மோக்ஷத்திலேயே கிடைக்கக்கூடியது. அந்த மோக்ஷத்திற்கு ஸ்ரீபரமாத்மாவின் ப்ரஸாதமே முக்ய காரணம். அந்த ப்ரஸாதத்திற்கு தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் தான் செய்துவரும் ஸினேகத்தைவிட பலமடங்கு அதிகமானதும், எவ்வளவு தடைகள் வந்தபோதிலும் தடுக்கப்படாததாயும், நிஷ்காமமானதாயு மிருக்கும் ஸினேக ரூபமான பக்தியே காரணம். அத்தகைய பக்தி உண்டாவதற்கு பரமாத்மாவின் ஸர்வஞ்ஞத்வம், ஸத்ய ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், ஜீவ ஜடாத்மக ப்ரபஞ்ச பின்னத்வம் முதலிய அநேக குணங்களின் அபரோக்ஷ ஞானம் காரணம். அத்தகைய அபரோக்ஷ ஞானம் வேதாதி ஶாஸ்த்ரங்களை ஶ்ரவணம் செய்து, நாநாவித தர்மதங்களைக் கேழ்ப்பதினால் உண்டாயிருக்கும் ஸம்ஶயங்களை ப்ரஹ்மமீமாம்ஸா ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் யுக்திகளினால் போக்கடித்துக்கொண்டு, வேதங்களினால் அந்த தத்வங்களின் நிச்சய ஞானத்தை யடைந்தபிறகு, அச்சாஸ்த்ரங்களினால் நிர்ணயிக்கப்பட்ட பகவானிட குணங்களின் த்யானத்தினாலுண்டாகிறது. அத்தகைய த்யானத்திற்கு காரணமான ஶாஸ்த்ர ஶ்ரவணாதிகள்—ப்ராஹ்மணாதிவர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள் இவைகளுக்கு வேதங்களினால் விஹிதமான ஸ்நான ஸந்த்யா வேதாத்யயன யஞ்ஞ ஜப தேவதார்ச்சன கங்காதி தீர்த்த ஸ்நானம் முதலியவைகளைச்செய்து, அவைகளால் அந்த:கரணசுத்தியைச் சம்பாதித்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு உண்டாகிறதென்று வேதம், ஸூத்ரம், கீதை இவைகளில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படியிருந்தபோதிலும்—கௌடபாதாசார்யர், சங்கராசார்யர் முதலிய அத்வைதிகள்—வேதம், ஸூத்ரம் கீதை இவைகளுக்கு வேறு அர்த்தங்களைக் கல்பித்து, ப்ராஹ்மணாதிவர்ணம் முதலிய ஜகத்து மித்யை, (பொய்), ஜீவன் ப்ரஹ்மமே, ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களுடன் கூடினதல்ல. ப்ரஹ்மம் (பௌத்தர்களின் சூன்யத்தைப்போலவும், விஞ்ஞானத்தைப்போலவும்) நிர்விசேஷமானது (ஸகலதர்ம ரஹிதமானது). வேதம் அப்ரமாணமென்று சொல்லும் பௌத்த மதத்திற்கே அத்வைதமதமென்று பெயரிட்டு, வைதிகமதத்தைப்போல் தோன்றச்செய்து, ஸஜ்ஜனர்களுக்கு ப்ரமையுண்டாக்கி அதோகதிக்கு அழைத்துச் சென்றுக்கொண்டிருக்க—**'मथ्वो वो नाम मारुतं यजत्राः'** (ऋ.) இது முதலிய வேதங்களினால் வாயு பகவானின் அவதாரமென்று ப்ரசித்தரான ஸ்ரீமான் மத்வாசார்யர், மற்றும்

ஸ்ரீபத்மனாபதீர்த்தர், ஸ்ரீமத் ஜயதீர்த்தர், ஸ்ரீ வ்யாஸராஜர், ஸ்ரீ வாதிராஜ தீர்த்தர், விஜயீந்த்ர தீர்த்தர், ராகவேந்திர தீர்த்தர், ஸ்ரீமத் வித்யாதீஸதீர்த்தர், ஸ்ரீ ஸத்ய நாததீர்த்தர், பாண்டுரங்கி, ஆனந்தாசார்யர், கேசவாசார்யர், யாதவாசார்யர், வ்யாஸராமாசார்யர் முதலிய மஹான்கள் அநேக நூல்களை இயற்றி அவைகளால் அந்த அத்வைதமதத்தைக்கண்டித்து, த்வைதமதத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். அந்த நூல்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் மிகவும் ப்ரௌடமாகவும் விஷயங்கள் ஆங்காங்கு விக்ஷிப்தமாயுள்ளதாயும் இருக்கின்றன. அந்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் ஸஜ்ஜனர்களுக்கு ஸுலபமாய்த் தெரிவதற்காக, ஸ்ரீமதுத்தராதிமடாதிபதிகளான ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த ஸ்ரீபாதங்களவர்கள் எளிய ஸம்ஸ்க்ருதபாஷையில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள எல்லாவிஷயங்களையும் ஒன்றுகூட்டி அநேக நூல்களை இயற்றியிருப்பதேயன்றி, இக்காலத்தில் நடக்கும் கோர்ட் விசாரணை ரீதியில் வாதிதாவாமனு, பிரதிவாதி ஸ்டேட்மெண்டு, இஷ்யூ, வாதிப்ரதிவாதிகளின் விசாரணை, க்ராஸ், ரீக்ராஸ், வாதிப்ரதிவாதி வக்கீல்களின் ஆர்க்யுமெண்ட், ஜட்ஜ்மெண்ட் இவைகளுடன் கூடிய ஓர் நூலையும் இயற்றி அத்வைதமதத்தைக் கண்டித்திருக்கிறார்.

அந்த நூலில் முதல் பாகத்தில்—தாவா ரெஸ்ஜுடிகேடா (மின் விசாரம் நடந்திருப்பதால் மறுபடியும் கோர்ட்டாருக்கு விசாரிக்க அதிகாரமில்லாதது,) அல்லவென்றும், இரண்டாவது பாகத்தில்-ப்ராஹ்மணவர்ணம் முதலிய ஜகத்து ஸத்யமானது, மித்யை (முக்காலத்திலுமில்லாதது) அல்லவென்றும்; மூன்றாவது பாகத்தில்—ப்ரஹ்மம் ஜீவனைவிட வேறானது (பின்னம்) ஜீவரூபமல்ல என்றும்; நாலாவது பாகத்தில்—ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி அநேக குணங்களினால் பூர்ணமானது, நிர்குணமானதல்ல வென்றும்; ஐந்தாவது பாகத்தில்—அத்வைதமதம் பௌத்த மதமே என்றும் பிரதிவாதிகளின் ஆதாரங்களினாலேயே தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய நூலை இக்காலத்தில் எல்லா லௌகிக வைதிக ஸஜ்ஜனர்களுக்கும் ஸுலபமாய்த் தெரிவதற்காக கர்னாடக, ஆந்த்ர, திராவிட, மகாராஷ்ட்ர, ஹிந்தி முதலிய பாஷைகளில் மொழிபெயர்ப்பித்து, ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையோரால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் ஶாஸ்த்ர விசாரரூபமானதால் கடினமாயிருப்பதின் பொருட்டு "**वक्तव्यं ब्रह्म गुरुणा चतुर्वारमथापिवा**" வேதார்த்தங்களை உபாத்யாயர்கள் பலதடவைகள் சொல்லவேண்டும் என்கிற ஆசார்யரின் உத்திரவின்படிக்கு ஸஜ்ஜனர்களுக்கு ஸுலபமாய்த்தெரிவதற்காக அநேக இடங்களில் அநேக தடவைகள் அநேகப்பிரகாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய க்ரந்தத்தை ஸஜ்ஜனர்கள் நன்றாய் விசாரம் செய்து, ப்ரஹ்மத்தின் ஸர்வஞ்ஞத்வம், ஸத்யமானஜகத் ஸ்ரஷ்ட்ருத்வம், ஜீவஜடாத்மக ப்ரபஞ்ச விலக்ஷணத்வம் முதலிய மஹாமாஹாத்ம்யங்களை அறிந்துகொண்டு, பரமாத்மாவின் அனுக்ரஹத்தினால் ப்ரக்ருதி பந்தத்தினின்றும் முக்தர்களாய் நித்ய ஸுகானுபவ ரூபமோக்ஷத்தை யடையத் தகுந்தது.

பத்மஸரோவரம்,
ஸ்ரீ பாவஸம்.
சித்திரைமீ 1உ

கௌரவ கார்யதர்சி,
ஸ்ரீமன் மத்வசித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபா.

ஸ்ரீ

## ஸம்பமணீபுரம் ஹைகோர்ட்

28-வது கலியுகம், சாலிவாஹனசகம் 1849-ல்

சீப் ஜஸ்டிஸ்

S. தர்மராஜ் H. B. அவர்கள் சமுகத்தில் நடந்த

வேதாந்த விசாரணை

# ஸிவில் ஸூட்

## O. S. No. 564 of 1921.

4-வது இஷ்யூவின்

ஜட்ஜ்மெண்ட்.

| வாதி | பிரதிவாதி. |
|---|---|
| விஷ்ணுதாஸாசார்யர். | கங்காதரசாஸ்திரிகள். |
| வாதி வக்கீல். | பிரதிவாதி வக்கீல். |
| மாதவதாஸ். P. B. D. | ஹரிஹரசர்மா. P. B. S. |

வாதியின் தாவா என்னவென்றால்:—

(1) வாதியினால் வைதிக ஆஸ்திகர்களான எல்லா ஜனங்களிட பிரதிநிதியாக கோர்ட்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவா செய்யப்பட்டது.

(2) மேற் சொல்லப்பட்ட கங்காதரஸாஸ்திரிகளே அத்வைதிகளெல்லோரிட பிரதிநிதியாக கோர்ட்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவாவில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

(3) வாதிகள் ஆஸ்திகமான வைதிகமதத்தில்சேர்ந்தவர்கள்.

(4) இவ்வைதிகமத தத்வங்கள்:—

(a) ப்ராஹ்மண்யாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத் யாச்ரமங்கள், யஞ்ஞாதிக்ரியைகள், தேவதைகள், வேதங்கள், கங்காதி தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி பரலோகங்கள், இப்பூலோகம் முதலான எல்லா ஜகத்தும் ஸத்யமானவைகள்.

(b) விஷ்ணு ஸர்வோத்தமன், ஸர்வஞ்ஞன், ஸர்வகர்த்தா, அனந்த கல்யாண குணபூர்ணன்.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் வேறானவன் (பின்னன்).

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர்வோத்தமன், ஸர்வகர்த்தா" என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

(5) இத் தத்வங்கள்—வேதங்கள், வேதார்த்த நிர்ணயகமான ப்ரஹ்மஸூத்ரங்கள், பகவத்கீதை இவைகளில் சொல்லப்பட்டிருப்பதால் வைதிக ஜனங்களெல்லோரும் அத்தத்வங்களை அங்கீகரிப்பதற்கு உடன்பட்டிருக்கிறார்கள்.

(6) இவ்வைதிக மதம் அனாதிகாலமாக வந்துக்கொண்டிருக்கிறது.

(7) தத்வமிப்படியிருக்க—கௌடபாதாசார்யரும், அவரிட பரமசிஷ்யரான சங்கராசார்யரும், வேதம், ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை இவைகளுக்கு வேறு அர்த்தத்தைக்கல்பித்து, விஞ்ஞானவாதிகளான பௌத்தரிட மதத்தையும், ஶூன்யவாதிகளான பௌத்தரிட மதத்தையும் வைதிகமதமாகத் தோன்றும் படிக்குச்செய்து, ஜனங்களை மோசம் செய்து, வைதிக தத்வங்களுக்கு விருத்தமான தத்வங்களை போதித்துவருகிறார்கள்.

இப்படிச் செய்கிறது புராதன சிக்ஷா நியமம் (பகவத்கீதா) 16 வது ஸெக்ஷனில் (அத்தியாயத்தில்) சொல்லப்பட்ட சிக்ஷைக்குத் தகுந்த குற்றமாயிருக்கிறது.

(8) பிரதிவாதிகள் போதிப்பதென்னவென்றால்:—

(a) விஷ்ணு (பரப்ரஹ்மம்) ஸர்வோத்தமனல்ல, ஸர்வஞ்ஞனல்ல, ஸர்வ கர்த்தா அல்ல, அனந்த கல்யாண குண பூர்ணனல்ல, அவன் ஸகல தர்மாஹிதன்.

(b) 4-வது a பாராவில் சொல்லிய ப்ராஹ்மணவர்ணதி எல்லா ஜகத்தும் மித்யை என்றால் மூன்று காலங்களிலும் இல்லாதது.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னனல்ல.

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர்வோத்தமன்" என்கிற ஞானம் மோக்ஷ ஸாதனமல்ல. "அஹம் ப்ரஹ்மாஸ்மி (நானே ப்ரஹ்மம்)" என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

(9) பிரதிவாதி—வேதம் கீதை ஸூத்ரம் இவைகளில் கூறப்பட்டுள்ள தத்வங்களை அதற்கு விருத்தமாக தெரிந்துக்கொண்டு, "நஷ்டாத்மானோல்பபுத்தய:; ப்ரபவந்த்யுக்ர கர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா:" (கீதை 16-9)ல் சொல்லியவாரு தாங்கள் அதோகதியை அடைவதல்லாமல் இதரஸஜ்ஜனர்களையும் ஆஸ்தீகமதத்தினின்றும் விடுவித்து, அவைதிக மதத்தை ஆய்ரயிக்கச் செய்து அதோகதியை யடைவிக்கிறார்கள்.

ஆகையால் கோர்ட்டார் ஸஜ்ஜனங்களின் நன்மைக்காக கீழ்க்கண்டவாரு தீர்மானம் செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

(a) பரப்ரஹ்மம் ஜீவனைக்காட்டிலும் வேறானது, ஸர்வோத்தமமானது, ப்ராஹ்மண்யாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், வேதம், யஞ்ஞம், தேவதைகள், கங்காதி தீர்த்தங்கள் முதலிய ஜகத்து நிஜமானவைகள், மித்யை அல்ல. இவைகளே வைதிக மதத்தின் தத்வங்கள்.

பிரதிவாதியால் சொல்லப்பட்ட "ப்ரஹ்மம் நிற்குணம், மற்றும் அது ஜீவனுடன் அபின்னமானது. ப்ராஹ்மணவர்ணாதி ஜகத்து பொய் (மித்யை)" என்கிற இவைகள் வைதிகமதத்தின் தத்வங்கள் அல்ல.

(b) வேதம், ப்ரஹ்மஸூத்ரம், கீதை இவைகளுக்கு விருத்தமான அர்த்தங்களைக் கல்பித்து "ஜகத்து மித்யை, ப்ரஹ்மம் நிற்குணம்" இது முதலிய பிரதிவாதிகளின் உபதேசம் ஶாஸ்த்ரங்களுக்கு விருத்தமானவைகள் என்று தீர்மானிக்கவேணும்.

(c) மற்றும் கோர்ட்டாருக்கு ஏதேது யுக்தமென்று தோன்றுகிறதோ அதுகளையும் தீர்மானிக்கக் கோருகிறோம்.

(10) கோர்ட்டார் இவ்விதமாகச் செய்யாவிடில் ஜனங்கள் மிகவும் கஷ்டங்களை அடைவார்கள்.

இவ்விதமாக வாதியினால் 25-3-1921ல் மாதவதாஸ் வக்கீல் இவர்கள் முகாந்தரமாய் தாவா தாகல் செய்யப்பட்டு, ப்ரமாண பத்திரிகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிறகு ப்ரதிவாதிக்கு கோர்ட்டாரால் ஸம்மன் ஜாரி செய்யப் பட்டு, ப்ரதிவாதியால் 30-3-1921ல் கீழ்க்கண்டவாறு ஸ்டேட் மெண்டும் தாக்கல் செய்யப்பட்டது.

---

## பிரதிவாதி ஸ்டேட்மெண்டு.

---

(1) இந்த வாதியினால் கொடுக்கப்பட்ட தாவாவில் சொல்லப் பட்ட விஷயங்கள் பொய்.

(2) வாதிமனு 4-வது பாராவில் சொல்லிய தத்வங்கள் வேதங்களிலும், ஸூத்ரங்களிலும், கீதையிலும் சொல்லப்பட் டிருப்பினும், வேதங்களுக்காவது, கீதைக்காவது, ப்ரஹ்மஸூத் ரங்களுக்காவது அத்தத்வங்களை அறிவிப்பதில் தாத்பர்யமில்லை. ஆகையால் அத்தத்வங்கள் வைதிகங்களல்ல, மற்றும் பொய்யா னவை.

(3) வாதியின்மதம் அனாதிகாலத்தினின்றும் வருவதல்ல.

(4) வாதி 4-வது பாராவில் சொல்லிய விஷயங்கள் வெரும் பொய்.

(a) எங்களிட அத்வைத மதமே வைதிகமதம்.

(b) அத்வைதமதம் பௌத்தமதமென்று சொல்லுவது சரி யல்ல.

(c) நாங்கள் சொல்லுவதே வேதார்த்தம்.

(5) அத்வைதமத தத்வங்கள்:—

(a) ப்ரஹ்மத்தை விட வேறான ப்ராஹ்மண்யாதி வர்ணங் கள், தேவதைகள், ஸந்தியாவந்தனாதி கர்மங்கள் முதலான ஜகத்து ஸ்வப்னத்தைப் போல் பொய்.

(b) ப்ரஹ்மம் நிர்குணம் (ஸகலதர்மாஹிதம்)

(c) ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே.

(d) 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

(6) இவ்விஷயம் முதலே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், மருபடியும் விசாரிப்பதற்கு கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை (Res-judicata.)

(7) வாதியினுல் 9-வது பாராவில் சொல்லப்பட்ட விஷயங்கள் பொய். எங்களிட அத்வைத மதத்தை ஆஸ்ரயித்து நாங்களும் நஷ்டப்படவில்லை. மற்றும், இதை ஆஸ்ரயித்து வேறுயாரும் நஷ்டமடையவில்லை.

இக்காரணங்களினுல் கோர்ட்டார் வாதிக்கு எவ்வித அனுகூலத்தையும் செய்யாமல் அவரிட மனுவை தள்ளிவிட வேணுமாக ப்ரார்த்திக்கிறோம்.

பிரதிவாதி இவ்விதமான ஸ்டேட்மெண்டை வக்கீல் ஹரிஹரசர்மா மூலமாக தாகல் செய்வித்து, ப்ரமாணமும் செய்திருக்கிறார். அதற்குமேல் கோர்ட்டார் வாதி பிரதிவாதி வக்கீல்களின் முன்னிலையில் கீழ்கண்ட இஷ்யூகளை எடுத்திருக்கிறார்கள்.

---

## இஷ்யூ ISSUE.

---

(1) ரெஸ்ஜுடிகேடா (Resjudicata) ஆகிறதா இல்லையா? [இவ் விஷயம் முன் தீர்மானிக்கப்பட்டிருப்பதினுல் மறுபடியும் விசாரணை செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா இல்லையா?]

(2) (a) ப்ராஹ்மணயார்தி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஸ்ரமங்கள் முதலிய பிரபஞ்சம் நிஜமா, பொய்யா?

(b) ஸ்வப்னம் ஸத்யமா, மித்யையா?

(3) பரப்ரஹ்மம் ஜீவனைவிட வேறானதா, அல்லவா?

(4) பரப்ரஹ்மம்-ஸர்வஞ்ஞத்வம், ஸர்வகர்த்ருத்வம் முதலான ஸகல கல்யாண குணபூர்ணமா அல்லவா?

(5) (a) அத்வைத மதத்திற்கும் பௌத்தமதத்திற்கும் பேதமுண்டா இல்லையா?

(b) அத்வைதமதம் வைதிகமதமா அல்லவா?

---

முதல் இஷ்யூ (ரெஸ்ஜுடிகேடா) விசாரணை 3-7-1921ல் வாதி பிரதிவாதி வக்கீல்களின் ஆர்க்யுமெண்ட் நடந்து, **இந்த தாவா ரேஸ்ஜுடிகேடா அல்ல,** என்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

---

(a) ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள் முதலிய எல்லா ஜகத்து ஸத்யமா (நிஜமானதா) அல்லது மித்யையா (பொய்யா)?

(b) ஸ்வப்னத்தில் காணப்படும் பதார்த்தங்கள் நிஜமானவைகளா, பொய்யானவைகளா என்கிற இரண்டாவது இஷ்யூ விசாரணை செய்து—

ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், யஞ்ஞாதி க்ரியைகள், தேவதைகள், வேதம், கங்காதி தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி லோகங்கள், இந்த லோகம் முதலிய **எல்லா ஜகத்தும் ஸத்யமானது** (நிஜமானது). **மித்யை அல்ல** (பொய் = முக்காலத்திலுமில்லாதது அல்ல,) மற்றும் ஸ்வாப்ன பதார்த்தங்களும் நிஜமானவைகள் பொய்யல்ல என்று கோர்ட்டாரால் 28-8-1928ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

---

பரப்ரஹ்மம் ஜீவனைவிட பின்னமா? அல்லது அபின்னமா? (ஜீவப்ரஹ்மங்களுக்கு பேதமா அல்லது ஐக்கியமா) என்கிற மூன்றாவது இஷ்யூவை விசாரணை செய்து **"ப்ரஹ்மம் ஜீவனைக் காட்டிலும் வேறானது, ஜீவப்ரஹ்மங்களுக்கு பேதமுண்டு ஐக்யமில்லை"**

என்று 20-10-1928-ல் கோர்டாரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பரப்ரஹ்மம் (பகவான் விஷ்ணு)—ஸர்வஜ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம், ஸ்வதந்த்ரத்வம், ஸம்ஹாரகத்வம், ஞானதாத்ருத்வம், ஸர்வோத்தமத்வம், விசித்ர சக்திமத்வம், சந்த்ரஸூர்யாத்யாதாரத்வம், ஸர்வப்ரகாஶகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸாக்ஷாத் த்ரஷ்ட்ருத்வம் இவைகளே முதலிய அநேக கல்யாண குண (தர்ம) கணங்களுடன் கூடினதா? அல்லது ஸகலதர்ம (குண) ரஹிதமா? என்கிற நாலாவது இஷ்யுவை விசாரணை செய்து, [வாதியினால்—பரப்ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வாதி குணங்களுடன் கூடினதென்று ஸாதிப்பதர்க்காக, வேத ஸூத்ர கீதாரூபமான ப்ரஸ்தானத்ரயத்திலிருக்கும் வாக்யங்களை ஆதாரங்களாக தாகல் செய்யப்பட்டிருக்கிறது, அந்த ப்ரஸ்தானத்ரயமும் ப்ரமாணமென்று ப்ரதிவாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள், ஆகையால்—ப்ரஸ்தானத்ரயத்திலிருக்கும் வாக்யங்களினால் சித்தமாகும் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்கள் வாதி ப்ரதிவாதிகளான இருவராலும் அங்கீகரிக்கப்படுவது யுக்தமாயிருக்கிறது] ஆகையால், ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வாதி குணபூர்ணம், ஸகல தர்ம ரஹிதமல்ல என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

---

## காரணங்கள்.

---

1. வாதியினால் சொல்லப்பட்ட "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஞானமயம் தப:। தஸ்மா தேதத் ப்ரஹ்ம நாமரூப மன்னம் ச ஜாயதே" என்கிற முண்டக வாக்யம்—ப்ரஹ்மத்தின் ஸாமான்ய ஸர்வஜ்ஞத்வம், விசேஷ ஸர்வஜ்ஞத்வம் (ஸாமான்யமாக எல்லாவற்றையும் அறியும் தன்மை, விசேஷமாக எல்லாவற்றையும் அறியும் தன்மை) சதுர்முக காரணத்வம், நாமரூபாத்மக ஸகலப்ரபஞ்ச காரணத்வம் இவைகளைச் சொல்லுகிறது. சங்கராசார்யரும் இந்த ஶ்ருதிக்கு இப்படியே அர்த்தம்

செய்திருக்கிறார். ஆகையால் "ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்களுடன் கூடினது" என்று கோர்டார் நிர்ணயிக்கிறார்கள்.

2. "பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபலக்ரியாச" (6-9.) "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தேவதானாம் பரமம் ச தைவதம் । பதிம் பதீனாம் பரமம் பரஸ்தாத் விதேமதேவம் புவனேஶ மீட்யம்" (6-7.) "ஏகோ தேவஃ ஸர்வபூதேஷு கூடஃ ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா । கர்மாத்யக்ஷஃ ஸர்வபூதாதிவாஸஃ ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச" (6-11.) "நித்யோ நித்யானாம் சேதனஶ்சேதனானாம் ஏகோ பஹூனாம் யோவிததாதி காமான் । ஏகோ வஶீ நிஷ்க்ரியாணாம் பஹூனாம் ஏகம் பீஜம் பஹுதாயஃ கரோதி । தமாத்மஸ்தம் யேனுபஶ்யந்தி தீரா: தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்" (6-12.) இவை முதலிய ஶ்வேதாஶ்வதரோபனிஷத் வாக்யங்கள் பரப்ரஹ்மம் ஞானபலக்ரியாரூபஶக்தியுடன் கூடினது, மற்றும் அந்த தர்மங்கள் ஸ்வாபாவிகமானவைகள், பரப்ரஹ்மம் ஜகத்துக்குக் காரணம், ஜகத்துக்கு ஏதேது காரணங்களுண்டோ அவைகளுக் கெல்லாம் காரணம், ஜகத்துக்கதிபதி, ஜகத்தை நியமிப்பவர்களை நியமிப்பது (ஈஶ்வரன்), உலகத்தில் எத்தனை தேவதைகளுளரோ அவ்வெல்லா தேவதைகளுக்கும் தேவதை (அவ்வெல்லோராலும் பூஜ்யம்) அல்லது அவ்வெல்லா தேவதைகளுக்கும் தேவத்வத்தைக் கொடுப்பது, ஜகத்துக்கு எந்த ரக்ஷகர்களுளரோ அவ்வெல்லாருக்கும் உத்தமமான ரக்ஷகம் (உத்தமமாய் பரிபாலிப்பது), எல்லா ஜகத்துக்கும் நியாமகம், ஸ்துத்யம், அந்த ப்ரஹ்மத்தின் ஞானத்தை நாம் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். பரப்ரஹ்மம் *ஏக: = முக்யமானது, அல்லது ஜீவஜடாத்மக ப்ரபஞ்சத்தைவிட பின்னம், தேவ: = க்ரீடா காந்தி இவை முதலிய குணங்களுடன் கூடினது, எல்லா ப்ராணிகளிலு

* 'ஏக: முக்யான்யகேவலா:' இத்யாதி ப்ரமாணங்களின்படிக்கு ஏகஶப்தத்திற்கு—ப்ரதானம், வேறு, அஸஹாயம் என்கிற இது முதலிய அர்த்தங்களாகின்றன.

மிருந்து இதரர்களுக்கு காணப்படாதது, கேவலம் எல்லா ப்ராணிகள் மாத்ரமேயல்ல, எல்லா ஜகத்திலும் வ்யாப்தமாயிருப்பது, எல்லா ப்ராணிகளிலிருந்து நியமிப்பது, (ஸர்வநியாமகம்), அந்தந்த ஜனங்களால் செய்யப்படும் அநேக கர்மங்களுக்கு பலங்களைக் கொடுப்பது, ஸர்வ ப்ராணிகளுக் காஸ்ரயமானது, ஆதாரமானது, ஸாக்ஷி = எல்லா பதார்த்தங்களையும் ப்ரத்யக்ஷமாக பார்க்கக் கூடியது, சேதா = ஞானமுள்ளது, ஸத்வராஜஸ் தமோ குணரஹிதமானது, எல்லாவற்றிற்கும் ஸ்வாமீ, ஸர்வகர்த்தா, நித்ய பதார்த்தங்களுக்கு நித்தியத்வத்தைக் கொடுப்பது, அநேக ஜனங்களுக்கு அபேக்ஷிதமான பதார்த்தங்களை ஸ்ருஜித்துக் கொடுப்பது. யார் பரமாத்மா ஸர்வகர்த்ருத்வம், ஸர்வநியாமகத்வம் முதலிய பூர்வத்தில் சொல்லப்பட்டிருக்கும் குணங்களுடன் கூடினவனென்று தெரிந்துக் கொள்ளுகிறானோ, அவனுக்கு ஶாஸ்வத ஸுகரூபமான மோக்ஷமுண்டாகிறது. இதரேஷாம் = முன் சொல்லியதற்கு விருத்தமாக (பரமாத்மா நிர்குணன், நானே பரமாத்மா, பரமாத்மா எனக்கு நியாமகனல்ல என்று) யார் தெரிந்துக் கொள்ளுகிறார்களோ அவர்களுக்கு ஸுகமுண்டாகாததும் தவிர அதற்கு விருத்தமாக துக்கமேயுண்டாகிறது என்று இவ்விதமாக பரப்ரஹ்மத்தின் அனந்த குணங்களைச் சொல்லுகின்றன. மற்றும் அந்த குணங்கள் முமுக்ஷுக்களால் அறியப்படவேண்டியவைகள் என்று சொல்லியிருப்பதினால் அவைகள் பொய்யல்ல, ஸத்யமானவைகளே. இவ்வேத வாக்யங்களை ப்ரதிவாதிகள் ப்ரமாணமென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் பரமாத்மா ஜகன்னியாமகத்வாத்யனந்த குணங்களுடன் கூடியவனென்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

3. "உபே அஸ்மின் த்யாவா ப்ருதிவீ அந்தரேவஸமாஹிதே, உபாவக்னிஶ்ச வாயுஶ்ச ஸூர்யாசந்த்ரமஸாவுபௌ, வித்யுன்னக்ஷத்ராணி" என்கிற 8-13 வது சாந்தோக்ய ஶ்ருதியும்—பரமாத்மா த்யாவாப்ருதிவீ, சந்த்ரஸூர்யர்கள் முதலியவைகளுக்கு ஆஶ்ரயனென்று சொல்லுகிறதினால் பரமாத்மனுக்கு சந்த்ரஸூர்யாத்யாதாரத்வ மென்கிற குணமுண்

டென்று வாதி சொல்லுவதை கோர்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

4. "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" (கீதா. 15-16.) "ஸர்வே வேதா யத்பதமாமனந்தி" (கா. 1-2-15.) இத்யாதி ப்ரமாணங்களினால் பரப்ரஹ்மம் அனந்த வேதங்களினால் ப்ரதிபாதிக்கப்படுகிறதென்று சித்திக்கிறது. ஒவ்வொரு பதத்தினாலும் பரப்ரஹ்மத்தின் ஒவ்வொரு குணம் தெரிவிக்கப்படுகிறதினால் வேதத்திலுள்ள அநந்தபதங்களினால் ப்ரஹ்மம் ப்ரதிபாத்யமாயிருப்பதினால் பரப்ரஹ்மத்தின் அநந்தகுணங்கள் சித்தமாகிறதென்று வாதியினால் சொல்லப்படுவதை கோர்டார் அங்கீகரிக்கிறார்கள்.

5. வாதியினால் தனக்கு ஆதாரமாக தாக்கல் செய்யப்பட்ட 'அதாதோ ப்ரஹ்மஜிஞ்ஞாஸா' 'ஜன்மாத்யஸ்ய யத:' 'ஶாஸ்த்ர யோனித்வாத்' 'அந்தஸ்தத்தர்மோபதேஶாத்' 'ஆகாஶஸ்தல்லிங்காத்' இவைகளே முதலான வேதார்த்த நிர்ணயகமான ப்ரஹ்மஸூத்ரங்கள்—ப்ரஹ்மத்தின் ப்ருஹத்வம், ஜகஜ்ஜன்மாதிகாரணத்வம், ஶாஸ்த்ரயோனித்வம், (ஶாஸ்த்ரஜன்யஞான விஷயத்வம் அல்லது ஶாஸ்த்ரகர்த்ருத்வம்) ஈஶித்ருத்வம், பூதகாரணத்வம் இவைகளே முதலிய அநேக தர்மங்களைச் சொல்லுகின்றன. ஸாக்ஷாத்தாகவும், பரம்பரையாகவும் 564 ஸூத்ரங்களும் பரமாத்மாவின் தர்ம (குண) ங்களை ப்ரதிபாதிக்கின்றன. ஆகையால் (வேதார்த்த நிர்ணயகங்களான ப்ரஹ்ம ஸூத்ரங்கள் பரப்ரஹ்மத்தினிடத்தில் தர்மங்களை ப்ரதிபாதித்துக்கொண்டிருப்பதால்) நிர்ணேயமான வேதமும் ப்ரஹ்மத்தின் குணங்களை ப்ரதிபாதித்துக் கொண்டிருக்கிறதென்று சித்திக்கிறது. நிர்ணயகமான ஸூத்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட தர்மங்கள் மித்யை = பொய் யென்கிறது பொருந்துகிறதில்லாததினால் ப்ரஹ்மஸூத்ரங்களினால் ப்ரஹ்மம் ஜகத்காரணத்வாத்யனேக ஸத்யமான தர்மங்களுடன் கூடினதென்று சித்தமாகிறதென்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

6. வாதியினால் தாகல் செய்யப்பட்ட 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஞ்ஞான மபோஹனம்

ச' 'ஈஶ்வரஸ்ஸர்வபூதானும்' 'யோலோகத்ரய மாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:' சாதுர் வர்ண்யம் மயாஸ்ருஷ்டம்' 'புஷ்ணுமி சோஷதீஸ்ஸர்வா:' 'பரம் ப்ரஹ்ம பரம்தாம பவித்ரம் பரமம் பவான்' 'புருஷம் ஶாஶ்வதம் திவ்யமாதி தேவமஜம் விபும்' 'ஆஹுஸ்த்வாம் ருஷயஸ்ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ்ததா। அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே। ஸர்வமேதத்ருதம் மன்யே யன்மாம் வதஸி கேஶவ' இவைகளே முதலான கீதாவாக்யங்களினுல் பரப்ரஹ்மத்தில் ஸர்வநியாமகத்வம், ஞானுதிதாத்ருத்வம், லோகத்ரயரக்ஷணகர்த்ருத்வம், ப்ராஹ்மணவர்ணுதி ஸ்ருஷ்டிகர்த்ருத்வம், ஓஷதி புஷ்டிகாரகத்வம், பவித்ரத்வம், தேஜோரூபத்வம் இவை முதலிய அநேக தர்மங்களிருக்கின்றன வென்றும், அவ்வெல்லா தர்மங்களும் ஸத்யமானவைகளென்றும் சொல்லிக் கொண்டிருப்பதினுல் பரப்ரஹ்மம் ஸர்வநியாமகத்வாதி தர்மங்களுடன் கூடினதென்றும், அந்த தர்மங்கள் ஸத்யமானவைகளென்றும் கோர்டார் தீர்மானிக்கிருர்கள்.

7. 'அஸ்தூலமனணு........ஏதஸ்ய வாக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:' இத்யாதி ப்ருஹதாரண்யக வாக்யங்களினுலும், அவ் வாக்யங்களினுல் ஸூசிதமாகும்—'ஜகத்வ்யவஸ்தா ப்ரஶாஸ்த்ருபூர்விகா வ்யவஸ்தாத்வாத்' இது முதலிய அனுமானங்களினுலும் ஈஶ்வரனின் ஸகல ப்ரஶாஸகத்வம், நியந்த்ருத்வம், ஜகத்தாரக ப்ரயத்னவத்வம் முதலிய அநேக தர்மங்கள் சித்தமாகின்றன. சங்கராசார்யரும் 'அஸ்தூலமனணு' இது முதலிய ப்ருஹதாரண்யக வாக்யத்தின் பாஷ்யத்தில் இந்த அனுமானத்தினுல் ப்ரஶாஸ்த்ருத்வாதி குணங்கள் சித்திக்கின்றன வென்று ஸ்வதஃ சொல்லியிருக்கிருர். ஆகையால் பரப்ரஹ்மம் ப்ரஶாஸகத்வாதி தர்மங்களுடன் கூடினதென்று சித்திக்கிறதென்று வாதி சொல்லும் விஷயத்தை கோர்டார் ஒப்புக் கொள்ளுகிருர்கள்.

8. 'அநேக பாஹூதரவக்த்ர நேத்ரம் பஶ்யாமி த்வாம் ஸர்வதோனந்த ரூபம்। நாந்தம் ந மத்யம் ந புனஸ்தவாதிம்

பஶ்யாமி விஶ்வேஶ்வர விஶ்வரூபம் । பஶ்யாமி........தீப்தான லார்க்க த்யுதிமப்ரமேயம்' (கீதா 12-16) இவைகள் முதலிய கீதா ஶ்லோகங்கள் 'யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம்' இத்யாதி ஶ்ருதிகள், இதுகளினால் சித்தமாகும் அர்ஜுனாதி களின் ப்ரத்யக்ஷங்களினாலும் ஈஶ்வரனிடத்தில் ஸ்வர்ண வர்ணம், ஜகத்கர்த்ருத்வம் இவைகள் முதலிய தர்மங்கள் சித்த மாகின்றன. இதினால் ப்ரத்யக்ஷ்யமும் ஈஶ்வரனிடத்தில் தர் மங்களிருக்கின்றன என்கிற விஷயத்தில் ப்ரமாணமாகிற தென்று வாதி சொல்லும் விஷயத்தை கோர்டார் அங்கீ கரிக்கிறார்கள்.

---

## பரப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமல்ல என்பதற்கு காரணங்கள்.

---

பரப்ரஹ்மம் நிர்விசேஷம் (ஸகல தர்மாஹிதம்) என்கிற விஷயத்தில் ப்ரதிவாதியினால் தாக்கல் செய்யப்பட்ட ப்ரமா ணங்கள்—'யஸ்ஸர்வஞ்ஞ:' இத்யாதி ப்ரமாணங்களினால் சித்த மான ப்ரஹ்மத்தின் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை நிஷேதிப்ப தில்லை, அவ்வளவே யன்றி அதற்கு விருத்தமாக நியாமகத்வ தாரகத்வாத்யனேக தர்மங்களைச் சொல்லிக்கொண்டு மிருக்கின் றன. ஆகையால் ப்ரதிவாதியினால் தாகல் செய்யப்பட்ட ப்ர மாணங்களினாலேயே ப்ரஹ்மம் நிர்விசேஷம் (ஸகலதார்ம ரஹிதம்) என்று சித்திக்காததேயன்றி அதர்க்கு விருத்தமாக ஶாஸகத்வாதி தர்மங்களுடன் கூடினதென்று சித்திக்கிறதென்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

அது எப்படி எனின் :—

1. 'கேவலோ நிர்குணஶ்ச' என்கிற ஶ்ருதி, 'நிர்குணம் குணபோக்த்ருச' என்கிற கீதாவாக்யம் இவைகளிலிருக்கும் 'நிர்குண' மென்கிற பதம் ப்ரஹ்மத்தின் குண (தர்ம)

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

ராஹித்யத்தை ப்ரதிபாதிக்கிறது என்று ப்ரதிவாதி சொல்லுவது அயுக்தமாகிறது. ஏனெனில்:—'குண: ஸத்வரஜஸ்தமாம்ஸி தை: ரஹிதம்' என்கிற வாக்யத்தினால் நிர்குணமென்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ்தமோகுணங்களினால் ரஹிதமென்று சங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறார். ஆகையால் அச்சுருதி, அக்கீதாவாக்யம் இவைகளிலிருக்கும் 'நிர்குண'மென்கிற பதத்தினால் பூஸ்வர்க்காதி லோகங்களிலிருக்கும் எல்லாப்ராணிகளும் எப்படி ஸத்வரஜஸ்தமோகுணங்களுடன் கூடினவைகளோ (அதினால் ரஹிதமானவர்கள் யாருமில்லையோ) அப்படி பரமாத்மா ஸத்வரஜஸ்தமோ குணங்களுடன் கூடினவனல்ல என்று ஸித்தமாகிறது. ஸகலதர்மாரஹிதமென்று ஸித்திக்காமலிருப்பதே யொழிய அதற்கு விருத்தமாக 'ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா । கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச' என்கிற வாக்கியத்தினாலேயே பரப்ரஹ்மம், ஏக: = முக்யமானது, ஸர்வப்ராணிகளினிடத்திலுமிருப்பது, கேவலம் ஸர்வப்ராணிகளினிடத்திலிருப்பது மாத்ரமேயல்ல, ஸர்வத்ரவ்யாப்தமானது, ஸர்வப்ராணிகளின் நியாமகமானது, அந்தந்த ஜனங்களினால் செய்யப்படும் கர்மங்களுக்கு பலன்களைக்கொடுப்பது, ஸர்வபூதங்களுக்கு ஆஶ்ரயம், ஸாக்ஷாத் த்ரஷ்டா இத்யாதி பரப்ரஹ்மத்தின் அநேக தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்றும் 'கேவலோ நிர்குணஶ்ச' என்கிற வாக்யத்தின் பூர்வோத்தர வாக்யங்களினால் காரணத்வம், பாலகத்வம் இவை முதலிய அநேக தர்மங்கள் ஸித்திக்கின்றன. இவ்வநேக ப்ரமாணங்களுக்கு விருத்தமாக 'நிர்குண:' என்கிற ஒரு பதம் ஸகலதர்மரஹிதமென்கிற அர்த்தத்தை போதிப்பதற்கு எப்படி யுக்தமாகும்? (யுக்தமாக மாட்டாது.)

"எல்லா தர்மங்களும் ஸத்வரஜஸ்தமோகுணகார்யமாயிருப்பதினால்—ப்ரஹ்மம் நிர்குணம் (ஸத்வரஜஸ்தமோகுணரஹிதம்) என்று சொன்ன மாத்ரத்தினால் அர்த்தாத் ஸர்வதர்மாரஹிதமென்று ஸித்தமாகிறது" என்று ப்ரதிவாதி சொல்லு

வது யுக்தமல்ல. சங்கராசார்யரே 11-5-வது * கீதாஸ்லோகவ்யாக்யானத்தில் பரமாத்மாவின் ரூபாதிகளுக்குக் கொடுத்திருக்கும் ‘திவ்யானி’ என்கிற விசேஷணத்திற்கு, அப்ராக்ருதானி என்று அர்த்தம் செய்திருப்பதினால் பரமாத்மாவின் ரூபங்கள், குணங்கள், ஆயுதங்கள் முதலிய வஸ்துக்கள் அப்ராக்ருதமானவைகள், ஸத்வரஜஸ்தமோகுணாத்மக ப்ரக்ருதி கார்யங்களல்ல என்று ஸித்திக்கிறபடியால் ஸர்வதர்மங்களும் ஸத்வரஜஸ்தமோகுண கார்யமென்பது அயுக்தம். (தங்களிட மதப்ரவர்த்தகரான ஆசார்யர்களின் மதத்திற்கே விருத்தமாகிறது.) மேற்சொல்லிய காரணங்களினால் ‘நிர்குண:’ என்கிற பதம் ப்ரஹ்மத்தின் ஸகலதர்ம ராஹித்யத்வத்தை போதிக்காதென்று கோர்டாரால் தீர்மானிக்கப்படுகிறது.

2. † ‘அஸ்தூலமனணு’ என்கிற ப்ருஹதாரண்யக ஶ்ருதி பரப்ரஹ்மத்தின் ஸ்தூலத்வாதி சில தர்மங்களை நிஷேதிக்கிறதென்று அங்கீகரித்தபோதிலும், ‘யஸ்ஸர்வஞ்ஞ:’ ‘ஸகாரணம் காரணாதிபோதிப:’ இவைகள் முதலிய ஶ்ருதிகளால் சொல்லப்பட்ட ஸர்வஞ்ஞத்வம், ஜகத்காரணத்வம் இவை முதலிய தர்மங்களை நிஷேதிக்காது. ஏனெனின்:—அந்த ஶ்ருதியில் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை நிஷேதிக்கும் பதமில்லாததேயல்லாமல் அவ்வாக்யத்திற்கு முன்னிருக்கும் ‡ ‘ஏதஸ்யவா அக்ஷரஸ்ய’ இது முதலிய அநேக வாக்யங்களினால் ப்ரஹ்

* பஶ்ய மே பார்த்தரூபாணி ஶதஶோத ஸஹஸ்ரஶ: | நாநாவிதாநி திவ்யானி நாநாவர்ணாக்ருதீனி ச ||

† அஸ்தூல மனண்வ ஹ்ரஸ்வ மதீர்க்க மலோஹித மஸ்னேஹ மச்சாய மதமோவாய்வனா காஶ மஸங்க மரஸ மகந்த மசக்ஷுஷ்க மஶ்ரோத்ரமவாகமனோதேஜஸ்க மப்ராண மமுக மமாத்ர மனந்தர மபாஹ்யம் நததஶ்னாதி கிஞ்சன நததஶ்னாதி கஶ்சன (ப்ருஹ. 3-8-8.)

‡ ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத: ஏதஸ்ய......த்யாவா ப்ருதிவ்யௌ......ஏதஸ்ய நிமேஷா முஹூர்தா:......திஷ்டந்தி ஏதஸ்ய......ப்ராச்யோந்யா நத்ய:......திஷ்டந்தி......தத்வா ஏததக்ஷரம் கார்கி......த்ரஷ்ட்ரு...... ஶ்ரோத்ரு .....மந்த்ரு.....விஞ்ஞாத்ரு (பிருஹ.)

மத்தின் த்ரஷ்ட்ருத்வம், ஸர்வஜ்ஞத்வம், நியந்த்ருத்வம், தார கத்வம், ஞானம், ப்ரயத்னம், ஶ்ரோத்ருத்வம், மந்த்ருத்வம், விஞ் ஞாத்ருத்வம், ஸர்வாதாரகத்வம், இவை முதலிய அநேக குணங் கள் சித்திக்கின்றன. சங்கராசார்யரும் மேற் சொல்லிய வாக் யங்களினுல் ப்ராஹ்மத்தின் நியந்த்ருத்வம் முதலிய அநேக தர் மங்கள் சித்திக்கின்றன வென்றே சொல்லியிருக்கிருர்.

"அணோரணீயான் மஹதோ மஹீயான் ஏஷமே ஆத்மாந் தர் ஹ்ருதயேணீயான் வ்ரீஹேர்வா யவாத்வா ஸர்ஷபாத்வா ஶ்யாமாகதண்டுலாத்வா ஏஷ மேஆத்மாந்தர்ஹ்ருதயே ஜ்யா யர்ன் ப்ருதிவ்யா ஜ்யாயான் அந்தரிக்ஷாஜ்யாயான் திவோ ஜ்யாயான் ஏப்யோ லோகேப்ய:" (சாந்-3-14-3.) இது முதலிய வாக்யங்களினுல் ப்ரஹ்மம் ஜ்யாயான் (ஸ்தூல மானது = பெருத்தது), அணு (சிறுத்தது) என்று சொல்லி யிருப்பதினுல், ஸாமான்யமாக ஸ்தூலமல்ல (ஸ்தூலத்வமில்லை) அணுவல்ல (அணுத்வமில்லை) என்று அர்த்தம் செய்யக் கூடாது. அஸ்தூலம் = * ப்ராக்ருதமான ஸ்தௌல்யமில் லாதது, அனணு = ப்ராக்ருதமான அணுத்வம் இல்லாத தென்றே அர்த்தம் செய்யவேண்டும். ஆகையால் இவ்வாக் யம் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்களின் நிஷேதத்தைச் செய்யா மலிருப்பதும் தவிர அதற்கு விருத்தமாக த்ரஷ்ட்ருத்வம் (ஸர்வஜ்ஞத்வம்) ஶாஸகத்வம் இவை முதலிய மேற்சொல்லப் பட்ட அநேக தர்மங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதினுல் 'அஸ்தூலம்' என்கிறவாக்யத்தினுல் பரப்ரஹ்மம் நிர்விசேஷம்= ஸகல தர்மரஹித மென்று சித்திக்கிறதில்லை என்று கோர்ட்டார் தீர்மானிக்கிருர்கள்.

3. ப்ரதிவாதியினுல் ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்கிற விஷயத்தில் தாகல் செய்யப்பட்டிருக்கும் "யத்ததத்ரேஶ்ய

* சங்கராசார்யரும் 'பஶ்ய மே பார்த்தரூபாணி ஶதஶோத ஸஹஸ் ரஶ: | நாநாவிதானி திவ்யானி நாநாவர்ணக்ருதீனிச (கீதா. 11-5) என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் 'திவ்யானி அப்ராக்ருதானி ரூபாணி' என்று அர்த்தம் செய்திருக்கிருர்.

மக்ராஹ்ய மகோத்ர மவர்ணமசக்ஷுஃஶ்ரோத்ரம் ததபாணி பாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத்பூத யோனிம் பரிபஶ்யந்தி தீரா:" (முண்ட. 1-1-16.) என்கிற வாக்யம் த்ருஶ்யத்வாதி தர்மங்களை நிஷேதிக்கிறதென்று தோன்றினும், அவ்வாக்யம் — ஶ்ருதிகளினால் ஸித்தமாகிற தென்று வாதியினால் சொல்லப்படும் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங் களை நிஷேதிப்பதில்லை. அவ்வளவேயன்றி—அவ் வாக்யத்தி லேயே 'பூதயோனிம்' என்கிற பதத்தினால் பூதகாரணத்வம், 'பரிபஶ்யந்தி தீரா:' என்கிற பதங்களினால் த்ருஶ்யத்வம், 'நித்யம்' முதலிய பதங்களினால் நித்யத்வம், ஸர்வகதத்வம், ஸூக்ஷ்மத்வம் முதலிய அநேக தர்மங்கள் சொல்லப்பட்டிருப் பதினால் பரப்ரஹ்மத்தில் அநேக தர்மங்கள் உண்டென்று சித்தமாகிறது.

இம்மந்த்ரத்தின் முன்னிருக்கும் "அக்ஷராத் ஸம்பவதீஹ விஸ்வம்" (முண்ட. 1-1-5) "ததோன்னமபிஜாயதே" "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்" "யஸ்ய ஞானமயம் தப: தஸ்மா தேதத் ப்ரஹ்ம நாமரூப மன்னம் ச ஜாயதே" (முண்ட. 1-1-9.) இத்யாதி மந்த்ரங்கள்—ஜகத்காரணத்வம், அன்னோத்பாதகத் வம், ஸர்வஜ்ஞத்வம் முதலான தர்மங்களைச் சொல்லுகின்றன. மற்றும் "மனஸைவானுத்ரஷ்டவ்யம்" "ஶுத்தேனமனஸா ஸதா" "ஆத்மா வாரே த்ரஷ்டவ்ய:" "தஸ்மின்த்ருஷ்டே பராவரே" இவை முதலிய வாக்யங்களினால் ப்ரஹ்மத்தின் த்ருஶ்யத்வாதி தர்மங்கள் ஸித்திக்கிறதினாலும், "பரிபஶ்யந்தி தீரா:" என்கிற இவ்வாக்யத்தில் ப்ரஹ்மத்திற்கு த்ருஶ்யத் வத்தைச் சொல்லிக் கொண்டிருப்பதினாலும், இவ்வாக்யத்தி லிருக்கும் 'அத்ரேஶ்யம்' என்கிற பதத்தினாலேயே ப்ரஹ்மத் தில் த்ருஶ்யத்வம் இல்லை என்று சொல்லுவது 'மம மாதா வந்த்யா' என் தாயார் மலடி என்று சொல்லியவாறு ஸ்வ வ்யாஹத மாகிறது. ஆகையால், 'அத்ரேஶ்யம்' என்கிற பதத்தினால் ஸாமான்யமாக த்ருஶ்யத்வமே இல்லை (காணப்படு கிறதேயல்ல) என்று சொல்லவராததினால், ஸாகல்யேன (பூர்த்தி யாக) காணப்படுவதல்ல அல்லது தன்னிட அனுக்ரஹமில்

ல்லாமல் காணப்படுவதல்ல என்றே அர்த்தம் செய்யவேண்டும். ஆகையால் "யத்ததத்ரேஶ்யம்" என்கிற இச்சுருதியும்—ப்ரஹ்மம் நிர்விசேஷ மென்கிற விஷயத்திற்கு ஆதாரமாகிறதில்லை என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

4. ப்ரஹ்மம் நிர்விசேஷமென்கிற விஷயத்தில் ப்ரதிவாதியினால் தாகல்செய்யப்பட்ட "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற ஶ்ருதி—ப்ரஹ்மம் நிர்விசேஷமென்று (ஸகல தர்ம ரஹிதமென்று) அறிவிப்பதில்லை. ஏனெனில்.—இவ் வாக்யத்தில் ப்ரஹ்மம் நிர்விசேஷமென்று சொல்லும் பதமில்லை. "அத்தகைய பதமில்லா விடினும்—மனிதனிடத்தில் பாசகத்வதர்மம் (பசனக்ரியா கர்த்ருத்வம் = சமைக்கும் வேலை) இருந்தால் பாசகனென்று எப்படி வாச்யனாகிறானோ (சொல்லப்படுகிறானோ) ஶ்யாமவர்ணமிருக்குமாயின் ஶ்யாமனென்று எப்படி சொல்லப்படுகிறானோ அப்படியே ப்ரஹ்மத்தினிடத்தில் ஏதாவது தர்மமிருக்குமாயின் அந்தந்த தர்ம நிமித்தமாய் அந்தந்த தர்மங்களை யறிவிக்கும் ஶப்தங்கள் ப்ரஹ்ம வாசகங்களாகின்றதினால் ப்ரஹ்மம் அவாச்யமென்பது பொருந்தாது. ப்ரஹ்மமோ அவாச்ய மென்று சொல்லப்படுகிறது. ஆகையால் ப்ரஹ்மத்தில் தர்மமில்லை என்று அர்த்தாத் சித்தமாகிறது" என்று சொல்லுவது—"யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற ஶ்ருதி "ப்ரஹ்மம் அவாச்யம்" என்று ப்ரதிபாதிக்காததினால் சரியல்ல.

அவாச்யமென்று ஏன் ப்ரதிபாதிக்காது? எனில்:—'யத:' என்கிற ஶப்தத்தினால் ப்ரஹ்மத்தின் ஞானத்தை உண்டாக்கியே அந்த ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து, வாச: = வாக்யங்கள் நிவர்த்தமாகிறது (பின்னுக்குத் திரும்பிவருகிறது) என்று சொல்லவேண்டியிருப்பதினால் தானே (ஶ்ருதியே) 'யத்' என்கிற ஶப்தத்தினால் ப்ரஹ்மத்தின் அறிவை உண்டாக்கி, தானே (ஶ்ருதியே) 'ஶப்தம் ப்ரஹ்மத்தை அறிவிப்பதில்லை.' என்பது பொருந்தாது. 'யத:' 'ப்ரஹ்ம' முதலிய ஶப்தங்கள் ப்ரஹ்மத்தை முக்யவ்ருத்தியினால் போதிக்காவிடினும், லக்ஷணாவ்ருத்தியினால் அறிவித்து, அந்த பரமாத்மனிடமிருந்து 'வாச

நிவர்த்தந்தே' என்று வாச்யத்வத்தின் நிஷேதம் செய்துக்கொண்டிருக்கிறதென்பது பொருந்தாது.

ஏனெனில் :—'யத:' இது முதலிய பதங்களினுல் லக்ஷணுவ்ருத்தியினுல் ப்ரஹ்மத்தின் அறிவு உண்டாவதற்கு பூர்வத்தில் ப்ரஹ்மத்தின் ஞானம் வேண்டும். அந்த ப்ரஹ்மத்தின் ஞானம் ப்ரத்யக்ஷத்தினுலும், அனுமானத்தினுலும் உண்டாகிறதில்லாததினுல் பதத்தினுலேயே உண்டாக வேண்டும். அதுவும் லக்ஷணுவ்ருத்தியினுலேயே உண்டாக வேண்டும். இவ்விதமாக அனவஸ்தை உண்டாகிறதினுல் லக்ஷணுவ்ருத்தியினுல் ப்ரஹ்மத்தின் ஞானமுண்டாவது துஸ்ஸாத்யம்.

'வசஸாம் வாச்யமுத்தமம்' இது முதலிய ப்ரமாணங்களால் ப்ரஹ்மம் வாச்யமென்று ஸித்தித்துக் கொண்டிருப்பதினுல் 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தினிடத்தில் வாச்யத்வத்தின் நிஷேதம் செய்துக்கொண்டே, ஸகல தர்மரஹிதமென்று அறிவிக்கிற தென்பது யுக்தமல்ல. ப்ரஹ்மம் லக்ஷணுவ்ருத்தியினுல் போத்யமாயினும், ஶக்யஸம்பந்தம் முதலிய தர்மங்கள் ஸித்திக்கின்றன.

"பீஷாஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:" இத்யாதி பூர்வோத்தர வாக்யங்களினுல் ப்ரஹ்மத்தில் பயப்ரதத்வாத்யனேக தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மற்றும், இவ்வாக்யத்திலேயே இருக்கும் "ஆனந்தம் ப்ரஹ்மணே வித்வான்" என்கிற பாகம் ப்ரஹ்மத்தில்—ஆநந்தம், ஞேயத்வம் இவை முதலிய தர்மங்கள் உண்டென்று சொல்லுகிறதினுல் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற வாக்யமும் ப்ரஹ்மம் தர்மரஹிதமென்கிற விஷயத்தில் ப்ரமாணமல்ல என்று கோர்டார் தீர்மானிக்கிருர்கள்.

5. ப்ரதிவாதியினுல் தாகல் செய்யப்பட்ட "அஶப்தமஸ்பர்ஶமரூபமவ்யயம் ததாரஸம் நித்யமகந்தவச்ச யத் । அனுத்யனந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத்ப்ரமுச்யதே (காடகம் 1-3-15.) என்கிற வாக்யமும் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று சொல்லுகிற தில்லை. ஏனெனில் :—

ஶப்தம், ஸ்பர்ஶம், ரூபம் முதலிய சில குணங்களின் நிஷேதம் செய்திருந்தபோதிலும் ப்ரஹ்மத்தில் ஸர்வஞ்ஞத்வாதி குணங்கள் இல்லை என்று இவ்வாக்யம் சொல்லுவதில்லை. தவிர, இவ் வாக்யத்திலேயே 'மஹத: பரம்' இத்யாதி வாக்யங்களினால் மஹத்தத்வத்தைவிட உத்க்ருஷ்டத்வம் நித்யத்வம் இவை முதலிய தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. மற்றும் 'ஈஶானம் பூத பவ்யஸ்ய' (காடகம் 2-5) 'யதஶ்சோதேதி ஸூர்யோஸ்தம் யத்ர ச கச்சதி । தம் தேவாஸ் ஸர்வேர்பிதாஸ்தது நாத்யேதி கஶ்சன (காடகம் 2-9.) இத்யாதி பூர்வோத்தர வாக்யங்களினால் ஜகன்னியாமகத்வம், ஸூர்யாஸ்தமயாதி காரணத்வம், தேவாதாரத்வம் இவை முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருப்பதினால், இவ்வாக்யமும் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹித மென்று சொல்லுவதில்லை என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

6. "நிர்குணம் குணபோக்த்ருச" என்கிற கீதாவாக்யமும் ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்கிற விஷயத்தில் ஆதாரமாகிற தில்லை. எப்படி எனில்:—சங்கராசார்யரே 'நிர்குணம் = ஸத்வரஜஸ்தமோ குணரஹிதம்' என்று அர்த்தம் செய்திருப்பதினாலும், 'பூதபர்த்ரு ச தத் ஜ்ஞேயம்' 'ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:' இவை முதலிய கீதா வாக்யங்களினாலேயே பரப்ரஹ்மத்தின் ரக்ஷணகர்த்ருத்வம், நாசகர்த்ருத்வம், ப்ரகாஶகர்த்ருத்வம் இவை முதலிய அநேக தர்மங்கள் ஸித்தித்துக் கொண்டிருப்பதினாலும் இவ்வாக்யம்ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்கிற விஷயத்திற்கு ஆதாரமாகிறதில்லை என்று கோர்ட் தீர்மானிக்கிறது.

7. ப்ரதிவாதியினால் தாகல் செய்யப்பட்ட "ந ஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி" என்கிற ஸூத்ரம்— ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்று அறிவிக்கிறதில்லை. இச் சூத்ரத்தில் ப்ரஹ்மம் நிர்விஶேஷமென்று போதிக்கும் பதமில்லை. வைதிக தத்வங்களின் விசாரம் நடந்துக்கொண்டிருக்க— வேதம், வேதார்த்த நிர்ணயகமான ஸூத்ரங்கள் இவைகளின் ஆதாரங்களைக் கொடுக்காமல், சங்கராசார்யர் 'ப்ரஹ்மம் நிர்

விசேஷமென்று வ்யாக்யானம் செய்திருக்கிறார்' என்று தங்கள் ஆசார்யரின் வாக்யத்தை ஆதாரமாகக் காட்டுவது யுக்தமல்ல. (அவைகளை வாதக்ரஸ்த விஷயத்தில் ப்ரமாண மென்று ஒப்புக் கொள்ளுவது யோக்யமல்ல.) ஆகையால்—இந்த ஸூத்ரம் ப்ரஹ்மம் நிர்விசேஷமென்கிற விஷயத்தில் ஆதாரமாகிறதில்லை என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

8. ப்ரதிவாதியின் 2-வது ஸாக்ஷியினால் தாகல் செய்யப் பட்ட "தத்வமஸி" என்கிற சாந்தோக்ய வாக்யம்—'ஸர்வே ஶத்வ' முதலிய ஶ்லோகங்களினால், 'தத்' என்கிறபதம் ஸர் வோத்தமத்வம், ஸர்வஞ்ஞத்வம் முதலிய அநேக குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தை போதிக்கிறதென்று சங்கராசார்யர் சொல்லி யிருப்பதினாலும், வாஸ்தவமாக அப்பதத்திற்கு அப்படியே அர்த்த மிருப்பதினாலும், ப்ரஹ்மம் ஸகல தர்மரஹித மென் கிறதற்கு ஆதாரமாகிறதில்லை.

9. ஷை ஸாக்ஷியினால் சொல்லப்பட்ட "நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற (ப்ரு. கா.) வாக்யமும் ப்ரஹ்மத்தில் குண ங்கள் இல்லை என்கிற விஷயத்தில் ஆதாரமாகிறதில்லை. 'ஸர்வ ஸ்யவஶீ, ஸர்வஸ்யேஶான:, ஸர்வஸ்யாதிபதி:, பூதபால:, ஈஶானோ பூதபவ்யஸ்ய, ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' இவை முதலிய பூர்வோத்தர வாக்யங்களில்— ப்ரஹ்மத்தின் ஸர்வஸ்வாமித்வம், ரக்ஷகத்வம், ஜ்யோதீரூபத்வம் இவை முதலிய தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. 'மனஸைவேத மாப்தவ்யம்' 'மனஸை வானுத்ரஷ்டவ்யம்' என்று ஞேயத்வம் சொல்லப்பட் டிருக்கிறது. 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யத்திற்கு ஸர்வதர்மங்களை நிஷேதிப்பதில் அபிப்ராய மிருக்குமாயின் 'நேஹாஸ்தி கிஞ்சன' இஹ = இந்த ப்ரஹ்மத்தில், கிஞ்சன = எதுவும், நாஸ்தி = இல்லை என்று இவ்வளவே இருந்தால் போது மாயிருக்க, 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்று அதிகமானபதங் களைச் சொல்லுவது அனுவஶ்யகமாகிறது. அப்படி அதிக மாகச் சொல்லியிருப்பதினால்— இஹ = இந்த ப்ரஹ்மத்தில் நாநா = பின்னமாயிருக்கும், கிஞ்சன = எந்தரூபம் குணம் முதலிய

வைகளும், நாஸ்தி = இல்லை என்று ப்ரஹ்மத்தில் பின்னமான குணக்ரியாதிகள் இல்லை என்று பரமாத்மனுக்கு குணரூபங் களுடன் பேதத்தை நிஷேதிக்கிறதென்றே சொல்லவேணும். அநேக வாக்யங்களினால் அநேக தர்மங்கள் ஸித்தமாய்க் கொண்டிருக்க — அதற்கு விருத்தமாக ஸாமான்யமாக தர்மங்களே இல்லை என்று தர்மங்களை நிஷேதிப்பது அயுக்தமாகிறது. அப்படி நிஷேதிக்கும் அபிப்ராய மிருக்குமாயின்—உத்தரபாகத்தில் 'ஈஶானோ பூதபவ்யஸ்ய, ஸர்வஸ்யவஶீ, ஸர்வஸ்யாதிபதி:, ஏஷ ஸர்வேஶ்வர:, ஏஷ பூதாதிபதி:, ஏஷ ஸர்வஸ்யேஶான:, ஏஷ பூதபால:, ஏஷ நித்யோமஹிமா ப்ராஹ்மணஸ்ய' இவை முதலிய வாக்யங்களினால் அநேக தர்மங்கள் போதிக்கப்படுவதும் அயுக்தமாகும். ஆகையால் இந்த 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யம் ப்ரஹ்மம் நிர்விசேஷமென்கிற விஷயத்தில் ஆதாரமாகிறதில்லை என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

10. "மாயாஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூத குணைர்யுக்தம்மைவம் த்வம் ஞாதுமர்ஹஸி" என்கிற பாரத ஶ்லோகத்தில் அநேக குண (தர்ம)ங்களுடன் கூடின விஶ்வரூபம் மாயிகம் = அவித்யாகல்பிதம் = பொய் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதினால் ப்ரஹ்மத்தின் எல்லா தர்மங்களும் பொய்யானது" என்று சொல்லுவது பொருந்தாது. ஏனெனில்:—அந்த ஶ்லோகத்தின் பூர்வ பாகத்தில் நாரதரால்—"நமஸ்தே தேவதேவேஶ......ப்ராஹ்மணப்ரிய, விஶ்வமூர்தே, மஹாமூர்தே, பாந்தவ, பக்தவத்ஸல, ப்ரஹ்மண்யதேவ, பக்தோஹம் த்வாம் தித்ருக்ஷுரேகாந்த தர்ஶனாய நமோ நம:" என்கிற வாக்யங்களினால் தேவதேவேஶத்வம், ப்ராஹ்மணப்ரியத்வம், விஶ்வரூபத்வம், மஹாரூபத்வம், பந்துத்வம், பக்த ப்ரியத்வம் இவை முதலிய அநேக தர்மங்களைச் சொல்லி அதற்கு முன்னிருக்கும் "ஏவம் ஸ்துதஸ்ஸ பகவான் குஹ்யைஸ்தத்யைஶ்ச நாமபி:। பகவான் விஶ்வத்ருக்ஸிம்ஹ: ஸர்வமூர்த்திமய: ப்ரபு:। தர்ஶயாமாஸ பகவான் ரூபம் தத் பரமம் ஹரி:" என்கிற ஶ்லோகத்தில்—தத்யை: = நிஜமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும்,

நாமபி: =நாமங்களினால் துதிக்கப்பட்ட என்று பரமாத்மனுக்கு விசேஷணங்களைக்கொடுத்து, பூர்வத்தில்—'தேவதேவேஶ, விஸ்வ மூர்த்தே' இத்யாதி பதங்களினால் சொல்லப்பட்ட தர்மங்கள் (விஸ்வரூபத்வாதி தர்மங்கள்) ஸத்யமென்று ஸ்பஷ்டமாக விஸ்வரூபத்தையும், தர்மங்களையும் உத்தேஶித்து ஸத்யத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் அந்த ரூபத்திற்கு, பரமம்=உத்தமம் என்று விசேஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாயிகமான ரூபம் உத்தமமெப்படியாகும்? அந்த விஸ்வரூபம் மாயிகமல்ல (பொய்யல்ல). மற்றும் "தம் ப்ரஸன்னம் ப்ரஸன்னாத்மா வவந்தே பரமேஸ்வரம் । தமுவாச நதம் மூர்த்னா தேவானுமாதிரவ்யய:" இத்யாதி ஶ்லோகங்களில்- அந்த விஸ்வரூபத்திற்கு தேவதைகளுக்கு காரணத்வம், நாசரஹிதத்வம்முதலிய விசேஷணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன விஸ்வரூபம் மாயிகமாயின் (அவித்யாகல்பிதமாயின்) தேவதைகளுக்கு காரணமும் நாசரஹிதமு மாவதில்லை. ஆகையால் அந்த விஸ்வரூபம் மாயிகமல்ல (மித்யையல்ல).

"மாயா ஹ்யேஷாமயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத" என்கிற ஶ்லோகம் விஸ்வரூபத்திற்கு மாயிகத்வத்தை (அவித்யாகல்பிதத்வத்தைச்) சொல்லுகிறதில்லை. ஏனெனில்—"ஏகதஶ்ச த்விதஶ்சைவ த்ரிதஶ்சைவ மஹர்ஷய: । இமம் தேஶமநுப்ராப்தா மம தர்ஶனலாலஸா: ॥ நசமாம் தே தத்ருஶிரே நச த்ரக்ஷ்யதி கஶ்சன । ருதே ஹ்யைகாந்திகஶ்ரேஷ்டாத்த்வம்சைவைகாந்திகோத்தம" என்கிற ஶ்லோகங்களினால் நாரதருக்கு தன்னிட விஸ்வரூபத்தைக் காண்பித்து பகவான் சொல்லுகிறார் — என்னிட தர்ஶனத்திற்காக ஏகத என்பவரே முதலான அநேக ரிஷிகள் வந்தனர். அவருக்கு நான் காணப்படவில்லை. நான் ஏகாந்தபக்தஶ்ரேஷ்டர்களுக்கேயன்றி வேறுயாருக்கும் காணப்படுகிறவனல்ல. நீ பக்தோத்தமனா யிருப்பதினால் உன்னிடத்தில் ப்ரஸன்னனாய் (உனக்குநான் தர்ஶனம்கொடுக்கவேண்டுமென்கிற எண்ணத்தினால்) உனக்கு நான் தர்ஶனம் கொடுத்திருக்கிறேன் என்று பகவான் நாரதரின் பேரில் பாரத்தைச்சுமக்கவே— "ரூபமுள்ள கடபடாதி பதார்த்தங்கள் எப்படி நம்மிட ப்ரயத்

ன்த்திலேயே காணப்பட்டுக் கொண்டிருப்பதினால் கடபடாதி களின் பேரில் பக்தியின் ஆவஶ்யகமில்லையோ, அப்படியே நீயும் (பகவானும்) ரூபமுள்ளவனுகையால் நம்மிட ப்ரயத்னத்தினலே யே காணப்படுவதினால் உன்னிடத்தில் பக்தியின் ஆவஶ்யக மென்ன இருக்கிறது? வீணாய் என்பேரில் ஏன் பாரத்தைச்சுமக் கிறாய்'' என்கிற நாரதரின் மனதிலிருக்கும் எண்ணத்தை நாரதரிட முகஜாடையினாலறிந்து பகவான் சொல்லுகிறார்:—“ ஏதத் த்வயா ந விஞ்ஞேயம் ரூபவானிதி த்ருஶ்யதே। இச்சன் முஹூர்த் தான் னஶ்யேய மீஶோஹம் ஜகதோ குரு:। மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூதகுணைர்யுக்தம் நைவம் மாம் ஞாதுமர்ஹஸி'' என்கிற ஶ்லோகங்களினால்—‘ பக வான் ரூபமுள்ளவனுகையினால் கடாதிகளைப்போல் நம்மிட ப்ரயத் னத்தினலேயே காணப்படுகிறான், பகவானின் தர்ஶனத்திற்காக பக்திமுதலியவைகளின் ஆவஶ்யகமில்லை என்று (நாரதா) நீ நினைக்காதே! நீ என்னைக் காணக்கூடாதென்று (என்னிட தர்ஶ னம் உனக்கு ஆகக்கூடாதென்று) எனக்கு எண்ணமுண்டா யின்—நான் ஒரு நொடியில் அத்ருஶ்யனுவேன். என்னிடத்தில் அத்ருஶ்யனாகும்(காணுமற்போகும்) ஶக்தியுண்டு. நான் ஜகத் துக்கு குரு. என்னை நீ கண்டாய். இந்த நீ பார்த்தது ஏது உண்டோ அது(தர்ஶனம்) என்னிட இச்சையினலேயே உண்டா யிற்று. எல்லா பதார்த்தங்களின் ஸாமர்த்யங்களுடன் கூடியிருக் கும் என்னை ‘ ஏவம் ’ ரூபமிருப்பதினால் கடபடாதிகளைப்போல் காணப்படுகிறேனென்று நினைக்காதே. என்னிட ப்ரஸாதம்(அவ னுக்கு நான் தர்ஶனம் கொடுக்கவேணும் என்கிற இச்சை) என் னிடத்தில் பக்தி செய்தாலொழிய உண்டாவதில்லை. ஆகையால் என்னிட தர்ஶனமாவதற்கு ஏகாந்தபக்தி வேண்டுமென்று சொல் லியிருக்கிறபடியால் இந்தஶ்லோகங்களினால் விஶ்வரூபம் மாயிகம் அவித்யாகல்பிதம் என்று ஸித்திக்காததுமன்றி, அதற்கு விருத்த மாக ‘ தத்யைஶ்ச நாமபி: ’ ‘ பரமம் ரூபம் ’ ‘ தேவானுமாதிரவ் யய: ’ இத்யாதி விஶேஷணங்களினால் அநேக குணங்களுடன் கூடின அந்த விஶ்வரூபம் ஸத்யமானதென்று ஸித்தமாகிறது.

மற்றும் கீதையிலும்- "அநேக வக்த்ர நயனமனேகாத்புத் தர்ஸனம் | அநேக *திவ்யாபரணம் திவ்யானேகோத்யதாயுதம்| திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தானுலேபனம் | ஸர்வாஸ்சர்ய மயம் தேவமனந்தம் விஸ்வதோமுகம்" (ப. கீ. 11-10,11.) இவை முதலிய ஸ்லோகங்களில்—இந்த விஸ்வரூபம் ஆயிரக் கணக்கான முகநேத்ராதிகளுடன் கூடியதாயிருக்கிறது. மற்றும் அதில்—அநேக ஆஸ்சர்யமான பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இந்த விஸ்வரூபம் அநேக, திவ்யமான = அப்ராக்ருதமான (மாயாகல்பிதமல்லாத) ஆபரணம், ஆயுதம், புஷ்பம், வஸ்த்ரம், சந்தனம் முதலியவைகளுடன் கூடினதாய், அநந்தம் = நாஸரஹிதமாய் இருக்கிறதென்று, அவ்விஸ்வரூபத்தின் அவிநாஸித்வம், அப்ராக்ருதமான (அவித்யாகல்பிதமல்லாத)ஆபரணாதிகளுடன் கூடியிருக்கை இவைகளை சொல்லியிருப்பதினால் அந்த விஸ்வரூபம் மாயிகம் (அவித்யாகல்பிதம்) என்று எப்படி சொல்லத்தகும்? ஆகையால் அந்த விஸ்வரூபம் மாயிகமல்ல (பொய்யல்ல.)

மற்றும்—"த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விஸ்வஸ்ய பரம் நிதானம் | த்வமவ்யயஸ்ஸாஸ்வத தர்மகோப்தா ஸனாதனஸ்த்வம் புருஷோ மதோ மே | அனாதி மத்யாந்தமனந்த வீர்யம் (ப. கீ. 1-18, 19.) என்கிற ஸ்லோகங்களினால் எதிரிலிருக்கும் ஸ்ரீக்ருஷ்ணனிட விஸ்வரூபத்தைக் குறித்து—இந்த விஸ்வரூபம் நாஸரஹிதமும், ப்ரஹ்மரூபமுமானது என்று முமுக்ஷுக்கள் அறியவேண்டியது, இந்த விஸ்வரூபம் எல்லா ஜகத்துக்கும் ஆதாரமானது, ஸாஸ்வத தர்மங்களை ரக்ஷிப்பது என்று விஸ்வரூபத்தில்—நித்யத்வம், தர்ம கோப்த்ருத்வம் இவை முதலிய தர்மங்கள் சொல்லப்பட்டிருப்பதினால், அந்த விஸ்வரூபம் பொய்யெனில்—மேற்ச் சொல்லியவைகள் பொருந்தாது. ஆகையால் அந்த விஸ்வரூபம் மித்யையல்ல, ஸத்யமானதே என்று கோர்டார் தீர்மானிக்கிறார்கள்.

"வேதத்தில் சொல்லப்பட்ட ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்கள் வ்யாவஹாரிகம், பாரமார்த்திகமல்ல" என்று சொல்லுவது

* திவ்யானி அப்ராக்ருதானி (ப. கீ. ஸங். பா. 10-5.)

யுக்தமல்ல. ப்ரமாணங்களினுல் அறியவரும் தர்மங்கள் பார மார்த்திகமானவைகளே என்று ப்ரதிவாதிகளே (அத்வைதிகளே) அங்கீகரித்திருப்பது முதலிலேயே ஸித்தமாயிருப்பதினுல் அவ்விஷயத்தை மறுபடியும் விசாரிப்பது அவஶ்யகமில்லை.

இவ்விஷயங்களை எல்லாம் கோர்டார் விசாரித்து—"பரப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாத்யனேக தர்மங்களுடன் கூடினது, நிர்விசேஷமல்ல (ஸகல தர்மரஹிதமல்ல), அந்த தர்மங்கள் நிஜமானவைகளே, அவித்யாகல்பிதங்களல்ல" என்று வேதம், வேதார்த்த நிர்ணயகமான ப்ரஹ்ம ஸூத்ரம், கீதா என்கிற ப்ரஸ்தானத்ரயத்தினுல் ஸித்தமாகிறதென்று தீர்மானித்திருக்கின்றனர்.

# வேதாந்த விசாரணை ஸிவில் ஸுட்.

## O. S. No. 564, 5-வது இஷ்யூ.

## டிக்ரி.

---

'யஸ்ஸர்வஞ்ஞஸ்ஸர்வவித்யஸ்ய ஞானமயம் தப: । தஸ்மாதேதத்.ப்ரஹ்ம நாமரூபமன்னம்ச ஜாயதே' 'பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியாச । யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோனிம்' 'ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வ வ்யாபீ ஸர்வபூதாந் தராத்மா' இவை முதலிய அநேக ஶ்ருதிகளும், 'அதாதோ ப்ரஹ்ம ஜிஞ்ஞாஸா' 'ஜன்மாத்யஸ்ய யத:' 'அந்தஸ்தத்தர்மோபதேஶாத்' 'அந்தர்யாம்யதிதைவாதிஷு தத்தர்மவ்யபதேஶாத்' இவை முதலிய ப்ரஹ்மஸூத்ரங்களும், 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ: மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே । யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:' இவை முதலிய கீதா ஶ்லோகங்களும்—பரப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வம், ஸர்வேஶத்வம், ஸ்வதந்த்ரத்வம், ஜகத்கர்த்ருத்வம் முதலிய குணங்களுடன் கூடினது என்று சொல்லிக்கொண்டிருப்பதினாலும்; 'பரப்ரஹ்மம்' என்கிற ஶப்தமே பரப்ரஹ்மத்திற்கு உத்க்ருஷ்டத்வம், ப்ருஹத்வம் முதலிய குணங்களை போதித்துக் கொண்டிருப்பதினாலும் பரப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களுடன் கூடினதென்று ஸித்தமாகிறது. அத்தகைய பரமாத்மாவை நிர்குணனென்று உபாஸனை செய்பவர்கள் —"நைர்குண்யமேவ பஶ்யந்தி ந குணான் வினியுஞ்ஜதே । தேஷாம் தமஶ்ஶரீராணும் தம ஏவ பராயணம்" பரமாத்மாவை குணபூர்ணனென்று உபாஸிக்காமல் நிர்குணனென்று உபாஸிக்கும் தாமஸ ஸ்வபாவமுடையவர்களுக்கு தமஸ்ஸே முக்ய ஆஶ்ரயமென்று சொல்லியவாறு, தமஸ்ஸை (நித்யநரகத்தை) அடைந்து, மஹாதுக்கத்தை அனுபவிப்பார்கள். ஆகையால் அந்த பரமாத்மனிட ஸர்வஞ்ஞத்வாதி குணவிசேஷங்களின் அபரோக்ஷஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டு, அவனிட அனுக்ரஹத்தினல் ஐஹிகாமுஷ்மிக புருஷார்த்தங்களை அடைந்து நித்ய ஸுகத்தை அனுபவிக்கவேண்டியது.

ஸப்யமனீபுரம்,
29—10—1928.

**(Sd.) DHARMARAJ, H. B.**

*Cheif Judge, High Court.*

# ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்

# ஸிவில் ஸூட்.

O. S. No. 564 of 1921.

4-வது இஷ்யூவிசாரணை.

*(பரப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம் முதலிய ஸமஸ்தகல்யாண குணங்களுடன் கூடினதா அல்லவா ?)*

| வாதி | பிரதிவாதி |
|---|---|
| *விஷ்ணுதாஸாசார்யர்,* | *கங்காதர ஶாஸ்திரிகள்.* |
| **வகீல்.** | **வகீல்.** |
| *மாதவதாஸ்.* P. B. D. | *ஹரிஹரசர்மா.* P. B. S. |

## வாதி விசாரணை.

கோர்ட் :—*உம்மிட பெயரென்ன ?*

வாதி :—*விஷ்ணுதாஸாசார்யர்.*

கோர்ட் :—தெய்வ ஸாக்ஷியாக கோர்டார் ஸமுகத்தில் நான் சொல்லுவதெல்லாம் நிஜமே யொழிய பொய்யல்ல என்று சொல்லும்.

வாதி :—தெய்வ ஸாக்ஷியாக கோர்டார் ஸமுகத்தில் நான் சொல்லுவதெல்லாம் நிஜமே யொழிய பொய்யல்ல.

வாதிவகீல் :—*உம்மிட தாவா என்ன ?*

வாதி :—*பரப்ரஹ்மம்*—ஸர்வஞ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், ஸர்வநியாமகத்வம், ஸர்வ ஸ்வாமித்வம், ஸ்வதந்த்ரத்வம், ஸர்வஸம்ஹாரகத்வம், ஞானதாத்ருத்வம், ஸர்வோத்தமத்வம், விசித்ரஶக்திமத்வம், சந்த்ரஸூர்யாத்யாதாரத்வம், ஸர்வப்ரகாஶகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வாஶ்ரயத்வம், ஸாக்ஷாத் த்ரஷ்ட்ருத்வம் முதலிய ஸமஸ்தகல்யாண குணங்களுடன் பூர்ணமாயிருக்க; ப்ரதிவாதிகள்—*அந்த ப்ரஹ்*

மம் நிர்விசேஷமானது (ஸர்வஜ்ஞத்வாதி ஸமஸ்த கல்யாண குணரஹிதமானது) என்கிறார்கள். அவ்விஷயத்தை விசாரித்து தீர்மானிக்க வேணுமாய் கோருகிறோம்.

வா. வ. :—பரப்ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வாதி குணங்களுடன் கூடினதென்கிற விஷயத்தில் ஆதாரமென்ன ?

வாதி :—ஸ்ருதி, ஸூத்ரம், கீதை, அனுமானம், ப்ரத்யக்ஷம், இவைகளே ஆதாரங்கள்.

வா. வ :—ஸ்ருதி சொல்லும் ?

வாதி :—அநேக ஸ்ருதிகளிருக்கின்றன. எவ்வளவென்று சொல்லுவது.

வா. வ :—நாலைந்து சொல்லும்.

வாதி :—'யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித், யஸ்ய ஜ்ஞானமயம் தப: । தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமன்னம் ச ஜாயதே' (முண். 1–1–9.)

வா. வ :—இதற்கு அர்த்தமென்ன ?

வாதி :—எந்த அக்ஷரநாமகமான பரப்ரஹ்மம், ஸர்வஜ்ஞ: = ஸகல பதார்த்தங்களின் ஸாமான்யஜ்ஞான முளதோ, ஸர்வவித் = ஸகல பதார்த்தங்களின் விசேஷஜ்ஞான முளதோ, யாரிடத்தபஸ்ஸு ஜ்ஞானரூபமோ அந்த அக்ஷரநாமக பரமாத்மனால், ஏதத் ப்ரஹ்ம = இந்த சதுர்முகப்ரஹ்மா, ஜாயதே = பிறக்கிறான். நாம = நாமாத்மக ப்ரபஞ்சமும், ரூபம் = அர்த்தாத்மகமான ப்ரபஞ்சமும், அன்னமும் உண்டாகின்றன வென்று அர்த்தம்.

வா. வ :—இதினால் என்னவென்று ஸித்தமாகிறது ?

வாதி :—பரப்ரஹ்மத்திற்கு ஸர்வஜ்ஞத்வம், சதுர்முகஜனகத்வம், நாமரூபாத்மக ப்ரபஞ்ச காரணத்வம் இத்யாதி குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ :—வேறு ஸ்ருதி சொல்லும்.

வாதி :—'பராஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபல க்ரியா ச' (6-8.) 'ஸகாரணம் காரணாதிபோ

திப :' (6-9.) ' தமீஶ்வராணும் ப்ரமம் மஹேஶ்வரம் தம் தேவ தாணும் பரமம் ச தைவதம் । பதிம் பதீனும் பரமம் புரஸ்தாத் விதேம தேவம் புவனேஶ மீட்யம் ' (6-7.) ' ஏகோ தேவஸ்ஸர்வ பூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா । கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதி வாஸ: ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச' (6-11.) ' ஏகோ வஶீ நிஷ்க்ரியாணும் பஹூனு மேகம் பீஜம் பஹுதா ய: கரோதி । தமாத்மஸ்தம் யேனுபஶ்யந்தி தீராஸ் தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்' (6-12.) ' நித்யோ நித்யாணும் சேதனஶ் சேதனுணும் ஏகோ பஹூனும் யோ விததாதி காமான் ' (6-13.) இத்யாதி ஶ்வேதாஶ்வதரோபநிஷத் வாக்யங்களும் ஆதாரங்களே.

வா. வ :—இவைகளின் அர்த்த மென்ன ? இவைகளால் என்ன ஸித்தமாகிறது ?

வாதி :— 8வது மந்த்ரத்தில்– பரப்ரஹ்த்தின் ஶக்தி உத்தமமானதென்றும், ஸ்வாபாவிகமானது - (கல்பிதமல்லாதது) என்றும், ஞானரூபமென்றும், பலரூபமென்றும், க்ரியாரூபமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

9வது மந்த்ரத்தில் – பரமாத்மா காரணன், காரணன் மாத்ரமேயல்ல, உலகத்தில் எத்தனே காரணுதிபதிகளுளரோ (ஜீவர்ளுளரோ) அவரெல்லோருக்கும், அதிப: = ஸ்வாமீ, கேவலம் காரணுதிபதிகளுக்கு மாத்ரமேயல்ல, அதிப: = எல்லாவற்றிற்கும் ஸ்வாமியாயிருக்கிறுன் என்றும்—

7வது மந்த்ரத்தில்—எந்த பரமாத்மா ஜகத்துக்கு எங்தெந்த ஈஶ்வரர்கள் (நியமனகர்த்தாக்கள்) உளரோ அவரெல்லோருக்கும் உத்தமனுன மஹேஶ்வரன். எங்தெந்த தேவதைகளுளரோ அந்த எல்லா தேவதைகளுக்கும் உத்தம தேவதை, ஜகத்துக்கு எங்தெந்த பாலகர்கள் உளரோ அவரெல்லோருக்கும் உத்தம பாலகன், ஸர்வலோகத்திற்கும் நியாமகன், ஸ்துத்யன், அந்த பரமாத்மனின் ஞானத்தை நாங்கள் அடைய வேண்டியது என்றும்—

11வது மந்த்ரத்தில்—பரமாத்மா, ஏக: = முக்யன் அல்லது ஜீவஜடாத்மகமான ப்ரபஞ்சத்தைவிட பின்னன் (வேறுனவன்),

தேவ := க்ரீடா காந்தி முதலிய குணங்களுடன் கூடினவன், ஸர்வபூதேஷு கூட := ஸர்வப்ராணிகளின் ஹ்ருதயகுகையில் காணப்படாமலிருப்பவன், ப்ராணிகளில் மாத்ரமேயல்ல, எல்லா ஜகத்திலும் வ்யாபித்திருப்பவன், ஜீவரிடத்திலிருந்து அவர்களை நியமிப்பவன், கர்மாத்யக்ஷ:=அந்தந்த ஜனங்களால் செய்யப்படும் கர்மங்களை யனுசரித்து பலன்களைக் கொடுப்பவன், ஸர்வபூதாதி வாஸ := எல்லா ஜீவர்களுக்கும் ஆஶ்ரயன், ஸாக்ஷீ = எல்லா பதார்த்தங்களையும் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறவன், சேதா = ஞாஞ ஶ்ரயன் என்றும்—

12வது மந்த்ரத்தில்—எந்த பரமாத்மா, வஶீ = ஸர்வ விஷயத்திலும் ஸமர்த்தனுகவும், ஸர்வகர்தாவாகவும், ஸர்வ ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் நியாமகனுகவும் இருக்கிருனே அந்த பரமாத்மனை யார் அறிந்துக் கொள்ளுகிருர்களோ, அவர்களுக்கே ஶாஶ்வத ஸுகரூபமான மோக்ஷம் கிடைக்கிறது. முன் சொல் லியதற்கு விருத்தமாக அறிந்துக்கொள்ளும் இதர ஜனங்களுக்கு (நானே = ஜீவனே ப்ரஹ்மமென்றும், ப்ரஹ்மம் நிர்குணமென் றும் அறிந்துக்கொள்ளும் ஜனங்களுக்கு) ஶாஶ்வத ஸுகம் கிடைக்கிறதில்லை, ஶாஶ்வதம் ந ஸுகம் = ஶாஶ்வதமான துக்கமே உண்டாகிறதென்றும்—

13 வது மந்த்ரத்தில்—நித்யானும் நித்ய := நித்யபதார்த்தங் களுக்கு நித்யத்வத்தைக் கொடுப்பவன், சேதனுனும் சேதன: = ஸர்வ சேதனங்களுக்கும் சைதன்யத்தைக் கொடுப்பவன், அநேக ஜனங்களினுல் அபேக்ஷிக்கப்படும் பதார்த்தங்களைப் படைப் பவன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி ஶ்வேதாஶ்வதரோபநிஷத் வாக்யங்களினுல்—பர ப்ரஹ்மத்தில்—பாரமார்த்திகமான ஞான பல க்ரியாரூபஶக் திமத்வம், காரணத்வம், ஸர்வகாரணத்வம், பதார்த்தங்களின் ஸ்வாமித்வம், ஈஶ்வரேஶ்வரத்வம், தேவதேவத்வம், பாலகபால கத்வம், ஸர்வஜகன்னியாமகத்வம், ஸ்துத்யத்வம், முக்யத்வம், க்ரீடாதி தர்மவத்வம், ஸர்வப்ராணிவ்ருத்தித்வம், ஸர்வவ்யாபித் வம், ஸர்வப்ராணிநியாமகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வப் ராண்யாஶ்ரயத்வம், ஸர்வஸாக்ஷித்வம், ஞாநுஶ்ரயத்வம், ஸர்வ

வ்ஙித்வம், கர்த்ருத்வம், மோக்ஷஜனகஞான விஷயத்வம், நித்ய த்வப்ரதத்வம், ஞானப்ரதத்வம் இவை முதலிய குணங்களுண் டென்று சித்தமாகிறது.

வா. வ:—பரமாத்மனிடத்தில் குணங்களை (தர்மங்களை)ச் சொல்லும் வேறு ஸ்ருதிசொல்லி அதின் அர்த்தத்தைச் சொல் லும்.

வாதி:—“உபே அஸ்மின் த்யாவா ப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே। உபாவக்னிஶ்ச வாயுஶ்ச ஸூர்யாசந்த்ரமஸாவு பௌ। வித்யுன்னக்ஷத்ராணி” (சாங். 8-1-3) என்கிற ஸ்ருதி யில்—பரமாத்மா முக்தாமுக்த அக்னி வாயு ஸூர்ய சந்த்ர நக்ஷத்ராதிகளுக்கு ஆஶ்ரயனென்று சொல்லி யிருப்பதினால் பர மாத்மனிடத்தில் ஸூர்ய சந்த்ராத்யாதாரத்வம் ஸித்தமாகிறது.

வா. வ:—பரமாத்மனிடத்தில் தர்மங்களைச் சொல்லும் வேறு ஸ்ருதிகளைச் சொல்லும்.

வாதி:—“ஸர்வேவேதா யத்பதமாமனந்தி” (காடகம் 1-2-15.) “வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:” (கீதா 15-15) இத் யாதி ப்ரமாணங்களினால் ப்ரஹ்மம் ஸர்வவேத ப்ரதிபாத்ய மென்று ஸித்தமாகிறது. மற்றும் அவ்வேதமும் அளவில்லாததா யிருக்கிறது. அநந்தமான வேதத்திலிருக்கும் ஒவ்வொரு பதமும் பரமாத்மனிட குணங்களை ப்ரதிபாதித்துக் கொண்டிருக் கிறதினால் எல்லா வேதங்களும் பரப்ரஹ்மத்தின் குண (தர்ம)ங் களையே ப்ரதிபாதிக்கின்றன. எவ்வளவென்று சொல்லுகிறது?

வா. வ:— உதாஹரணத்திற்காக மற்றும் சிலவற்றைச் சொல்லும்.

கோர்ட்:—மிஸ்டர் தாஸ்! தர்ம ப்ரதிபாதகமான 4-6 வேதவாக்யங்களைச் சொல்லியிருக்கிறார். மற்றும் எல்லா வேத வாக்யங்களும் குணங்களை ப்ரதிபாதிக்கின்றன வென்று சொல்லுகிறார். முன் வேண்டுமாயின் அதை விசாரிக்கலாம். இப்போது வேத வாக்யங்களைச் சொல்லவேண்டிய ஆவஶ்யக மில்லை.

வா. வ :—அப்படியே ஐயா !

வா. வ :—ஆசார்யரே ! பரப்ரஹ்மத்தின் குணங்களைச் சொல்லும் ஸூத்ரங்களைச் சொல்லும்.

வாதி :—"அதோதோ ப்ரஹ்மஜிஞ்ஞாஸா" "ஜன்மாத்யஸ்ய யத:" "ஶாஸ்த்ரயோனித்வாத்" இவைகளே முதலிய ஸூத்ரங்கள் அந்த ப்ரஹ்மத்தின் குணங்களை ஸாக்ஷாத்தாகவும், பரம்பரையாகவும் சொல்லுகின்றன.

வா. வ :—அந்த ஸூத்ரங்கள் எப்படி குணங்களை ப்ரதிபாதிக்கின்றன ?

வாதி :—ப்ரஹ்மஶப்தம் "அத கஸ்மாதுச்யதே ப்ரஹ்மேதி ப்ரும்ஹதி ப்ரும்ஹயதிச" இத்யாதி ஶ்ருதிகளையனுஸரித்து, பூர்ணத்வத்தையும், ஜகதுத்பாதகத்வாதி குணங்களையும் சொல்லுகிறது. 'ஜன்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரம் பரப்ரஹ்மத்தின் ஜகஜ்ஜன்மாதிகாரணத்வ ரூபகுணத்தைச்சொல்லுகிறது. "ஶாஸ்த்ர யோனித்வாத்" என்கிற ஸூத்ரம்—ஶாஸ்த்ரஜன்ய ஞான விஷயத்வத்தை அறிவிக்கிறது. 'அந்தஸ்தத்தர்மோபதேஶாத்' 'ஆகாஶஸ்தல்லிங்காத்' இத்யாதி ஸூத்ரங்களும் அநேக தர்மங்களை அறிவிக்கின்றன.

வா. வ :—பரப்ரஹ்மத்தின் தர்மங்களைச் சொல்லும் கீதா வாக்கியங்களைச் சொல்லும்.

வாதி :—"ஸர்வஸ்யசாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஞான மபோஹனஞ்ச, ஈஶ்வரஸ் ஸர்வபூதானும் ஹ்ருத்தேஶேர்ஜுன திஷ்டதி, வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய: வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம்" (கீதா. 15-15) உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: । யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:" (15-17) "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம், காமாவிஶ்ய ச பூதானி தாரயாம்யஹமோஜஸா, புஷ்ணுமி சோஷதீஸ்ஸர்வா:" (15-13) "பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான், புருஷம் ஶாஶ்வதம் தேவ்மாதி தேவமஜம் விபும்" (10-12) "ஆஹுஸ்த்வா ம்ருஷயஸ்

ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ்ததா । அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷிமே । ஸர்வமேதத்ருதம் மன்யே யன் மாம் வதஸி கேஶவ" (10-14) இத்யாதி கீதா வாக்யங்கள் ஸர்வ ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் நியாமகனு யிருக்கை (ஸர்வநியாமக த்வம்), ஞானதாத்ருத்வம், மோஹ தாத்ருத்வம், ஸ்மரணதாத் ருத்வம், ஸகலவேத ப்ரதிபாத்யத்வம், வேதாந்த கர்த்ருத்வம், ஸமஸ்தவேத வேத்யத்வம், ஸர்வோத்தமத்வம், ஸர்வபின்னத் வம், லோகப்ரவேஶம், லோகரக்ஷகத்வம், நாஶரஹிதத்வம், ஸ்வா மித்வம், ப்ராஹ்மணுதிவர்ண ஸ்ருஷ்டி கர்த்ருத்வம், உலகத்தி லுள்ள ஸர்வ ப்ராணிகளின் தாரகத்வம், ஓஷதிபோஷகத்வம், ப்ரஹ்மத்வம், தேஜோரூபத்வம், பவித்ரத்வம், புருஷத்வம், (பூர்ணஷட்குணத்வம்) ஶஸ்வதேக ப்ரகாரத்வம், க்ரீடாதி குணவத்வம், தேவகாரணத்வம், உத்பத்திராஹித்யம், வ்யாப்த த்வம் இத்யாதி குணங்களையும், அவைகளின் ஸத்யத்வத்தையும் சொல்லுகின்றன.

வா. வ:—பரமாத்மா குணங்களுடன் (தர்மங்களுடன்) கூடினவனென்கிற விஷயத்தில் அனுமான ப்ரமாணத்தைச் சொல்லும்?

வாதி:—"பரமாத்மா பூர்ணுனந்த:, ஜகத்ப்ரேரகத்வாத்" (பரமாத்மா பூர்ணுநந்த முடையவன், ஜகத்தை ப்ரேரேபிக்கிற தினுல்) என்கிற அனுமானம் பரமாத்மனின் பூர்ணுநந்தத்வ குணத்தை அறிவிக்கிறது.

வா. வ:—அனுமானம் வேண்டியதைப் போல் செய்வதற்கு வருகிறது. 'பரமாத்மா ந பூர்ணுனந்த: சேதனத்வாத், அஸ் மதாதிமத்' (நாங்கள் சேதனராக இருப்பதினுல் எப்படி பூர்ணு னந்தர்களாக இல்லையோ, அப்படியே பரமாத்மனும் சேதனனு யிருப்பதினுல் பூர்ணுனந்தனல்ல) என்றும் அனுமானம் செய் வதற்கு வருகிறதினுல் அனுமாணம் ப்ரமாணமென்று எப்படி ஒப்புக்கொள்ளலாம்?

வாதி:—'அனுமானம்' என்கிற ஶப்தத்தில்—'அனு' என்றும் 'மானம்' என்றும் இரண்டு பாகங்களிருக்கின்றன.

அவைகளில் 'அனு' என்ருல் இதர ப்ரமாணங்களை யனுசரித்து 'மானம்' என்ருல் யதார்த்த ஞானத்தை பிறப்பிக்கக்கூடியது என்று அர்த்தமாகிறபடியால்—கேவல அனுமானம் ப்ரமாண மாகாவிடினும், வேதாதி ப்ரமாணங்களின் ஆனுகூல்ய மிருக்கும் அனுமானம் ப்ரமாணமாகிறது. நாங்கள் சொல்லிய அனு மானத்திற்கு—' கோஹ்யே வான்யாத் க: ப்ராண்யாத் யதேஷ ஆகாஶ ஆனந்தோ நஸ்யாத் ' என்கிற வேதம் ஸஹாயமிருப்பதி னுல் இந்த அனுமானம் ப்ரமாணமாகிறது.

வா. வ :—ப்ரத்யக்ஷப்ரமாணத்தைச் சொல்லும்.

வாதி :—ஞானிகளின் ப்ரத்யக்ஷத்தினுல் ஈஶ்வரன் கர்த்ருத் வாதிகுணபூர்ணனென்று ஸித்தமாகிறது.

வா. வ :—ஞானிகளுக்கு கர்த்ருத்வாதி குணங்களின் ப்ரத் யக்ஷ மிருக்கிறதென்று உமக்கெப்படி தெரியும் ?

வாதி:—வேதவாக்யங்களினுலும், கீதாவாக்யங்களினுலும் ஞானிகளுக்கு—பரப்ரஹ்மம் கர்த்ருத்வாதி குணங்களுடன் கூடினதென்கிற ப்ரத்யக்ஷமிருக்கிறதென்று தெரிந்துவருகிறது.

வா. வ :—அவ்வேத வாக்யமேது ?

வாதி :—" யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோனிம் " என்கிற முண்டக ஶ்ருதி—ஞானி தங்க நிறமுள்ள, கர்தா = ஸ்வாமியான, சதுர்முகப்ரஹ்மாவுக்கு காரணனுன பரமாத்மனை காணுகிருனே என்று சொல்லுகிற தினுல் ஞானிகளுக்கு கர்த்ருத்வாதிகளின் அபரோக்ஷ ஞானம் (ப்ரத்யக்ஷம்) உண்டென்று தெரியவருகிறது.

வா. வ :—கீதா வாக்கியமேது ?

வாதி :—" பஶ்யாமி த்வாம் ஸர்வதோநந்த ரூபம் " (11-16) " த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம் லோகத்ரயம் ப்ரவ் யதிதம் மஹாத்மன் " (11 - 20) இத்யாதி அநேக கீதாவாக்கி யங்கள்—அநேக குணங்களுடன் கூடியிருக்கும் பரமாத்மனிட ரூபத்தை அர்ஜுனுதிகள் கண்டிருக்கிருர்களென்று சொல்லு

வதினால் குணங்களுடன் கூடியிருக்கும் பரமாத்மனிட ப்ரத்யக்ஷம் ஞானிகளுக்கு உண்டென்று ஸித்தமாகிறது.

இவ்விதமாக வேதம், ஸூத்ரம், கீதா, ப்ரத்யக்ஷம், அனுமானம் இவ்வெல்லா ப்ரமாணங்களும்—ஈஶ்வரன் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களுடன் கூடினவன் என்று அறிவிக்கின்றபடியால் ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி ஸமஸ்த கல்யாண குணங்களுடன் கூடினதென்று ஸித்தமாகிறது.

## ப்ரதிவாதி விசாரணை.

கோர்ட் :—உம்மிட பெயரென்ன?

பி. வா :—கங்காதர ஶாஸ்த்ரிகள் ஐயா.

கோர்ட் :—ஈஶ்வர ஸாக்ஷியாக கோர்டார் ஸமுகத்தில் நான் சொல்லுவதெல்லாம் ஸத்யமேயொழிய பொய்யல்ல என்று சொல்லும்.

பி. வா :—ஈஶ்வர ஸாக்ஷியாக கோர்டார் முன்னிலையில் நாம் சொல்லுவதெல்லாம் வ்யாவஹாரிக ஸத்ய மானவைகளேயொழிய வேறல்ல.

பி. வ :—இவ்விஷயத்தில் நீர் என்ன சொல்லுகிறீர்?

பி. வா :—பர்ப்ரஹமம் நிர்குணம் (ஸகலதர்மரஹிதம்) அந்த ப்ரஹ்மத்தில் — ஸர்வஞ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், முக்தாமுக்த ஸர்வ நியாமகத்வம், ஸர்வ ஸ்வாமித்வம், ஸர்வ ஸ்வதந்த்ரத்வம், ஸர்வ ஸம்ஹாரகத்வம், ஞானதாத்ருத்வம், ஸர்வோத்தமத்வம், விசித்ரஶக்திமத்வம், முதலிய குணங்களில்லை என்று நாங்கள் சொல்லுகிறோம்.

பி. வ :—பரப்ரஹ்மம் நிர்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்கிற விஷயத்தில் ஆதாரமென்ன?

பி. வா :—வைதிகரான நமக்கு வேறு ஆதாரங்கள் ஏது இருக்கிறது? வேதம், ஸூத்ரம், கீதை இவைகளே ஆதாரங்கள்.

பி. வ :—ப்ரஹ்மம் ஸகல தர்மரஹித மென்கிற விஷயத்தில் ஶ்ருதிகளைச்சொல்லி அர்த்தம் சொல்லும்.

## எக்ஸிபிட்ஸ்.

பி. வா :—

(1) "கேவலோ நிர்குணஶ்ச" (ஶ்வேதாஶ்வதரம் 6-11.) என்கிற ஶ்ருதி பரப்ரஹ்மம் நிர்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்று சொல்லுகிறது.

(2) "அஸ்தூல மநண்வஹ்ரஸ்வ மதீர்க்க மலோஹித மஸ்னேஹ மச்சாய மதமோவாய் வனாகாஶ மஸங்கமரஸ மகந்த மசக்ஷுஷ்க மஶ்ரோத்ர மவாகமனோதேஜஸ்க மப்ராண மமுகமமாத்ர மனந்தர மபாஹ்யம், நததஶ்னாதி கிஞ்சன நததஶ்னாதி கஶ்சன" (ப்ருஹ. 3-8-8.) என்கிற வாக்யத்திற்கு — அஸ்தூலம் = பெரியதல்ல, அநணு = சின்னதல்ல, குட்டையல்ல, நீட்டல்ல (இப்படி நாலு விதமான பரிமாணங்களில்லாததினால் த்ரவ்யமல்ல) அலோஹிதம் = இரக்தம் அல்ல, ஸ்நேஹமல்ல, சாயா (நிழல்) ரூபமல்ல, தமோ ரூபமல்ல, வாயு ரூபமல்ல, ஆகாஶ ரூபமல்ல, ஸங்க ரூபமல்ல, ரஸ ரூபமல்ல, கந்த ரூபமல்ல, சக்ஷு ரூபமல்ல, அல்லது—கண்ணில்லாதது, காதில்லாதது, வாகிந்த்ரிய ரூபமல்ல, மனோ ரூபமல்ல, தேஜோரஹிதமானது, (அக்னி ஸூர்யாதிகளின் ப்ரகாஶத்தைப்போல் ப்ரகாஶ முடையதல்ல), ஆத்யாத்மிக வாயு ரூபமல்ல, முக ரூபமல்ல, அமாத்ரம் = மிதிக்கு காரணமல்ல, அந்தர ரஹிதம் = உள்ளில்லாதது, பாஹ்ய ரஹிதம், பக்ஷணம் செய்வதல்ல, ஜனங்களால் பக்ஷிக்கப்படுவதல்ல என்று அர்த்தமிருக்கிறபடியால் ப்ரஹ்மம் ஸ்தூலத்வாதி தர்மங்களுடன் கூடினதல்லவென்று ஸித்தமாகிறது.

(3) "யத்த தத்ரேஶ்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுஶ்ரோத்ரம் ததபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் । ததவ்யயம் யத்பூதயோனிம் பரிபஶ்யந்தி தீரா:" என்கிற 1-1-6-வது முண்டகஶ்ருதிக்கு—ப்ரஹ்மம்,

அத்ரேஶ்யம் = ஞானேந்த்ரியங்களுக்கு அகப்படாதது, (புலப் படுவதல்ல), அக்ராஹ்யம் = கர்மேந்த்ரியங்களால் க்ரகிக்கப் படுவதல்ல, கோத்ர மில்லாதது (அதற்கு பிறப்பித்த வனில் லாததினுல் மூலபுருஷ ரஹிதமானது), அவர்ணம் = ஸ்தூலத்வ ஶுக்லத்வாதி தர்மரஹிதமானது, கண்ணில்லாதது, காதில் லாதது, அபாணிபாதம் = கர்மேந்த்ரியங்களில்லாதது, நாச மில் லாதது, விபும் = விவிதபதார்த்த ரூபங்களை அடைவது, ஸர்வ கதமானது, அத்யந்த ஸூக்ஷ்மமானது, அவ்யயம் = கை கால் முதலிய அவயவங்களின் நாச மில்லாதது, இராஜாக்களின் த்ரவ்யங்கள் எப்படி நாச மடைகிறதோ அத்தகைய த்ரவ்யாதி களின் நாச மில்லாதது, இவ்விதமான பரப்ரஹ்மமேது உண் டோ, அந்த ஸர்வப்ராணிகளுக்கு காரணமான அக்ஷரநாமக மான பரப்ரஹ்மத்தை விவேகிகள் அறிகிறுர்கள் என்று அர்த்த மிருக்கிறபடியால் பரப்ரஹ்மம் இந்த்ரியங்களால் அறியப்படு வது, பிறப்பில்லாதது, ஸ்தூலத்வாதி தர்மங்களில்லாத தென்று ஸித்தமாகிறது.

(4) "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான் ந பிபேதி குதஶ்சன" என்கிற 3-9-வது தைத்திரீய ஶ்ருதி—யத: = எந்த ஆனந்த ரூபனுன பரமாத்மனுல், வாச: = ஶப்தங்கள், (பரமாத்மனே அறிவிக்காமலே) மனதுடன் கூடிக்கொண்டு நிவ்ருத்தமாகின் றனவோ (ப்ரஹ்மத்தைப் போதிப்பதில்லேயோ) என்று அறி விக்கிறது. எப்படி—'தண்டீ' என்கிற ஶப்தம் தண்ட ரூப மான த்ரவ்யத்துடன் கூடிக்கொண்டிருக்கும் புருஷனே போதிக் கிறதோ, 'ஶ்யாம:' என்கிற ஶப்தம் ஶ்யாம குணத்துடன் கூடி யிருக்கும் புருஷனே போதிக்கிறதோ, 'பாசக:' என்கிற ஶப்தம் பசனக்ரியையுடன் கூடிய மனிதனே போதிக்கிறதோ, அப்படி யே—ப்ரஹ்மத்தில் த்ரவ்யம், குணம், கர்மம் இது முதலிய ஏதாவது தர்ம மிருக்குமாயின், அந்த தர்ம நிமித்தமாக அந்த தர்ம விஶிஷ்டவஸ்துவை போதிக்கும் ஶப்தம் ப்ரஹ்மத்தில் ப்ரவர்த்திக்கும். (ப்ரஹ்ம வாசகமாகும்) அப்போது ப்ரஹ்மம் ஶப்தத்தினுல் வாச்யமாய் ப்ரஹ்மம் அவாச்ய மென்பது பொருந்

தாது. ப்ரஹ்மம் அவாச்ய மென்று இந்த ஶ்ருதி ஸ்பஷ்டமாகச் சொல்லிக் கொண்டிருப்பதினால் ப்ரஹ்மத்தில் எந்த தர்மமு மில்லை என்று ஸித்தமாகிறது.

(5) "அஶப்தமஸ்பர்ஶ மரூபமவ்யயம் ததாரஸம் நித்ய மகந்தவச்ச யத் | அனாத்யநந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யு முகாத் ப்ரமுச்யதே" என்கிற 1-3-15-வது காடக வாக்யத்திற்கு—ப்ரஹ்மம், ஶப்த ஸ்பர்ஶரூப ரஸகந்த ரூபமான குணங்களில்லாதது, நாஶமில்லாதது, நித்யமானது, காரண ரஹிதமானது, (ப்ரஹ்மத்தைப் பிறப்பிக்கும் வஸ்து எதுவும் இல்லை.) அனந்தம் = அந்தமென்றால் கார்யம் (பலன்) அதினால் ரஹிதமானது, மஹத்தத்வத்தைவிட விலக்ஷணமானது, இத்தகைய ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டு ம்ருத்யு ரூபமான ஸம்ஸாரத்திலிருந்து விடுதலையடைகிறான் என்று அர்த்தமிருக் கிறபடியால் இந்த ஶ்ருதியினாலும் ப்ரஹ்மத்தில் தர்மங்களில்லை என்று ஸித்தமாகிறது,

பி. வா:—ஶாஸ்த்ரிகளே! இவ்விஷயத்திற்கு ஆதாரமான கீதா ஶ்லோகத்தைச் சொல்லும்.

பி. வா:—

(6) "நிர்குணம் குணபோக்த்ருச" என்கிற 13-14-வது கீதா வாக்யம் 'நிர்குணம்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மத்தில் குணங்கள் (தர்மங்கள்) இல்லை என்று சொல்லுகிறது.

பி. வா:—இவ்விஷயத்தில் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஆதார மிருக்குமாயின் அதைச்சொல்லி அர்த்தம் சொல்லும்.

பி. வா:—

(7) "ந ஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி" என்கிற 3-2-11-வது ஸூத்ரம்—பிரஹ்மத்தில் விருத்த மான இரண்டுவித தர்மங்களை அங்கீகரிக்க முடியாதாகையால் ஒரே விதமானது அதாவது நிர்விஶேஷமானது என்று சொல்லு கிறது. இப்படி எல்லா வேதாந்த வாக்யங்களும், ப்ரஹ்மம் நிர்விசேஷமென்றே சொல்லுகிறதினால் ப்ரஹ்மம் நிர்விஶேஷ

மென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். ஸகுண மென்ருகிலும், ஸகுண நிர்குணேபய ரூபமென்ருகிலும் ஒப்புக்கொள்ளக் கூடா தென்று ஸித்தமாகிறது.

## க்ராஸ் எக்ஜாமினேஷன்.

(1) கேவலோ நிற்குணஶ்ச என்கிற ஶ்ருதி விசாரணே.

வா. வ:—ஶாஸ்த்ரிகளே! சங்கராசார்யரால் இயற்றப் பட்ட கீதா பாஷ்யத்தைப் பார்த்திருக்கிறீரு?

பி. வா:—பார்த்திருக்கிறேம்.

வா. வ:—"நிற்குணம் குணபோக்த்ரு ச" என்கிற 13-14 வது கீதா ஶ்லோகத்திலுள்ள 'நிற்குணம்' என்கிற பதத்திற்கு சங்கராசாரியர் என்ன அர்த்தம் செய்திருக்கிறுர்?

பி. வா:—"நிற்குணம் = ஸத்வ ரஜஸ்தமாம்ஸி குணு: தைர்வர்ஜிதம்" என்று நிற்குணபதத்திர்க்கு ஸத்வரஜஸ்தமோ குணரஹிதமென்று அர்த்தம் செய்திருக்கிறுர்.

வா. வ:—ஶ்வேதாஶ்வதரோபனிஷத்தின் ஶாங்கர பாஷ் யத்தைப் பார்த்திருக்கிறீரா?

பி. வா:—பார்த்திருக்கிறேம். ஆனல் அந்த பாஷ்யம் ஆத்ய சங்கராசார்யர் செய்ததோ, இரண்டாவது சங்கராசார்யர் செய்ததோ என்கிற விஷயத்தில் விசாரமிருக்கிறது.

வா. வ:—யாராவது செய்திருக்கட்டும். அது உமக்கு மான்யமே யல்லவா?

பி. வா:—மான்யமே.

வா. வ:—அதில் 'நிற்குணஃ' என்கிற பதத்திற்கு என்ன அர்த்தம் செய்திருக்கிறுர்?

பி. வா—கீதா பாஷ்யத்தில் செய்திருப்பதைப் போலவே 'நிற்குணம் ஸத்வரஜஸ்தமாம்ஸி குணுஃ தைர்வர்ஜிதம்', ஸத்வர ஜஸ்தமோ குணங்களில்லாதவன் என்றே அர்த்தம் செய்திருக் கிறுர்.

வா. வ :—இந்த ‘நிற்குண’ பதத்தினால் ப்ராஹ்மத்தில் என்ன ஸித்தமாகிறது ?

பி. வா :—ப்ரஹ்மம் ஸத்வகுணத்தினாலும், ரஜோகுணத்தினாலும், தமோகுணத்தினாலும் ரஹிதமானதென்று ஸித்தமாகிறது.

வா. வ :—ஸகல தர்மரஹிதமானது = ஸர்வகுணரஹிதமானது (ஸர்வஞ்ஞத்வாதி எந்த தர்மமுமில்லாதது) என்று ஸித்திக்காதல்லவா ?

பி. வா :—ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி எந்த தர்மமுமில்லாததென்று ஸித்திக்காது.

வா. வ :—ஶாஸ்த்ரிகளே ! ‘கேவலோ நிற்குணஶ்ச’ என்கிற ஶ்ருதிக்கு பூர்வவாக்யம் யாது ?

பி. வா :—“ ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூடஸ்ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா । கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா ” (ஶ்வே. 6–11.) என்கிற வாக்யம்.

வா. வ :—இவ்வாக்யத்திற்கு அர்த்தமென்ன ?

பி. வா :—ஏக: = ஒருவனே (இரண்டாவது வஸ்துரஹிதன்), தேவ := க்ரீடாதி குணங்களுடன் கூடினவன், ஸர்வபூதேஷு கூட: = எல்லா ப்ராணிகளிலும் இருப்பவன், மற்றும் எல்லாவற்றிலும் வ்யாபித்து (நிறைந்து) இருப்பவன், அவ்வளவேயன்றி—எல்லா ப்ராணிகளிலுமிருந்து நியமிப்பவன், கர்மாத்யக்ஷ: = ப்ராணிகளால் செய்யப்படும் கர்மங்களுக்கு பலனைக் கொடுப்பவன், ஸர்வபூதாதிவாஸ: = ஸர்வப்ராணிகளுக்கும் ஆஶ்ரயன், ஸாக்ஷீ = எல்லாவற்றையும் காண்கிறவன், கேவல: = ஶுத்தன், நிற்குண: = ஸத்வரஜஸ்தமோகுணங்களில்லாதவன் என்று அர்த்தம்.

வா. வ :—இவ்வாக்யத்தினால் பாரப்ரஹ்மத்திற்கு எந்தெந்த குணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது ?

பி. வா :—க்ரீடாதி குணங்கள், ஸர்வகதத்வம், ப்ராணிநியாமகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வாஶ்ரயத்வம், இவை முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

வா. வ :—'ஏகம்' என்கிற பதத்திற்கு எத்தனை அர்த்தங்களிருக்கின்றன ?

பி. வா: —'ஏகே முக்யான்ய கேவலாஃ' என்கிற கோஶத்தை யனுஸரித்தும், இதர ப்ரமாணங்களை யனுஸரித்தும்—முக்யம், அன்யம் (வேறு) கேவலம், அஸஹாயம் முதலிய அர்த்தங்களுண்டு.

வா. வ :—'ஸர்வ பூதாந்தராத்மா' முதலிய இவ்வாக்யங்களினால் எல்லா ப்ராணிகளையும் நியமிப்பவன், ஸர்வவ்யாபகன், கர்ம பலன்களைக் கொடுப்பவன், ஸர்வாஶ்ரயன் என்று சொல்லப்பட்டிருப்பதினால் ப்ரஹ்மத்தைவிட வேறான இரண்டாவது வஸ்து உண்டென்று 'ஏ கோதேவ :' முதலிய ஶ்ருதிகளினால் ஸித்திக்கிறதா ? இல்லையா ?

பி. வா :—ப்ரஹ்மத்தைவிட வேரான இரண்டாவது வஸ்து உண்டென்று ஸித்திக்கிறது.

வா. வ :—'ஏக :' என்கிற பதத்திற்கு நீங்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்கள் ?

பி. வா :—'ஏக :' ஒருவனே, இரண்டாவது வஸ்து இல்லை என்று சொல்லுகிறோம்.

வா. வ :—இவ்வாக்யத்தின் மேல் இருக்கும் பதங்களினால் இரண்டாவது வஸ்து உண்டென்று ஸித்தமாய்க்கொண்டிருக்க—இவ்வாக்யத்திலிருக்கும் 'ஏகஃ' என்கிற பதத்திற்கு இரண்டாவது வஸ்து இல்லை என்று நீங்கள் அர்த்தம் செய்வது 'மே மாதா வந்த்யா' (என் தாய் மலடி) என்று சொல்லுவதைப் போல் விருத்தமாகிறதல்லவா ?

பி. வா :—(பதில் இல்லை.)

வா. வ :—‘ தமீஸ்வராணும் பரமம் மஹேஸ்வரம் தம் தேவ தாஞம் பரமம் ச தைவதம் | பதிம் பதீனும் பரமம் பரஸ்தாத் யஜாம தேவம் புவனேஶமீட்யம்’ என்கிற வாக்யம் எந்த உப நிஷத்திலிருக்கிறது ?

பி. வா :—இவ்வாக்யம் ஶ்வேதாஶ்வதரோபனிஷத்தின் 6-வது அத்யாயத்தில் ‘கேவலோ நிற்குணஶ்ச’ என்கிற 11-வது மந்த்ரத்திற்கு முன்னிருக்கும் 7-வது மந்த்ரமே.

வா. வ :—இம்மந்த்ரத்திற்கு அர்த்தமென்ன ?

பி. வா :—ஈஶ்வராணும் = ஜகத்துக்கு எத்தனே நியாமகர்கள் உண்டோ அந்த எல்லாரையும் விசேஷமாக நியமிப்பவன், தேவாஞம் ஹி தேவ : = தேவதைகளுக்கு தேவத்வத்தைக் கொடுப்பவன், ஜகத்துக்கு எந்தனே பாலனகர்த்தாக்களுளரோ அவரெல்லோரையும் பாலிப்பவன், எல்லா ஜகத்துக்கும் ஸ்வாமி, மற்றும் துதிக்கப்படுபவன், இத்தகைய பரமாத்மனே அறிந்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தம்.

வா. வ :—இவ்வாக்யத்தினுல் என்ன ஸித்தமாகிறது ?

பி. வா :—ப்ரஹ்மத்திற்கு ஸர்வநியாமகத்வம், பாலகத்வம், ஸ்வாமித்வம், முதலிய குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ :—“ஏகோ வஶீ நிஷ்க்ரியாணும் பஹூனும் ஏகம் பீஜம் பஹுதா ய: கரோதி | தமாத்மஸ்தம் யேனுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்” (ஶ்வே. 6-12.) இதற்கு அர்த்தமென்ன ? இதினுல் என்ன ஸித்தமாகிறது ?

பி. வா :—பரமாத்மா ஸகல ஸாமர்த்யமுள்ளவன், அநேக பதார்த்தங்களேப் படைப்பவன், எந்த ஜனங்கள் அந்த பரமாத்மனே ஸர்வஸ்வாமித்வம் முதலிய குணங்களுடன் கூடினவனென்று அறிந்துக் கொள்ளுகிருர்களோ அவர்களுக்கு ஶாஶ்வதமான ஸுகமுண்டாகிறது, இதரர்களுக்கு இல்லே என்று அர்த்தமாகிறது. இவ்வாக்யத்தினுல் பரமாத்மனுக்கு அநேக

ஸாமர்த்யங்களும், பதார்த்தங்களைப் படைத்தல், ஜ்ஞேயத்வம், மோக்ஷதாத்ருத்வம், இவை முதலிய குணங்களுமுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ:—"நித்யோ நித்யானாம் சேதனஸ் சேதனானாம்" (ஶ்வே. 6-13.) என்கிற வாக்யத்தினால் என்ன ஸித்தமாகிறது?

பி. வா:—பரமாத்மா நித்ய பதார்த்தங்களுக்கு நித்யத்வத்தைக் கொடுப்பவன், சேதனபதார்த்தங்களுக்கு சைதன்யத்தைக்கொடுப்பவன், என்று பரமாத்மனுக்கு நித்யத்வ ப்ரதத்வம், சைதன்ய ப்ரதத்வம் என்கிற குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ:—"ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்" (ஶ்வே. 6-14) இவ்வாக்யத்தினால் என்ன ஸித்தமாகிறது?

கோர்ட்:—Mr. தாஸ்! ஒரு உபனிஷத்திலேயே எவ்வளவென்று கேழ்க்கிறீர்கள்? இது போதும். வேறு வாக்யங்களின் விசாரம் நடக்கட்டும்.

வா. வ:—தர்மராஜப்ரபோ! அத்வைதிகள் ப்ரஹ்மம் நிர்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்கிற விஷயத்தில் இவ்வுபனிஷத்திலுள்ள 'கேவலோ நிர்குணஶ்ச' என்கிற வாக்யம் முக்யமானதென்று அடிக்கடிச் சொல்லுகிறார்கள். இவ்வாக்யத்திலும், இவ்வாக்யத்தின் பூர்வோத்தர அநேக வாக்யங்களிலும், பரமாத்மனுக்கு — ஜகத்காரணத்வம், பாலகத்வம் முதலிய அநேக குணங்கள் சொல்லியிருப்பதினாலும், சங்கராசார்யரும் 'நிர்குண:' என்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ்தமோகுணரஹிதமென்று அர்த்தம் செய்திருப்பதினாலும் இந்த ஶ்ருதி பரப்ரஹ்மத்திற்கு ஸகலதர்ம ராஹித்யத்வத்தைச் சொல்லுகிறதில்லை என்பதைக் காட்டுவதற்காக இவ்வளவு விசாரம் செய்ய நேர்ந்தது. கோர்டார் உத்திரவின்படிக்கு இவ்விசாரத்தை முடிக்கிறோம். மறுபடியும் ஆவஶ்யகமானபோது விசாரிப்பதற்கு உத்திரவாக வேணுமாய்க் கோறுகிறோம்.

## (2.) அஸ்தூலமனணு என்கிற ஶ்ருதி விசாரணை.

வா. வ :—“ அஸ்தூல மனண்வஹ்ரஸ்வ மதீர்க்க மலோஹித மஸ்நேஹ மச்சாய மதமோவாய் வனுகாஶ மஸங்க மரஸ மகந்த மசக்ஷுஷ்க மஶ்ரோத்ர மவாகமனோதேஜஸ்க மப்ராண மமுக மமாத்ர மனந்தர மபாஹ்யம் நததஶ்னுதி கிஞ்சன நததஶ்னுதி கஶ்சன ” (ப்ருஹ. 3-8-8.) என்கிற ஶ்ருதி பரப்ரஹ்மத்தில் ஸகலதர்மங்களையும் நிராகரிக்கிறதா ? அல்லது சில தர்மங்களை மாத்திரம் நிராகரிக்கிறதா ?

பி. வா :—ஸ்தூலத்வம் முதலிய சில தர்மங்களை மாத்திரம் நிராகரிக்கிறதே யொழிய, ஸகல தர்மங்களையும் நிராகரிக்கிறதில்லை.

வா. வ :—‘ அஸ்தூல மனணு ’ என்கிற வாக்யம் எந்த உபனிஷத்தில் எந்த ப்ரகரணத்திலிருக்கிறது ?

பி. வா :—ப்ருஹதாரண்ய கோபனிஷத்தின் அக்ஷரநாமக பரமாத்ம ப்ரகரணத்திலிருக்கிறது.

வா. வ :—“ ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யா சந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:। ஏதஸ்ய...... த்யாவா ப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:, ஏதஸ்ய.......நிமேஷா முஹூர்தா: திஷ்டந்தி, ஏதஸ்ய......ப்ராச்யோன்யா நத்ய:.......திஷ்டந்தி, ஏதஸ்ய.......தததோ மனுஷ்யா:” இது முதலிய வாக்யங்கள் எந்த ப்ரகரணத்திலிருக்கின்றன ?

பி. வா :—அக்ஷர ப்ரகரணத்தில்—‘ அஸ்தூல மனணு ’ என்கிற வாக்யத்திற்கு மின்னிருக்கிறது.

வா. வ :—‘ ஏதஸ்ய வா ’ என்கிற வாக்யத்திற்கு என்ன அர்த்தம் ?

பி. வா :—இந்த அக்ஷரத்தின் ப்ரஶாஸனையினால் (உத்திரவினால்) ஸூர்யன், சந்திரன், த்யுலோகம், ப்ருதிவீ, ததபிமானி தேவதை, நிமேஷம், முகூர்த்தம், அஹோராத்ரங்கள், அர்த்த மாதம், மாதம், ருது, ஸம்வத்ஸரம், அவைகளின் அபிமானி தே

வதைகள், முதலியவைகளெல்லாம், வித்ருத: = தரிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம்.

வா. வ :—உங்களிட ஶாங்கர பாஷ்யத்தில் ‘ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய’ என்கிற வாக்யம் எதற்காக ப்ரவ்ருத்த மாயிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது ?

பி. வா :—அக்ஷரநாமக பரமாத்மா இருக்கிறுனென்கிற விஷயத்தில் ப்ரமாணத்தை அறிவிப்பதர்க்காக ப்ரவ்ருத்தமாயிருக்கிறதென்று நம்மாசார்யர் தம்மிட பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறுர்.

வா. வ :—இவ்வாக்யம் அக்ஷரநாமக பரமாத்மா இருக்கிறுரென்கிற விஷயத்தில் எந்த ப்ரமாணத்தை அறிவிக்கிறதென்று உங்களிட ஆசார்யர் சொல்லியிருக்கிறுர் ?

பி. வா :—(1) “ஜகத்வ்யவஸ்தா ப்ரஶாஸ்த்ருபூர்விகா, வ்யவஸ்தாத்வாத் ராஜ்யவ்யவஸ்தாவத்” = எப்படி ராஜ்யவ்யவஸ்தை ஓர் ஶாஸகனுன ராஜனிருந்தால் தான் நடக்கிறதோ அப்படியே ஜகத்தின் வ்யவஸ்தை ஓர் ஶிக்ஷகனிருந்தால் தான் நடக்கும். ஆகையால் ஜகத்துக்கு ஓர் ஶிக்ஷகனிருக்கிறுனென்று அங்கீகரிக்கவேண்டும். அந்த ஶிக்ஷகனே அக்ஷரநாமக பரமாத்மா என்று அக்ஷரநாமக பரமாத்மனிட விஷயத்தில் அனுமான ப்ரமாணத்தை அறிவிக்கிறது.

(2) “விமதௌ விஶிஷ்டஞானவதா நிர்மிதௌ ப்ரகாஶகத்வாத் தீபவத்” = எப்படி தீபம் புத்தியுடைய புருஷனுல் நிர்மிக்கப் பட்டிருக்கிறதோ, அப்படியே ஜகத்துக்கு ப்ரகாஶத்தைக் கொடுக்கும் ஸூர்ய சந்திரர்களும் புத்திமானுன புருஷனுல் நிர்மிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஸூர்ய சந்திராதிகளை நிர்மிக்கும் அக்ஷரநாமக பரமாத்மா இருக்கிறுனென்கிற விஷயத்தில் அனுமான ப்ரமாணத்தை அறிவிக்கிறது.

(3) “விமதௌ நியந்த்ருபூர்வகௌ, விஶிஷ்ட சேஷ்டாவத்வாத் ப்ருத்யவத்” = எப்படி சேவகனுக்கு ஓர் நியந்த்ரு (நியமிப்பவன்) இருக்கிறுனே அப்படியே ஸூர்ய சந்திராதி

களுக்கும் நியமிப்பவனிருக்க வேண்டும், அவனே அக்ஷரநாமக பரமாத்மனென்று அனுமான ப்ரமாணத்தை அறிவிக்கிறது.

(4) "விமதே ப்ரயத்னவதா வித்ருதே, அஸ்வாதந்த்ர்யாத், ஹஸ்தங்யஸ்த பாஷாணவத்" = எப்படி கையிலிருக்கும் பாஷாணம் (கல்) ப்ரயத்தினத்துடன் கூடிய புருஷனால் தரிக்கப் பட்டிருக்கிறதோ, அப்படியே த்யுலோகம், ப்ருதிவீலோகம் ததபிமானி தேவதைகள் இவைகள் ப்ரயத்னமுடைய எந்த புருஷனால் தரிக்கப்பட்டிருக்கின்றனவோ அப்ரயத்னமுள்ள புருஷனே அக்ஷரநாமக பரமாத்மா என்று அனுமானத்தைக் காட்டுகிறது. இவ்விதமாக இவ்வாக்யம் ஜகத்தின் நியமனம், தாரணம், ஞானம், ப்ரயத்னம் முதலிய குணங்களுடன் கூடிய அக்ஷரநாமகனான பரமாத்மனை ஸித்தப்படுத்துகிறதென்று சங்கராசார்யர் சொல்லியிருக்கிறார்.

வா. வ:—இவ்வாக்யத்தினால் அக்ஷரநாமக பரமாத்மனிடத்தில் எந்தெந்த குணங்களுண்டென்று ஸித்தமாகிறது?

பி. வா:—நியந்த்ருத்வம், தாரகத்வம், ஞானம், ப்ரயத்னம், முதலிய குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ:—"தத்வா ஏததக்ஷரம் கார்க்யத்ருஷ்டம், த்ரஷ்ட்ரு,......ஶ்ரோத்ரு, மன்த்ரு, விஞ்ஞாத்ரு,......ஏதஸ்மின் கல்வக்ஷரே கார்கி ஆகாஶ ஓதஶ்ச ப்ரோதஶ்ச" என்கிற வாக்யத்திற்கு அர்த்தமென்ன? அதினால் என்ன ஸித்தமாகிறது?

பி. வா:—அக்ஷரநாமக பரமாத்மா த்ரஷ்ட்ரு, ஶ்ரோத்ரு, மந்த்ரு, விஞ்ஞாத்ரு, ஸகல ஜகத்துக்கு ஆதாரன் என்று அர்த்தமிருப்பதினால்—அக்ஷரநாமக பரமாத்மனிடத்தில்—த்ரஷ்ட்ருத்வம், ஶ்ரோத்ருத்வம், மந்த்ருத்வம், விஞ்ஞாத்ருத்வம் என்கிற குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ:—இவ்விதமாக இவ்வுத்தர வாக்யங்கள் அக்ஷரநாமக பரமாத்மனிட தாரகத்வம், ஞானம், ப்ரயத்னம், த்ரஷ்ட்ருத்வம், ஶ்ரோத்ருத்வம், நியாமகத்வம் முதலிய அநேக தர்மங்

களைச் சொல்லிக் கொண்டிருக்க—" அஸ்தூல மனணு " என்கிற ஸ்ருதி ஸ்தூலத்வம் முதலிய சில தர்மங்களில்லை என்று சொன்ன மாத்ரத்தினுலேயே பரமாத்மா நிற்குணன் (ஸகல தர்மரஹிதன்) என்கிற விஷயத்தில் நீங்கள் (அத்வைதிகள்) இந்த ஸ்ருதியை உதகரிப்பது எப்படிப் பொருந்தும் ?

பி. வா :—(பதிலில்லை.)

வா. வ:—" அணோரணீயான் மஹதோமஹீயான் " (காடகம் 1-2-20) " ஏஷ மே ஆத்மா அந்தர்ஹ்ருதயே அணீயான் வ்ரீஹேர்வா யவாத்வா ஸர்ஷபாத்வா ஶ்யாமாகாத்வா ஶ்யாமாக தண்டுலாத்வா ஏஷமே ஆத்மாந்தர்ஹ்ருதயே ஜ்யாயான் ப்ருதிவ்யா ஜ்யாயானந்தரிக்ஷாஜ்ஜ்யான் திவோ ஜ்யாயானேப்யோ லோகேப்ய: " (சாந். 3-14-3.) என்கிற வாக்யங்களுக்கு அர்த்தமென்ன ?

பி. வா:—பரமாத்மா மிகவும் அணுவாக இருக்கிறுன், மிகவும் மஹத்தாக இருக்கிறுன். இந்த பரமாத்மா என்னிட ஹ்ருதயதில் *வ்ரீஹி†யவாதிகளைவிட அணுவாக இருக்கிறுன். மற்றும் ப்ருதிவ்யாதிலோகங்களைவிட மஹான் ஸ்தூலனுய் இருக்கிறுனென்று அர்த்தம்.

வா. வ:—இவ்வாக்கியத்தினுல் என்ன ஸித்தமாகிறது ?

பி. வா :—பரமாத்மனிடத்தில் ஸ்தூலத்வம், அணுத்வம் என்கிற தர்மங்களிருக்கின்றனவென்று ஸித்திக்கிறது.

வா. வ:—' யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதன: । ம்ருத்யுர்யஸ்யோப ஸேசனம் ' (கா.) இவ்வாக்கியம் எந்த தர்மத்தைச் சொல்லுகிறது ?

பி. வா:—பரமாத்மனிடத்தில் ஸர்வபக்ஷணகர்த்ருத்வம் (ஸம்ஹார காரணத்வம்) என்கிற தர்மமுண்டென்று சொல்லுகிறது.

---

*நெல் †தான்ய விசேஷம்.

வா. வ:—இவ்விதமாக 'அணோரணீயான்' முதலிய அனேக ஶ்ருதிகள் பரமாத்மனிடத்தில் ஸ்தூலத்வாதி தர்மங்களைச் சொல்லிக்கொண்டிருக்க— 'அஸ்தூலமனணு' என்கிற ஶ்ருதி அந்த தர்மமில்லை என்று சொல்லுவது விருத்தமல்லவா?

பி. வா :—'அணோரணீயான்' என்கிற ஶ்ருதி வ்யாவஹாரிகஸ்தூலத்வாதி தர்மங்களைச் சொல்லுகிறது. 'அஸ்தூலமனணு' என்கிற ஶ்ருதி பாரமார்த்திக ஸ்தூலத்வாதி தர்மங்களை நிஷேதிக்கிறது ஆகையால் விரோதமில்லை.

கோர்ட் :—ப்ரமாணங்கள் தங்கள் விஷயங்களை தாத்விகமென்றே (பாரமார்த்திக ஸத்யமென்றே) அறிவிக்கின்றன வ்யாவஹாரிக மென்று அறிவிக்கிறதில்லை என்கிற விஷயத்திலும்; ப்ரமாணங்கள் வ்யாவஹாரிக வஸ்துவை அறிவிக்கின்றனவென்பதும், அப்ரமாண மென்பதும் ஒன்றே என்கிற விஷயத்திலும் உங்களிட க்ரந்தங்களே ஆதாரங்களா யிருப்பதினால் அதிற்கு விருத்தமாக பலதடவைகளில் அவ் வார்த்தையையே சொல்லவேண்டாம். வேரே தாகிலும் ஸமாதான மிருக்குமாயின் சொல்லும்?

பி. வா :—(பதிலில்லை.)

(3.) யத்ததத்ரேஶ்யம் என்கிற ஶ்ருதி விசாரணை.

வா. வ :—"யத்ததத்ரேஶ்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுஃஶ்ரோத்ரம் ததபாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் । ததவ்யயம் யத்பூதயோனிம் பரிபஶ்யந்தி தீரா:" (முண். 1-1-6.) என்கிற வாக்யம் அத்ருஶ்யத்வம் முதலிய சில தர்மங்களை மட்டில் நிராகரிக்கின்றனவா? அல்லது ஸர்வஞ்ஞத்வாதி எல்லா தர்மங்களையும் நிராகரிக்கின்றனவா?

பி. வா :—அத்ருஶ்யத்வாதி சில தர்மங்களைமட்டில் நிராகரிக்கின்றனவே யொழிய, எல்லா தர்மங்களையும் நிராகரிப்பதில்லை.

வா. வ :—இவ்வாக்யத்திலிருக்கும்—நித்யம், விபும், ஸர்வ கதம், ஸுஸூக்ஷ்மம், அவ்யயம், பூதயோனிம், பரிபஶ்யந்தி தீராஃ, என்கிற பதங்களினுல் எந்தெந்த தர்மங்கள் அறிவிக்கப் படுகின்றன ?

பி. வா :—நித்யத்வம், விபுத்வம், ஸூக்ஷ்மத்வம், பூத (ப்ராண) காரணத்வம், த்ருஶ்யத்வம், இவைகளே முதலிய தர்மங்கள் அறிவிக்கப்படுகின்றன.

வா. வ :—இவ்வாக்யத்திற்கு முன்னிருக்கும் “ ததாக்ஷராத் ஸம்பவதீஹ விஶ்வம் ” (முண். 1–1–7.) “ தபஸா சீயதே ப்ரஹ்ம ததோன்னமபி ஜாயதே । யஸ்ஸர்வஞ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஞானமயம் தப: । தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூபமன்னம் ச ஜாயதே ’ (முண். 1–1–9.) என்கிற வாக்யங்களின் அர்த்த மென்ன ?

பி. வா :—அக்ஷரநாமக பரமாத்மனுல் ஜகத்து உண்டாகிறது. பரமாத்மா உலகத்தைப் படைக்க வேண்டுமென்று விசாரம் செய்தான். பிறகு அந்த பரமாத்மனுல் அன்னம் (ப்ருதிவீ) உண்டாயிற்று. எந்த பரமாத்மா ஸர்வஞ்ஞனே, எல்லா பதார்த்தங்களையும் ஸாமான்யமாகவும் விசேஷமாகவும் அறிகிறவனே அவனிட தபஸ்ஸு ஞானஸ்வரூபமானது. அந்த பரமாத்மனுல் நாமாத்மக ப்ரபஞ்சம், ரூபாத்மக ப்ரபஞ்சம் அன்னம் இவைகள் உண்டாகின்றனவென்று அர்த்தம்.

வா. வ :—இவ்வாக்யத்தினுல் பரமாத்மனிடத்தில் எந்த தர்மங்களுண்டென்று ஸித்தமாகிறது ?

பி. வா :—பரமாத்மனிடத்தில் ஜகத்கர்த்ருத்வம், ஸர்வஞ்ஞத்வம் முதலிய குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ :—“ யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்ம யோனிம் ” என்கிற 3–1–3 வது முண்டக வாக்யத்திற்கு அர்த்தமென்ன ? அதினுல் எந்த தர்மங்கள் ஸித்தமாகிறது ?

பி. வா :—அந்த பரமாத்மா தங்கத்தைப் போன்ற நிர முடையவன், ஜகத்கர்தா, ஜகத்துக்கு ஸ்வாமீ, சதுர்முக ப்ரஹ்மனுக்கு காரணன் என்று ஜீவன் (அதிகாரி) எப்போது காணுகிருனே அப்போது அவனுக்கு மோக்ஷ முண்டாகிறதென்று அர்த்தம். இப்படி இந்த ஶ்ருதியினுல் பரமாத்மனிடத்தில் தங்கநிரம், ஜகத் கர்த்ருத்வம், ஸ்வாமித்வம், சதுர்முக காரணத்வம் முதலிய குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ :—" யத்ததத்ரேஶ்ய மக்ராஹ்யம் " என்கிற வாக்யத்தினுல்—த்ருஶ்யத்வம், நித்யத்வம், விபுத்வம், ஸூக்ஷ்மத்வம், பூதகாரணத்வம், அவ்யயத்வம் முதலிய தர்மங்கள் அறிவிக்கப் படுகின்றன. மற்றும் முன்னிருக்கும் வாக்யத்தினுலும்—ஜகத் கர்த்ருத்வம், ஸர்வஞ்ஞத்வம், ஸுவர்ண வர்ணத்வம், கர்த்ருத்வம், ஈஶத்வம், சதுர்முக காரணத்வம் முதலிய அநேக தர்மங்கள் தெரிய வருகின்றன. இப்படியிருக்க—ப்ரஹ்மத்தில் தர்மமே இல்லை, ப்ரஹ்மம் நிற்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்கிற விஷயத்தில் இவ் வாக்யம் எப்படி ஆதாரமாகும் ?

பி. வா :—(பதிலில்லை.)

(4.) யதோ வாசோ நிவர்தந்தே என்கிற ஶ்ருதி விசாரணை.

வா. வ :—" யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ " என்கிற வாக்யத்தினுல் ப்ரஹ்மம் அவாச்ய மென்று ஸித்திக்கிறதென்று சொல்லி யிருக்கிறீரல்லவா ? இவ் வாக்யத்தினுல் ப்ரஹ்மமே அவாச்யமென்று ஏன் சித்திக்கவேணும் ? ஶஶவிஷாணம் (முயற்கொம்பு) அவாச்யமென்று ஏன் ஸித்திக்கக்கூடாது ?

பி. வா :—' யதோ வாசோ நிவர்தந்தே ' என்கிற வாக்யத்திலுள்ள ' யத : ' என்கிற பதம் ப்ரஹ்மத்தை போதிக்கிறதினுல், யத: = எந்த ப்ரஹ்மத்திலிருந்து, வாச்: = ஶப்தங்கள் திரும்பி வருகின்றனவோ என்று அர்த்தமாய்க் கொண்டிருப்பதினுல் ப்ரஹ்மம் அவாச்யமென்று ஸித்தமாகிறது. ' யத:' என்கிற

K63
G4·4



பதம் ஸஸவிஷாணத்தை அறிவிக்கிறதில்லே. ஆகையால் ஸஸ விஷாணத்தினிடத்திலிருந்து ஸப்தம் திரும்பி வருகிறதென்று அர்த்த மாகாததினுல் ஸஸவிஷாணம் அவாச்யமென்று ஸித்த மாக மாட்டாது.

வா. வ :—'யத:' என்கிறபதம் ஸர்வநாமமாக இருப்பதி ஞல் அந்த பதத்தினுல் ஸஸவிஷாண மென்கிற அர்த்தத்தையும் எடுத்துக் கொள்ளலாமல்லவா ?

பி. வா :—ப்ரஸ்துதமான (புத்திவிஷயமான) அர்த்தம் 'யத:' என்கிற ஸர்வநாம பதத்தினுல் தெரியவருகிறது. முத லில் ப்ரஹ்மத்தை நிரூபித்து அவ்விஷயத்தில் ப்ரமாணமாக 'ததப்யேஷ ஶ்லோகோ பவதி, யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸாஸஹ ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்' என் கிற மந்த்ரத்தைச் சொல்லியிருப்பதினுலும் ; 'ஆனந்தம் ப்ரஹ் மணோ வித்வான்' என்று 'யத:' என்கிற பதத்திற்கு முன் ப்ரஹ் மஸப்தம் இருப்பதினுலும் 'யத:' என்கிற பதத்தினுல் ப்ரஹ் மத்தையே எடுத்துக்கொள்ளவேணுமே யொழிய ஸஸவிஷாணம் எடுத்துக் கொள்ளுவதற்கு முடியாது.

வா. வ :—'யத:' என்கிற பதமும், 'ப்ரஹ்ம' என்கிற பதமும் ப்ரஹ்மத்தை போதிக்கின்றனவல்லவா ? (ப்ரஹ்மத் தைக் குறித்து போகின்றன அல்லவா ?) ப்ரஹ்மத்தை அறிவிக் காமல் பின்னுக்கு திரும்புகிறதில்லே யல்லவா ?

பி. வா :—'யத:' 'ப்ரஹ்ம' என்கிற இவ்விரண்டு பதங் களும் ப்ரஹ்மத்தைக் குறித்து போகின்றன. இல்லாவிட்டால் இவ்வாக்கியம் எப்படி ப்ரஹ்மத்தை போதிக்கும் ?

வா. வ :—"பீஷாஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய: பீஷாஸ்மாதக்னிஶ் சேந்த்ரஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம:" (தை. 5-7.) என்கிற மந்த்ரத்திற்கு அர்த்த மென்ன?

பி. வா :—அஸ்மாத்=இந்த பரமாத்மனிட பயத்தினுல் வாயு தன்னிட வேலேயைச் செய்கிருன். ஸூர்யன், அக்னி, யமன்

இவர்களும் அந்த பரமாத்மனிட பயத்தினாலேயே தம்தம் வேலை களைச் செய்கிறார்கள் என்று அர்த்தம்.

வா. வ :—இவ்வாக்யத்தினால் என்னவென்று ஸித்தமாகி றது ?

பி. வா :—பரப்ரஹ்மம் அக்னி முதலியோருக்கு பயத்தைக் கொடுக்கிறதென்று ஸித்திக்கிறது.

வா. வ :—'அஸ்மாத்' என்கிற பதம் எதைத் தெரிவிக் கிறது ?

பி. வா :—ப்ரஹ்மத்தைத் தெரிவிக்கிறது.

வா. வ:—'ப்ரஹ்மவிதாப்னோதி பரம்......ஸத்யம் ஞான மனந்தம் ப்ரஹ்ம' என்கிற வாக்யங்களுக்கு அர்த்த மென்ன ?

பி. வா :—யார் பரப்ரஹ்மத்தை தெரிந்துக் கொள்ளுகிறார் களோ அவர்கள் பரப்ரஹ்மத்தை அடைகிறார்கள். அந்த பர ப்ரஹ்மம் ஸத்யமானது, ஞான ரூபமானது, அபரிச்சின்ன மானது என்று அர்த்தம்.

வா. வ :—இதினால் ப்ரஹ்மத்திற்கு எந்த தர்மம் ஸித்த மாகிறது ?

பி. வா :—ஞேயத்வம், ப்ராப்யத்வம், ஸத்யத்வம், ஞான ரூபத்வம், அபரிச்சின்னத்வம் இவைகள் ஸித்தமாகின்றன.

வா. வ :—இச்சுருதியிலிருக்கும் 'ப்ரஹ்ம' என்கிற பதம் எதை போதிக்கிறது ?

பி. வா :—பரப்ரஹ்மத்தை போதிக்கிறது.

வா. வ :—இப்படி அநேக ஶப்தங்கள் ப்ரஹ்மத்தை அறி வித்துக்கொண்டும் (ப்ரஹ்மத்தைக் குறித்துப் போய்க்கொண் டும்) ; தைத்திரீயத்திலிருக்கும் அநேக வாக்யங்களினால் ப்ரஹ் மத்தினிடத்தில் அநேக தர்மங்கள் ஸித்தித்துக் கொண்டும் இருக்க—ப்ரஹ்மம் நிர்குணம் (ஸகல தர்மரஹிதம்) அவாச்யம்

(ஶப்தத்தினல் அறியப்படுவதல்ல) என்பது பூர்வோத்தர விருத்த மாகிறது. ஆகையால் இவ்வாக்யம் ‘ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதம்’ என்கிற விஷயத்தில் ப்ரமாண மெப்படியாகும்?

பி. வா :—(பதிலில்லை.)

## 5. அஶப்தமஸ்பர்ஶம் என்கிற ஶ்ருதி விசாரணை.

வா. வ :—‘அஶப்தமஸ்பர்ஶம்’ என்கிற வாக்யத்தினல் ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி ஸகல தர்மரஹிதமென்று ஸித்தமாகிறதா? அல்லது சில தர்மங்களுடன் மாத்திரம் ரஹிதமென்று ஸித்தமாகிறதா?

பி. வா :—ஶப்த ஸ்பர்ஶ கந்தம் முதலிய சில தர்மங்களுடன் ரஹிதமென்று ஸித்தமாகிறதே யொழிய, ஸர்வஞ்ஞத்வாதி ஸகல தர்மரஹிதமென்று ஸித்தமாகிறதில்லை.

வா. வ :—இவ்வாக்யத்திலிருக்கும்—மஹத: பரம், த்ருவம், நித்யம் என்கிற வாக்யங்களினல் எந்த குணங்கள் ஸித்தமாகின்றன?

பி. வா :—மஹத்தத்வத்தைவிட உத்தமத்வம், த்ருவத்வம், நித்யத்வம் முதலிய குணங்கள் ஸித்திக்கின்றன.

வா. வ :—‘அணோரணீயான் மஹதோ மஹீயான்’ ‘ஈஶானே பூதபவ்யஸ்ய’ ‘யதஶ்சோதேதி ஸூர்யோஸ்தம் யத்ர ச கச்சதி, தம் தேவாஸ்ஸர்வேர்பிதா: ததுனத்யேதி கஶ்சன’ ‘ஏகோவஶீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் ரூபம் பஹுதா ய: கரோதி’ ‘நித்யோ நித்யானம் சேதனஶ் சேதனனம்’ ‘அங்குஷ்டமாத்ர: புருஷோந்தராத்மா ஸதா ஜனனம் ஹ்ருதயே ஸன்னிவிஷ்ட:’ இவைகளே முதலிய கடோபனிஷத்திலிருக்கும் வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் எங்தெந்த குணங்களைச் சொல்லுகின்றன?

பி. வா :—அணுத்வம், மஹத்வம், பின்னிருந்த ஜகத்துக்கும் முன்னுண்டாகும் ஜகத்துக்கும் ஸ்வாமித்வம், ஸூர்யோ

தயாஸ்தமயங்களின் காரணத்வம், ஸர்வதேவாதாரகத்வம், ஸர் வஸ்வாமித்வம், ஸர்வப்ராணிநியாமகத்வம், நாநாவிதரூபகர்த் ருத்வம், நித்யத்வப்ரதத்வம், சைதன்யதாயகத்வம், ஸர்வ ஜனங் களிட ஹ்ருதயத்திலிருந்து நியாமகத்வம் முதலிய குணங்களைச் சொல்லுகின்றன.

வா. வ :—' அஶப்தமஸ்பர்ஶம் ' என்கிற வாக்யத்தில் உத்க்ருஷ்டத்வாதி தர்மங்கள் சொல்லப்படுகிறது. மற்றும் அவ் வாக்யத்தின் பூர்வோத்தர வாக்யங்களிலும் அநேக தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. இப்படியிருக்க—ப்ரஹ்மத்தில் ஏதோ சில உபயோகமற்ற தர்மங்கள் இல்லை என்று இந்த ஶ்ருதி சொன்ன மாத்ரத்தினால் ப்ரஹ்மம் நிர்குணம் (ஸர்வஞ் ஞத்வாதி குணரஹிதம்) என்கிற விஷயத்தில் இந்த ஶ்ருதியை உதஹரிப்பது எப்படி யுக்தமாகும் ?

பி. வா :— (பதிலில்லை.)

## 6. நிர்குணம் குணபோக்த்ருச என்கிற கீதாவாக்ய விசாரணை.

வா. வ :—' நிர்குணம் ' என்கிற பதத்திற்கு கீதாபாஷ்யத் தில் ஶங்கராசார்யர் என்ன அர்த்தம் செய்திருக்கிறார் ?

பி. வா :—' நிர்குணம் = குணை: ஸத்வரஜஸ்தமாம்ஸி தை: ரஹிதம் நிர்குணம் ' என்று ஸத்வகுணம், ரஜோகுணம், தமோ குணம் இவைகளால் ரஹிதமென்று அர்த்தம் செய்திருக்கிறார்.

வா. வ :—இந்த கீதையிலுள்ள ' பூதபர்த்ரு ச தஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரப விஷ்ணு ச ' (13–16.) ' ஜ்யோதிஷாமபி தத் ஜ்யோதி: தமஸ: பரமுச்யதே ' (13–17.) ' அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:'; ' மத்தஸ்ம்ருதிர்ஞானமபோஹனம் ச ' முதலிய வாக் யங்களால் பரமாத்மனிடத்தில் எந்தெந்த குணங்களுண்டென்று ஸித்தமாகிறது ?

பி. வா :—ரக்ஷணகர்த்ருத்வம், நாஶகர்த்ருத்வம், ஜகத் காரணத்வம், ப்ரகாஶதாத்ருத்வம், தம: பரத்வம், ஞானதாத்

ஸீதாராம தபோவன
வாசக சாலை.



ருத்வம், அஞ்ஞான தாத்ருத்வம், நியாமகத்வம் முதலிய குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வா. வ :—இவ்விதமாக கீதா வாக்யங்களால் ப்ரஹ்மத்தினிடத்தில் அனேக குணங்கள் ஸித்தமாய்க் கொண்டிருக்க—சங்கராசார்யரும் ‘ நிற்குணம் ’ என்கிற பதத்திற்கு கேவலம் ஸத்வ ரஜஸ்தமோகுணரஹிதமென்று அர்த்தம் செய்திருக்க—‘ நிற்குண:’ என்கிற பதத்தை ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்கிற விஷயத்தில் எப்படி ஆதாரமாக உதஹரித்தீர் ?

பி. வா :—(பதிலில்லை.)

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

7. ந ஸ்தானதோபி என்கிற ஸூத்ர விசாரணை.

பி. வ :—(To the Court) மை லார்ட் ! நம்மிட கக்ஷீதாருக்கு மஹாமஹோபாத்யாயரென்கிற பட்டத்தைத் தரித்திருக்கும் த்ர்யம்பகஶாஸ்த்ரிகளென்கிற ஓர் ஸாக்ஷியுள்ர். அவருக்கு இவ்விஷயம் நன்ருய் தெரிந்திருக்கிறபடியால் அவரை விசாரிப்பதற்கு உத்திரவாக வேணுமாய்க் கோருகிறேன்.

கோர்ட் :—மிஸ்டர் சர்மா ! அப்படியே ஆகட்டும்.

(பாக்ஸில் ஏறிநின்ற த்ர்யம்பக ஶாஸ்திரிகளைக் குறித்து)

பி. வ :—மஹாமஹோபாத்யாய ஶாஸ்த்ரிகளே ! ப்ரஹ்மம் நிற்குணமா ? (ஸகல தர்மரஹிதமா) அல்லது ஸகுணமா (குணங்களுடன் கூடினதா) ?

பி. ஸா :—ஸாக்ஷாத் பகவான் நாராயணரூபியான பாதராயணு சார்யரே ‘ ந ஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி ’ (ப்ர. ஸூ. 3-2-11.) என்கிற ஸூத்ரத்தில் ஸகுண ப்ரஹ்மத்தையும், நிற்குண ப்ரஹ்மத்தையும் ப்ரதிபாதிக்கும் வாக்யங்களை விசாரம் செய்து, ப்ரஹ்மம் நிற்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்று நிர்ணயித்திருப்பதினுல்—ப்ரஹ்மம் நிற்குண

மென்கிற விஷயத்தில் விசாரமென்ன இருக்கிறது? ப்ரஹ்மம் நிர்குணமே.

பி. வ.—இந்த 'ந ஸ்தானதோபி' என்கிற ஸூத்ரத்திற்கு அர்த்தமென்ன?

பி. ஸா:—" ஸர்வ கர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ:" (சாந். 3-14-2.) முதலிய வாக்யங்கள் ப்ரஹ்மத்திற்கு ஸர்வ காமத்வாதி தர்மங்களைச் சொல்லுகின்றன. 'அஸ்தூல மனணு' (ப்ரு. 3-8-7.) முதலிய வாக்யங்கள் ப்ரஹ்மம் நிர்குணம் (ஸகல தர்மரஹிதம்) என்று அறிவிக்கின்றன. ஆகையால் ப்ரஹ்மம் ஸகுணம், நிர்குணம் என்று இரண்டுவகையான தென்று அறியவேண்டுமா? அல்லது ஒரே வகையானதென்று அறியவேண்டுமா? ஒரே விதமானதென்று அறிய வேண்டிய தாயின் ப்ரஹ்மம் ஸவிஶேஷமென்று அறியவேண்டுமா? அல்லது நிர்விஶேஷ மென்று அறியவேண்டுமா? என்று ஸம்ஶய மும்; ப்ரஹ்மம் ஸகுணம் நிர்குணம் என்று இரண்டு விதமாக வும் ஶ்ருதிகள் சொல்லிக் கொண்டிருப்பதினாலும், இரண்டு ஶ்ருதிகளும் ப்ரமாணமாக இருப்பதினாலும் ப்ரஹ்மம் ஸகுண மென்றும், நிர்குண மென்றும் அறியவேண்டும் என்கிற பூர்வ பக்ஷமும் வரவே—ஸவிஶேஷத்வம் நிர்விஶேத்வம் என்கிற இரண்டு தர்மங்களும் பரஸ்பர விருத்தமா யிருப்பதினால் ப்ரஹ்மத்திற்கு இவ்விரண்டுவித தர்மங்களையும் அங்கீகரிப்பது ஸாத்யமல்ல. ப்ருதிவ்யாதி உபாதியினாலும் விருத்தமான இரண்டு விதங்களும் பொருந்தாது. ஆகையால் ப்ரஹ்மம் ஒரேவித மான தென்று ஒப்புக் கொள்ளவேண்டும். 'அஶப்த மஸ்பர்ஶம்' முதலிய எல்லா வேதாந்தவாக்யங்களும் ப்ரஹ்மம் நிர்விஶேஷமான தென்று சொல்லியிருப்பதினால் ப்ரஹ்மம் நிர்விஶேஷமான தென்றே அறியவேண்டு மென்று நிர்ணயித்திருக்கிறார்.

பி. வ:—இந்த ஸூத்ரத்தினால் என்ன ஸித்தமாகிறது?

பி. ஸா:—ப்ரஹ்மம் நிர்விசேஷம் (ஸகலதர்மரஹிதம்) என்றே ஸித்தமாகிறது. இந்த ஸூத்ரத்தினால் மாத்ரமே

யல்ல. மற்றும்—'அஶப்தமஸ்பர்ஶம்' முதலிய வேதவாக்யத்திஞலும் ப்ரஹ்மம் நிர்விசேஷமான தென்று ஸித்தமாகிறது.

## க்ராவ்ஸ் எக்ஜாமினேஷன்.

வா. வ:—மஹாமஹோபாத்யாய ஶாஸ்த்ரிகளே! ப்ரஹ்மத்திற்கு—ஸர்வஞ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், முக்தாமுக்த நியாமகத்வம், ஸர்வஸ்வாமித்வம், ஸர்வஸம்ஹாரகத்வம், ஞானதாத்ருத்வம், ஸர்வோத்தமத்வம், விசித்ரஶக்திமத்வம், சந்த்ரஸூர்யாத்யாதாரத்வம், ஸர்வப்ரகாஶகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வாஶ்ரயத்வம், ஸாக்ஷாத்த்ரஷ்ட்ருத்வம் முதலிய தர்மங்களைச் சொல்லும் வேதவாக்யங்களிருக்கின்றனவா இல்லையா? என்கிற விஷயத்தில் பின் விசாரிக்கப்பட்டிருக்கும் இந்த ரிகார்ட்களைப் (ஆதாரங்களைப்) பார்த்து சொல்லும்.

பி. ஸா:—ரிகார்ட்களை பார்க்கவேண்டிய ஆவஶ்யகமில்லை. பிரஹ்மத்திற்கு ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை ப்ரதிபாதிக்கும் வேதவாக்யங்களுண்டு.

வா. வ:—ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை ப்ரதிபாதிக்கும் வேதவாக்யங்களிருக்க, ப்ரஹ்மம் நிற்குணமென்று எப்படிச் சொல்லுகிறீர்?

பி. ஸா:—தர்மங்களை நிஷேதிக்கும் வாக்யங்களுமுண்டு. ஆகையால் ப்ரஹ்மம் நிற்குணமென்று சொல்லுகிறோம்.

வா. வ:—வேதவாக்யங்களால் எந்தெந்த குணங்கள் நிஷேதிக்கப் பட்டிருக்கின்றனவோ அந்த குணங்களை அங்கீகரிக்க வேண்டாம் ஐயா! நிஷேதிக்கப் படாமலும், மற்றும் வேதவாக்யங்களால் விதிக்கப்பட்டும் (ப்ரஹ்மத்தினிடத்தில் உண்டென்று சொல்லப்பட்டும்) இருக்கும் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களை அங்கீகரிப்பதில் பாதகமென்ன?

பி. ஸா:—ஸர்வஞ்ஞத்வாதி குணங்களை நிஷேதிக்கும் வாக்யங்களுமுண்டு.

வா. வ:—அவ்வாக்யங்கள் யாது? சொல்லும்.

பி. ஸா:—'தத்வமஸி' (சாங்.) 'கேவலோ நிற்குணஶ்ச' (ஶ்வே) 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' (காட-ப்ருஹ.) முதலிய வாக்யங்கள்.

## 8. தத்வமஸி வாக்ய விசாரணை.

வா. வ:—'தத்வமஸி' என்கிற வாக்யத்தில் தர்மத்தை நிஷேதிக்கும் பதமில்லாததினால் அவ்வாக்யம் தர்மங்களை நிஷேதிக்கிறதென்று எப்படிச் சொல்லுகிறீர்?

பி. ஸா:—இவ்வாக்யம் ஜீவர்களுக்கு ப்ரஹ்மத்துடன் அபேதத்தைச் சொல்லுகிறது. ப்ரஹ்மத்தில் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களிருக்குமாயின், அல்பஞ்ஞனை ஜீவனுடன் ஐக்யம் பொருந்தாது. ஆகையால் ப்ரஹ்மத்தில் தோன்றும் தர்மங்கள் பொய் (முக்காலத்திலுமில்லாதது) என்று அர்த்தாத் சித்தமாகிறது.

வா. வ:—ஜீவனுக்கு ப்ரஹ்மத்துடன் ஐக்யம் ஸித்தமானாலொழிய ப்ரஹ்மத்திலிருக்கும் தர்மங்கள் பொய்யென்று ஸித்திக்காது. தர்மங்கள் பொய்யென்று ஸித்தித்தாலொழிய ஜீவனுக்கு ப்ரஹ்மத்துடன் ஐக்யம் ஸித்திக்காது. இவ்விதமாக அன்யோன்யாஶ்ரய தோஷம் வருவதினால் 'தத்வமஸி' என்கிற வாக்யத்தினால் தர்மங்கள் பொய்யென்று எப்படி ஸித்திக்கும்?

கோர்ட்:—Mr. தாஸ்! இவ்விஷயம் மூன்றாவது இஷ்யு விசாரணையில் விசாரிக்கப் பட்டிருக்கிறபடியால் வேறு விசாரம் நடக்கட்டும்.

வா. வ:—அப்படியே ப்ரபோ! ப்ரதிவாதியே இந்த 'தத்வமஸி' என்கிற வாக்யத்தை எடுத்துக் கொண்டதினால் இதின் விசாரம் செய்ய வேண்டியதாயிற்று. வேறு விசாரம் செய்கிறோம்.

9. நேஹ நாநாஸ்தி கிஞ்சன என்கிற வாக்ய விசாரணை.

வா. வ :—ஶாஸ்த்ரிகளே ! "நேஹ நாநாஸ்தி கிஞ்சன" (காடகம்; ப்ருஹதாரண்யகம்) இவ்வாக்யம் என்ன சொல்லுகிறது ?

பி. ஸா :—இஹ = இந்த ப்ரஹ்மத்தில், நாநா கிஞ்சன= எந்த தர்மமும், நாஸ்தி = இல்லை என்று சொல்லுகிறது.

வா. வ :—'மனஸைவேதமாப்தவ்யம்' 'மனஸைவாநு த்ரஷ்டவ்யம்' 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶான: ஸர்வஸ்யாதிபதி:; பூதபால:, ஈஶானோ பூதபவ்யஸ்ய' இவைகளே முதலிய "நேஹ நாநாஸ்தி கிஞ்சன" என்கிற வாக்யத்தின் பூர்வோத்தர வாக்யங்களினால் பரப்ரஹ்மத்திற்கு ஞேயத்வம், ஸர்வநியாமகத்வம், ஸர்வாதிபதித்வம், பூதபாலகத்வம், ஸமஸ்தஜகத்ஸ்வாமித்வம், முதலிய குணங்கள் ஸித்திக்கின்றனவா இல்லையா ?

பி. ஸா :—அவ்வாக்யங்களினால் ஸர்வஸ்வாமித்வம், ஸர்வநியாமகத்வம் முதலிய குணங்கள் ஸித்திக்கின்றன.

வா. வ :—'நிற்குணம்' என்கிற பதத்திற்கு சங்கராசார்யர் கீதா பாஷ்யத்திலும், இவ்வுபனிஷத் பாஷ்யத்திலும் என்ன அர்த்தம் செய்திருக்கிறார் ?

பி. ஸா :—'நிற்குணம்' ஸத்வகுணரஜோகுணதமோ குணங்களினால் ரஹிதமென்று அர்த்தம் செய்திருக்கிறார்.

வா. வ :—அவரிட பாஷ்யத்தின் படிக்கு 'நிற்குணம்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்று ஸித்தமாகிறதில்லையல்லவா ?

பி. ஸா :—ப்ரஹ்மம் நிற்குணமென்று வேதகீதாவாக்யங்களினால் ஸித்திக்கிறதா இல்லையா என்கிற விசாரம் நடந்துக்கொண்டிருக்கிறது. சங்கராசார்யரின். பாஷ்யத்தின் படிக்கு ஸித்திக்கிறதா இல்லையா என்கிற விசாரம் நடக்கவில்லை. நிற்குண மென்கிற பதத்திற்கு சங்கராசார்யரின் பாஷ்யத்தை யனு

சரித்து ப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்று ஸித்திக்கா விடினும்—'நிற்குணம்' என்கிற வேதகீதாபதங்களினலேயே ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று ஸித்திக்கிறதென்பதர்க்கு ஆக்ஷேபமே இல்லை.

வா. வ :—சங்கராசார்யரின் பாஷ்யங்களை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா இல்லையா ?

பி. ஸா :—அதற்கு பதிலளிக்கப்பட மாட்டாது.

வா. வ :—"ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூட:.........கேவலோ நிற்குணஸ்ச" (ஸ்வே.) இவ்வாக்யத்தினலும், இவ்வாக்யத்தின் பூர்வோத்தர வாக்யங்களினலும்—பரப்ரஹ்மத்தின் க்ரீடாதிமத்வம், ஸர்வகதத்வம், ப்ராணிநியாமகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வாஸ்ரயத்வம், ஸர்வ நியாமகத்வம், பாலகத்வம், ஸ்வாமித்வம், பதார்த்தநிர்மாணகர்த்ருத்வம் முதலிய குணங்கள் தெரிவிக்கப்படுகின்றனவா இல்லையா ?

பி. ஸா :—இவ்வாக்யங்களினல் இக்குணங்கள் ஸ்பஷ்டமாக அறிவிக்கப்படுகின்றன.

வா. வ :—இவ்விதமாக வேத வாக்யங்களினல் அநேக குணங்கள் ஸித்தமாய்க் கொண்டிருக்க—பரப்ரஹ்மம் நிற்குணமென்று நீங்கள் எப்படி சொல்லுகிறீர் ?

பி. ஸா :—'நிர்குண:' என்கிற பதம் குணம் இல்லை என்று சொல்லுகிறது. மற்றும் 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யமும் குணங்களை நிஷேதிக்கிறது. ஆகையால் பரப்ரஹ்மத்தினிடத்தில் குணங்களில்லை என்று சொல்லுகிறோம்.

வா. வ :—'ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷுவா புனஃ। ஸத்வம் ப்ரக்ருதிஜைர் முக்தம் யதேபி: ஸ்யாத் த்ரிபிர் குணை:' (கீதா 17–40.) ஸர்வ ப்ராணிகள் ஸத்வரஜஸ்தமோ குணங்களினல் பத்தர்கள் (கட்டுப்பட்டவர்கள்), 'மாமேப்ய: பரமவ்யயம்' (கீதா. 7–14.) முதலிய அநேக வாக்யங்களினல்—நான் (க்ருஷ்ணன்) ஸத்வரஜஸ்தமோகுணங்களை அதிக்

ரமித்திருக்கிறேன் என்று சொல்லியிருப்பதினுலும், மற்றும் உங்களிட மதப்ரவர்த்தகரான சங்கராசார்யரும் அப்படியே அர்த்தம் செய்திருப்பதினுலும், குணஶப்தத்திற்கு ஸத்வரஜஸ்தமோ குணவிஷயத்தில் ப்ரயோக மிருப்பதினுலும், நிற்குணமென்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ்தமோகுணரஹிதமென்கிற அர்த்தம் செய்வதை விட்டு, அந்த எல்லா ப்ரமாணங்களுக்கும் விருத்தமாக ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்கிற அர்த்தத்தைச் செய்வது எப்படி யுக்தமாகும்? மற்றும் 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யத்தில்—குணங்களை நிஷேதிக்கும் பதமுமில்லை. 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய' 'ஸர்வஸ்ய வஶீ' முதலிய பூர்வோத்தரவாக்யங்களில் ஸ்வாமித்வம் முதலிய அநேக தர்மங்கள் சொல்லப்பட்டிருப்பதினுல் இவ்வாக்யம் பூர்வோத்தர அநேக வாக்யங்களுக்கு விருத்தமாக குணங்களில்லை என்று சொல்லுகிறதென்பது பொருந்ாதல்லவா?

பி. ஸா :—ஆகாயத்தில் காணப்படும் நீலநிறம் (கருப்பு) பொய்யாகவும் (ஆரோபிதமாகவும்), ரூபாபாவம் நிஜமாகவுமிருப்பதினுல் ஆகாயம் நீலரூபத்துடன் கூடினதென்பதும், ரூபமில்லாததென்பதும் எப்படி விருத்தமல்லவோ, அப்படியே ப்ரஹ்மத்தில் தோன்றும் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்கள் பொய் (ஆரோபிதம்), தர்மாபாவம் நிஜம். இப்படியிருப்பதினுல்—வேதங்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களுண்டென்று சொல்லுவதும், ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களில்லை என்று சொல்லுவதும் விருத்தமாக மாட்டாது.

வா. வ :—ஶாஸ்த்ரிகளே! ஆரோபிதமான (ப்ரமத்தினுல் காணப்படும்) வெள்ளி பொய்யாகையால், அந்த ஆரோபிதமான வெள்ளியை அறிவிக்கும் ப்ரத்யக்ஷமெப்படி அப்ரமாணமாகிறதோ, அப்படியே ஸர்வஞ்ஞத்வாதி குணங்கள் ஆரோபிதமெனின், அந்த ஆரோபிதமான ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்கள் மித்யையாகையால் அந்த ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை அறிவிக்கும் வேதங்களும் அப்ரமாணங்களே ஆயினவல்லவா? பௌத்

தரைப்போலவே நீங்களும் வேதத்திற்கு அப்ராமாண்யத்தை அங்கீகரிக்கிறீர்களா ?

பி. ஸா :—பௌத்தர்கள் எல்லா வேதங்களுக்கும் அப்ராமாண்யத்தை ஒப்புக் கொள்ளுகிறார்கள். நாங்கள் ப்ரஹ்மத்தில் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களை ப்ரதிபாதிக்கும் வேத பாகங்களுக்கு அப்ராமாண்யத்தை அங்கீகரிக்கிறோம். ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் வேதபாகத்திற்கு ப்ராமாண்யத்தை யொப்புக் கொள்ளுகிறோம். ஆகையால் நாங்கள் பௌத்தரைப் போல் எல்லா வேதங்களையும் அப்ரமாண மென்கிறதில்லை.

வா. வ :—அத்வைத மதத்தின்படிக்கு ப்ரஹ்மம் ஞேயமா? அஞ்ஞேயமா ?

பி. ஸா :—ப்ரஹ்மம் அஞ்ஞேயமே.

வா. வ :—ப்ரஹ்மம் அஞ்ஞேய மென்று சொல்லின், ப்ரஹ்மத்தை யறிவிக்கும் வேத பாகங்கள் ப்ரமாணமென்று நீங்கள் பூர்வத்தில் ஒத்துக் கொண்டிருப்பதினால் உங்களுக்கு வ்யாஹதி (பூர்வோத்தர விரோதம்) வருகிறதல்லவா ?

பி. ஸா :—அனவஸ்தாதயோ தோஷா: ஸத்தாம் நிக்னந்தி வஸ்துன: | அத்வைதினம் தே ஸுஹ்ருத: ப்ரபஞ்சே தத்ப்ரஸஞ்ஜகா:' என்று இவ்விதமாக எங்கள் பூர்வாசார்யர்கள் சொல்லியிருக்கிறபடியால் நமக்கு (அத்வைதிகளுக்கு) அனவஸ்தாதிதோஷங்கள் மான்யங்களே.

வா. வ :—வைதிக லௌகிகரான எல்லா ஜனங்களும் தமக்கு வ்யாஹத்யாதி தோஷங்கள் வரக்கூடாதென்று மிகவும் ஶ்ரமப்படுகின்றனர். அத்தகைய வ்யாஹத்யாதி தோஷங்களை நீங்கள் ஒத்துக்கொள்ளுவது அயுக்தமாகிறதல்லவா ?

பி. ஸா :—(பதிலில்லை.)

வா. வ :—ஐயா ஶாஸ்திரிகளே ! உங்களிட ப்ரஹ்ம மென்னமோ வேதப்ரதிபாத்யமல்ல. வேதத்தினால் ப்ரதிபாதிக்கப்படும் ஜகத்தோ பொய் என்று சொல்லின் எல்லா வேதங்களும் அப்ரமாணங்களேயல்லவா ?

பி. ஸா :—வாஸ்தவமாக விசாரம் செய்யுமளவில் "வேதா அவேதா: தேவா ந தேவா:" (ப்ரு.) இது முதலிய வாக்யங்களிஞல் வேதம் பொய்யென்று ஸித்திக்கிறது. 'ந வேதா ந யஞ்ஞா' என்று சங்கராசார்யரும் வேதம் பொய்யென்று சொல்லியிருக்கிருர். 'ஸதி குட்யே சித்ரம் கர்ம = சுவர் இருந்தால் சித்திரம் எழுதலாம்' என்கிற நியாயத்தை யனுசரித்து வேதமிருக்குமாயின் அது ப்ரமாணமா? அல்லது அப்ரமாணமா என்று விசாரிக்கலாம். எதுவும் இல்லாததிஞல் வேதமுமில்லை. அதற்கு ப்ரமாண்யம் ஸுதராம் இல்லை என்று எங்களிட ஸித்தாந்தம்.

வா. வ :—வேதமே இல்லையாயின் உங்களிட மதம் எதிஞல் ஸித்திக்கும்?

பி. ஸா :—ஜகத்து என்றும், ப்ரஹ்மம் என்றும் இரண்டு பதார்த்தங்களுண்டு. அதில் எங்களிட மதத்தில் ஜகத்து பொய். ஆகையால் அதை ஸாதிப்பதற்காக ப்ரமாணம் வேண்டியதில்லை. ப்ரஹ்மம் ஸ்வதஸ்ஸித்தமானது (ஸ்வப்ரகாஶமானது) ப்ரமாணத்திஞல் அறியப்படுவதல்ல. ஆகையால் எங்களிடமதத்தில் ப்ரமாணங்களின் ஆவஶ்யகமே இல்லை. (ப்ரமாணங்களின் அபேக்ஷையே இல்லை.)

வா. வ :—"ஶூன்யம் ஸத்யம் ஜகன்மித்யா" என்கிற நம்மிட மதத்தில் ஜகத்து பொய்யானதால் அதை ஸாதிப்பதற்காக ப்ரமாணங்களின் அபேக்ஷ இல்லை. ஶூன்யமோ ஸ்வப்ரகாஶமானது (ஸ்வதஸ்ஸித்தமானது = ப்ரமாணங்களிஞல் அறியப்படுவதல்ல) ஆகையால் நமக்கு ப்ரமாணங்களின் ஆவஶ்யகமில்லை" என்று உங்களைப்போலவே பௌத்தர்கள் சொல்லுவாராயின் அவர்களிட மதத்தை நீங்கள் கண்டனம் செய்வீரா? அல்லது மௌனத்தை தரிப்பீரா?

பி. ஸா :—'பிரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா' என்கிற நம்மிட அத்வைத மதத்தில் ப்ரஹ்மாதிரிக்தமா யிருக்கும் பௌத்த மத கண்டனம், அத்வைதமத ஸ்தாபனம் மற்றும் அத்வைத

மதம் இவைகளெல்லாம் மித்யை (முக்காலத்திலு மில்லாதது). ஆகையால் பௌத்த மதத்தைக் கண்டிப்பதற்காவது, அத்வைத மதத்தைஸ்தாபிப்பதற்காவது ப்ரமாணங்களின் ஆவஶ்யகமில்லை. கண்டனம் மண்டனம் முதலிய எல்லா வ்யவஹாரங்களும் த்வைதாவஸ்தையினாலேயே செய்யவேணும். நாங்கள் அத்வைத நிஷ்டாளாயிருப்பதினால் உங்களுடன் கூட உத்தரப்ரத்யுத்தரங்களைச் சொல்லமாட்டோம்.

கோர்ட் :—ஶாஸ்திரிகளே ! தாங்கள் அத்வைதநிஷ்டாளாயிருந்த பக்ஷத்தில் கோர்ட்டுக்கு வருவானேன் ? ப்ரஹ்மம் நிற்குணமென்று ஸாதிப்பதற்காக ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டங்களை (தடபுடல்) செய்கிறீர் ? யஞ்ஞம், ஸ்நானம், ஸந்த்யா வந்தனம், பூஜா முதலியவைகளை ஏன் செய்கிறீர்கள் ?

பி. ஸா :—எங்கள் மதத்தில் வாஸ்தவமாக ஸ்நானம், ஸந்த்யா வந்தனம், யஞ்ஞம் முதலியவைகளைச் செய்யவேண்டிய ஆவஶ்யகமில்லை. நாங்களும் ப்ரஹ்மமாகவே இருப்பதினால் ப்ரஹ்மபாவ ரூபமான மோக்ஷம் புதிதாய் வருகிறதில்லை. பந்தம், அஞ்ஞானம் முதலியவைகளெல்லாம் இருக்குமாயின் போகலாம். பந்தம் அஞ்ஞானம் முதலியவைகள் மித்யையே (பொய்யே) முக்காலத்திலுமில்லாதவைகளே யாகையால் போவதும் இல்லை. ப்ரஹ்மம் நிற்குணமென்று ஸாதிப்பதும் பொய்யே. அதை ஸித்தப்படுத்துகிறதும் இல்லை. எல்லாம் ப்ரமமே. நாங்கள் ப்ரஹ்மம் நிற்குணமென்று ஸாதிக்கிறோமென்றும், ஸ்நான சந்த்யாவந்தனாதிகளைச் செய்வதைப் போலவும் உங்களுக்கு ப்ரமையினால் காணப்படுகிறதே யொழிய அதுவும் பொய்யே. நாங்கள் செய்வதும் பொய்யே.

கோர்ட் :—நீங்கள் நாஸ்திகர்களா ?

பி. ஸா :—நீங்கள் நாஸ்திகர்களா என்கிற கோர்டாரிட கேழ்விக்கு நாங்கள் நாஸ்திகர்களல்ல என்கிற எங்களிட பதிலும் பொய்யே,

கோர்ட் :—Mr. சர்மா! இந்த ஶாஸ்திரியார் சொல்வதைக் கேட்டீரா? எல்லாம் பொய் என்கிறார். இந்த ஸாக்ஷியினால் உமக்கு என்ன ஸித்திக்கும்?

பி. வ :—மஹாப்ரபோ! கேட்டோம். அத்வைத மதத்தின் தத்வமே அத்தகையதென்று அவர் சொல்லுகிறார். அவரிட வார்த்தைகளப்படி இருக்கட்டும். கோர்டார் விசாரிக்கும் ப்ரபுக்களிருக்கிறார்கள். வேதஸூத்ர கீதாரூபமான ப்ரஸ்தான த்ரயத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைப் பார்த்து நிர்ணயிக்க வேணும். ப்ரதிவாதிகளான கங்காதர ஶாஸ்திரிகளை விசாரிக்கவேண்டியிருப்பதால் அதற்கு உத்திரவாக வேணுமாய் கோருகிறோம்.

கோர்ட் :—எஸ். விசாரியும்.

பி. வ:—ஶாஸ்த்ரிகளே! ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அர்ஜுனனுக்குக் காட்டிய அனேக குணங்களுடன் கூடிய விஶ்வரூபம் நிஜமானதா? பொய்தானா? (கல்பிதமானதா = மாயாமயமா)?

பி. வா :—அநேக குணங்களுடன் கூடிய அந்த விஶ்வரூபம் பொய் (மாயாமயமே).

பி. வ :—இவ்விஷயத்திற்கு ஆதாரமென்ன?

பி. வா :—ஸ்ரீ மஹாபாரதம் ஶாந்திபர்வத்தைப் பாரும். பகவான் அர்ஜுனனுக்கு எப்படி விஶ்வரூபத்தைக் காட்டியிருக்கிறாரோ அப்படியே நாரதருக்கும் விஶ்வரூபத்தைக்காட்டி, “மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூத குணைர்யுக்தம் மைவம் மாம் ஞாதுமர்ஹஸி” (மஹாபாரதம். ஶாந்தி பர்வம். அத். 347.) ஓய் நாரதரே! உம்மால் காணப்படும் ஸர்வகுணங்களுடன் கூடிய இந்த ரூபம் மாயையினால் நிர்மிக்கப்பட்டது. இத்தகையதென்றே அறிய வேண்டாம் என்று சொல்லியிருக்கிற படியால் விஶ்வரூபம் மாயாமயமென்று ஸித்தமாகிறது.

## 10. மாயாஹ்யேஷா என்கிற வாக்ய விசாரணை.

பி. வ :—விஸ்வரூபம் மாயாமய மென்று ப்ராசீனர்களும் சொல்லியிருக்கிறுரா அல்லது நீர் மாத்ரமே சொல்லுகிறீரா?

பி. வா :—நம் சங்கராசார்யரே 1-1-20 வது ப்ரஹ்ம ஸூத்ர வ்யாக்யானத்தில்—'ஸ்யாத் பரமேஶ்வரஸ்யாபி இச்சா வஶாத் மாயாமயரூபம் ஸாதகானுக்ரஹார்த்தம்' 'மாயா ஹ்யேஷா.மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூத குணை யுக்தம் மைவம் மாம் ஞாதுமர்ஹஸி' என்கிற வாக்யங்களினல் அநேக குணங்களுடன் கூடிய விஶ்வரூபம் மாயாமயமானது மித்யை (பொய்) என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறுர். ஆகையால் பரமாத்மனிடத்தில் காணப்படும் குணங்கள், தர்மங்கள் விஶ்வரூபம் முதலியவைகளெல்லாம் பொய். ப்ரஹ்மம் வெரும் நிர்விஶேஷமானதே என்று ஸித்தமாகிறது.

### க்ராஸ் எக்ஜாமினேஷன்.

வா. வ :—ஶாஸ்த்ரிகளே ! தாங்கள் மஹா பாரத ஶாந்தி பர்வம் 347-வது அத்யாயத்திற்கு பூர்வத்திலிருக்கும் (பின்னிருக்கும்) 346வது அத்யாயத்தைப் பார்த்துச் சொல்லுகிறீரா ? அல்லது சங்கராசார்யரின் பாஷ்யத்தைப் பார்த்துச் சொல்லுகிறீரா ?

பி. வா :—மஹாபாரதம் ஶாந்தி பர்வத்தின் 346, 347 வது அத்யாயங்களைப் பார்த்தே சொல்லுகிறேம். சங்கராசார்யரின் பாஷ்யத்தின் ஆதாரத்தின் பேரில் சொல்லக்கூடாதோ ? அந்த பாஷ்யம் அயுக்தமான தென்று உம்மிட அபிப்ராயம் போல் காணுகிறது.

வா. வ :—கோர்டில் சங்கராசார்யரின் மதப்ரகாரம், ப்ரஹ்மம் நிர்குணமா ? அல்லது த்வைத மதப்ரகாரம், ப்ரஹ்மம் ஸகுணமா என்கிற விசாரம் நடந்துக் கொண்டிருக்க—சங்கராசார்யாரின் பாஷ்யத்தை (வார்த்தைகளை) வாதி ஒப்புக்கொள்ள மாட்டார். அயுக்த மென்றே சொல்லுவார். ஆகையால் மஹா

பாரதம் ஶாந்தி பர்வம் 346, 347 வது அத்யாயங்களிலுள்ள அடியில் கண்ட வாக்யங்களின் அர்த்தத்தைச் சொல்லும்.

நாரத உவாச—“ நமஸ்தே தேவதேவேஶ..........ப்ராஹ்மணப்ரிய விஶ்வமூர்தே, பாந்தவ:, பக்தவத்ஸல, ப்ரஹ்மண்ய தேவ......பக்தோஹம் த்வாம் தித்ருக்ஷு:... ஏகாந்த தர்ஶனாய ....நமோநம:” (346-வது அத்யாயம்.)

பீஷ்மஉவாச—“ ஏவம் ஸ்துதஸ்ஸ பகவான் குஹ்யைஸ்தத்யைஶ்ச நாமபி: । பகவான் விஶ்வத்ருக் ஸிஹ்ம: ஸர்வமூர்த்திமய: ப்ரபு: । தர்ஶயாமாஸ முனயே ரூபம் தத் பரமம் ஹரி: । .......... ஸஹஸ்ரநயன: ஶ்ரீமான் ஶதஶீர்ஷஸ்ஸஹஸ்ரபாத் । ஸஹஸ்ரோதர பாஹுஶ்ச அவ்யக்த இதி ச க்வசித் । ஓங்காரமுத்கிறன் வக்த்ராத் ஸாவித்ரீம் ச ததன்வயாம் । ஶேஷேப்யஶ்சைவ வக்த்ரேப்ய: சதுர்வேதான் கிறன் பஹுபின் । ஆரண்யகம் ஜகௌ தேவோ ஹரிர்நாராயணோ வஶீ । தம் ப்ரஸன்ன: ப்ரஸன்னாத்மா நாரதோ த்விஜஸத்தம: । வாக்யத: ப்ரணதோ பூத்வா வவந்தே பரமேஶ்வரம் । தமுவாச நதம் மூர்த்னா தேவானாமாதிரவ்யய: ஶ்ரீபகவானுவாச—ஏகதஶ்ச த்விதஶ்சைவ த்ருதஶ்சைவ மஹர்ஷய: । இமம் தேஶமனுப்ராப்தா மம தர்ஶனலாலஸா: । ந ச மாம் தே தத்ருஶிரே ந ச த்ரக்ஷதி கஶ்சன । ருதே ஹ்யேகாந்திக ஶ்ரேஷ்டாத் த்வம் சைவைகாந்திகோத்தம । ஏதத் த்வயா ந விஞ்ஞேயம் ரூபவானிதி த்ருஶ்யதே । இச்சன் முஹூர்த்தான்னஶ்யேயம் ஈஶோஹம் ஜகதோ குரு: । மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத । (அத்யாயம் 347.)

பி. வா :—மேற்கூறிய ஶ்லோகங்களின் அர்த்தத்தைச் சொல்லுகிறோம், கேளும். தேவதைகளில் மேன்மையுள்ளவரான எந்த ப்ரஹ்மாதி தேவர்களுளரோ அவர்களால் பூஜ்யனே! ப்ராஹ்மணர்களுக்கு ப்ரியனே ! விஶ்வமூர்த்தே = அநேகரூபங்களுடன் கூடினவனே ! மஹாமூர்த்தே = ஶ்ரேஷ்டனே ! பாந்தவ = பக்தர்களான நமக்கு பந்துவானவனே ! .......பக்தனான நான் உன்னை ஏகாந்தத்தில் காணுவதற்காக வந்திருக்கிறேன். உனக்கு

வந்தனங்கள். என்று இவ்விதமாக *'தத்யை:' நிஜமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கும் 'விஶ்வமூர்த்தே' இது முதலிய நாமங்களினால் துதிக்கப்பட்ட, ஸர்வஞ்ஞனும், பரமஶ்ரேஷ்டனும், ஸமர்த்தனுமான நாராயணரூபியான பரமாத்மா ஆயிரக்கணக்கான கண்கள், தலைகள், பாதங்கள், வயறுகள், புஜங்கள் முதலியவைகளுடன் கூடினவன், ஒரு முகத்தினால் ஓங்காரத்தை உச்சரிப்பவன், நாலு வேதங்களையும் உச்சரிப்பவன். இத்தகைய பகவான் தன்னிட மேலான ரூபத்தை நாரதருக்குக் காட்டினன். நாரதர் வணக்கமுள்ளவராய் அந்த ரூபத்தை நமஸ்கரித்தனர். அப்பொழுது தேவதைகளைப் படைக்கும் நாஶராஹிதனான, ஐஶ்வர்யமுள்ள பரமாத்மா நாரதரைக் குறித்து—ஓய் நாரதரே! ஏகத, த்வித, த்ரித என்கிற பெயருடைய மஹர்ஷிகள் என்னைக் காணுவதற்காக இங்கு வந்தனரே யொழிய, அவர்கள் என்னைக் காணவில்லை. நாரதரே! ஏகாந்தபக்தர்கள் தவிர வேறெவரும் காணுவதற்கு ஸாத்யமல்ல. நீர் ஏகாந்த பக்தர்களில் ஶ்ரேஷ்டரா யிருப்பதால் உமக்கு என்னிட தர்ஶனம் கிடைத்தது....... ... நாரதரே! 'ஏதத் த்வயா ந விஞ்ஞேயம் ரூபவானிதி த்ருஶ்யதே' ரூபமுள்ள கடபடாதிபதார்த்தங்களின் ப்ரத்யக்ஷம் பக்தியில்லாமலே எப்படி உண்டாகுமோ அப்படி என்னிட (பரமாத்மாவின்) ப்ரத்யக்ஷம், நான் (பரமாத்மா) ரூபமுள்ளவனுகையால் ஸஹஜமாக (ஏகாந்தபக்தி இல்லாமல்) உண்டாகுமென்று நீர் நினைக்கவேண்டாம்.

ஏனெனில் :—

---

* 'தத்யைர்நாமபி: ஸ்துத:' என்கிற வாக்யத்தில் பகவானிட நாமங்களுக்கு தத்யை: நிஜமான என்கிற விஶேஷணத்தைக் கொடுத்திருப்பதினால்—விஶ்வமூர்தே தேவதேவேஶ பக்தப்ரிய இவை முதலிய விஶேஷணங்களினால் அறியவரும் பரமாத்மனிட விஶ்வரூபம், நாமம், க்ரியை முதலிய தர்மங்கள் ஸத்யமானவைகள், மித்யையல்ல (பொய்யல்ல) என்று விதமாகிறது.

'இச்சன் முஹூர்தான்னஶ்யேயமீஶோஹம் ஜகதோ குரு: । மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத ॥' உமக்கு நான் காணப்படக்கூடாது என்கிற இச்சை (எண்ணம்) எனக்கு உண்டாகுமாயின், முஹூர்த்தாத் = ஒரு நொடியில் அத்ருஶ்யனுவேன். (உமக்கு காணப்படக்கூடாது என்கிற எண்ணம் எனக்கு உண்டாகுமாகில் நீர் என்னை காணுவதற்கு ஶக்தராக மாட்டீர்) ஏனெனில்:—நான் ஈஶ: = ஸமர்த்தன், (அத்ருஶ்யமாகும் ஶக்தியுள்ளவன்). நான் ஜகத்துக்கு குரு, 'மாம் பஶ்யஸீதி யத் ஏஷா மாயா மயா ஸ்ருஷ்டா' நீர் என்னைக்காணுவது ஏது உண்டோ அந்த காண்கை என்னிட இச்சையினுல் உமக்கு உண்டாயிருக்கிறது என்று ஸ்ரீ பகவான் சொன்னுர் என்று அர்த்தம்.

வா. வ:—ஶாஸ்த்ரிகளே! 'தத்யைஶ்ச நாமபி: ஸ்துத:' என்கிற வாக்யத்திலுள்ள 'தத்யை:' என்கிற விஶேஷணத்தினுல் என்னவென்று ஸித்தமாகிறது.

பி. வா:—'விஶ்வமூர்தே, மஹாமூர்தே, ப்ராஹ்மண ப்ரிய, தேவதேவ' முதலிய பதங்களினுல் சொல்லப்பட்ட விஶ்வரூபம் தேவதேவேஶத்வம், முதலியவைகள் நிஜமானது, பொய்யல்ல என்று ஸித்திக்கிறது.

வா. வ:—'ரூபம் தத் பரமம் ஹரி:' என்கிற வாக்யத்தில் விஶ்வரூபத்திற்கு 'பரமத்வம்' என்கிற விஶேஷணத்தைக் கொடுத்திருப்பதினுல் அந்த ரூபம் உத்தமமானதென்று ஸித்திக்கிறதல்லவா?

பி. வா:—ஆம், அந்த ரூபம் உத்தமமானதென்றே ஸித்தமாகிறது.

வா. வ:—உத்தமமான ரூபம் பொய்யாகுமா?

பி. வா:—உத்தமமான ரூபம் எப்படி பொய்யாகும்? ஸத்யமேயாகும்.

வா. வ :—பொய்யான ரூபம் நாமமில்லாததா ? அல்லது நாமமுள்ளதா ?

பி. வா :—பொய்யான ரூபம் நாமமுடையதே.

வா. வ :—‘ தேவானுமாதிரவ்யய:’ என்கிற வாக்யத்தினுல் அந்த ரூபத்திற்கு எந்த தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன ?

பி. வா :—அந்த ரூபத்திற்கு தேவதைகளுக்கு காரணத்வம், நாமரஹிதத்வம் என்கிற தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

வா. வ :—தேவதைகளுக்கு காரணமும் நாமரஹிதமுமாகிற ரூபம் மாயிகம் என்ருல் பொய் எப்படியாகும் ?

பி. வா :—தேவதைகளுக்கு காரணமும் நாசரஹிதமுமாகிய ரூபம் பொய்யாக மாட்டாது.

வா. வ :—ஆனுல் இவ்விதமான விஸ்வரூபத்தை பொய் யென்று பின் எப்படிச் சொன்னீர் ?

பி. ஸா :—(பதிலில்லை.)

வா. வ :—“ ஏதத் த்வயா ந விஞ்ஞேயம் ரூபவானிதி த்ரு [ஸ்யதே ।

இச்சன் முஹூர்தான்னஸ் யேயமீஸோஹம் [ஜகதோ குரு: ।

மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஸ்யஸி [நாரத.”

என்கிற ஸ்லோகங்களுக்கு அர்த்தமென்ன ?

பி. வா :—ரூபமுள்ள கடபடாதி பதார்த்தங்கள் அவைகளின் இச்சை இல்லாமலே புருஷனிட ப்ரயத்னத்தினுலேயே எப்படி காணப்படுகிறதோ, அப்படியே பரமாத்மாவும் ரூபமுடையவனு யிருப்பதினுல் அவனிட இச்சை இல்லாமலே (பா

மாத்மாவின் இச்சை இல்லாமலே) புருஷனிட ப்ரயத்னத்தி ஞலேயே காணப்படுமென்று அறியக்கூடாது. அவனுக்கு (பரமாத் மனுக்கு) காணப்படக்கூடாதென்கிற இச்சை யுண்டாகுமாயின் ஒரு நொடியில் காணப்படாமற்போகும் திறமையுண்டு. ஆகை யால் பரமாத்மனை நாம் காண்கிறோ மென்கிற பார்வை எது உள தோ அந்த பார்வை பரமாத்மாவின் இச்சையிஞலேயே உண் டாயிற்றென்று அர்த்தம்.

வா. வ:—இந்த பாரத ஶ்லோகங்களிஞல் விஶ்வரூபம் மா யிகம் (பொய்) என்று எப்படி ஸித்தமாகிறது?

பி. வா:—(பதிலில்லை.)

வா. வ:—"அநேக வக்த்ரநயனமனேகாத்புத தர்ஶனம்। அநேக திவ்யாபரணம் திவ்யானேகோத்யதாயுதம்। திவ்யமால் யாம்பரதரம் திவ்யகந்தானுலேபனம்। ஸர்வாஶ்சர்யமயம் தேவமனந்தம் விஶ்வதோமுகம்" (கீதா 11—10, 11) என் கிற ஶ்லோகங்கள் எதை வர்ணிக்கின்றன?

பி. வா:—விஶ்வரூபத்தை வர்ணிக்கின்றன.

வா. வ:—அந்த ஶ்லோகங்களுக்கு அர்த்த மென்ன?

பி. வா:—விஶ்வரூபம் அநேக முகங்களுடனும், நேத்ரங் களுடனும் கூடினது. அனேக ஆஶ்சர்யமான பதார்த்தங்கள் அந்த விஶ்வரூபத்தில் காணப்படுகின்றன. திவ்யமான (அப் ராக்ருதமான) அநேக ஆபரணங்களுடன் கூடினது, அநேக திவ்யமான (அப்ராக்ருதமான = அமாயிகமான) ஆயுதங்களுடன் கூடினது, அப்ராக்ருதமான (அமாயிகமான) திவ்யமாலைகளா லும் வஸ்திரங்களிஞலும் கூடினது, அப்ராக்ருதமான கந்தத் துடன் கூடினது, மற்றும் அநந்தம் = நாஶரஹிதமானது, இவ் விதமான தன்னிட ரூபத்தை ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு காண்பித்தனனென்று அர்த்தம்.

வா. வ:—ஶாஸ்த்ரிகளே! மாயிகமான ரூபம் அனந்தமும் நாஶரஹிதமுமாகுமா?

பி. வா :—மாயிகமான ரூபம் நாஶமுள்ளதே. நாஶமில்லாத தெப்படியாகும்?

வா. வ :—மாயிகமான ரூபத்தின் ஆபரணங்கள், வஸ்த்ரங்கள், ஆயுதங்கள், மாலைகள், கந்தம் இவைகள் அப்ராக்ருதம் (அமாயிகம் = மாயாமயமல்லாதது) ஆகுமா?

பி. வா :—மாயிகரூபத்தின் ஆபரணங்கள் முதலியவைகள் அமாயிகம் (மாயாகல்பிதமல்லாதது) எப்படியாகும்? மாயிகமேயாகும்.

வா. வ :—கீதையில் அந்த விஶ்வரூபம் 'அநந்தம்' நாசரஹிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் ஆபரணாதிகளுக்கு திவ்யத்வம் = அப்ராக்ருதத்வம் (மாயையினால் நிர்மிதமல்லாதது) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இவ் விஶ்வரூபம் மாயிகமானதென்று எப்படிச் சொல்லுகிறீர்?

பி. வா :— (பதிலில்லை.)

வா. வ :— " த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதானம் । த்வமவ்ய யஶ்ஶாஶ்வததர்மகோப்தா ஸனாதனஸ்த்வம் புருஷோ மதோ மே" (கீதா 11-18.) "அனாதிமத்யாந்தமனந்தவீர்யம் (19.) என்கிற ஶ்லோகங்கள் எந்த ரூபத்தை வர்ணிக்கின்றன?

பி. வா :—விஶ்வரூபத்தை வர்ணிக்கின்றன.

வா. வ :—அந்த ஶ்லோகங்களுக்கு அர்த்தமென்ன?

பி. வா :—அர்ஜுனன் விஶ்வரூபத்தைக் குறித்துச் சொல்லுகிறான் :—நீ நாஶரஹிதமான பரப்ரஹ்மமென்று அறியப்பட வேண்டியவன், நீ எல்லா ஜகத்துக்கும் ஆஶ்ரயன், நீ நித்யனானவன் (எப்போதும் மாறுதலடையாதவன்) தர்மங்களின் ஸம்ரக்ஷகன், நீ ஸனாதனனானவன் 'அனாதிமத்யாந்தம்' நீ ஆதிமத்யாந்தமில்லாத ரூபமுடையவன் என்று அர்த்தம்.

வா. வ:—மாயிகமான = கல்பிதமான (பொய்யான) ரூபத்திற்கு நாஶரஹித பரப்ரஹ்மஸ்வரூபம், எல்லா ஜகத்துக்கு ஆஶ்ரயம், நாஶரஹிதம், ஆத்யந்தரஹிதம் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்?

பி. வா:—மாயிகரூபத்திற்கு நாஶரஹித பரப்ரஹ்மம் என்பதும் ஸமஸ்த ஜகத்துக்காஶ்ரயம் என்பதும் பொருந்தாது.

வா. வ:—நாஶரஹிதமான பரப்ரஹ்மஸ்வரூபமான விஶ்வரூபம் மாயிகம் (பொய்) என்பது எப்படிப் பொருந்தும்?

பி. வா:—இதற்கு பதிலை யோசித்துச் சொல்லுகிறோம்.

பி. வ:—ஆசார்யரே! 'நிற்குணம்' என்கிற பதத்திற்கு நீர் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்?

வா. வி:—'நிற்குணம்' என்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ்தமோகுணரஹிதமென்று நாங்கள் அர்த்தம் சொல்லுகிறோம். சங்கராசார்யரும் ஸகலதர்மரஹிதனென்று அர்த்தம் செய்யாமல் ஸத்வரஜஸ்தமோகுணரஹிதனென்று அர்த்தம் செய்திருப்பதேயல்லாமல்—'அஸம்ஶயம் ஸமக்ரம் மாம்' (கீதா. 7–1.) என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் 'ஸமக்ரம் ஸமஸ்தம் விபூதி பலஶக்த்யைஶ்வர்யாதிகுணஸம்பன்னம்' என்றும், மற்றும் 'ஸர்வேஶத்வ ஸ்வதந்த்ரத்வ ஸர்வஞ்ஞத்வாதிபிற்குணை:। ஸர்வோத்தமஸ்ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப ஈஶ்வர:।' என்கிற வாக்யங்களினுல்—ப்ரஹ்மத்தில் விபூதி, பலம், ஐஶ்வர்யம், ஶக்தி, ஸர்வோத்தமத்வம், ஸர்வஸ்வாமித்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம், ஸ்வதந்த்ரத்வம், ஸர்வஞ்ஞத்வம் முதலிய குணங்களிருக்கின்றனவென்றும் சொல்லியிருப்பதினுலும், ஶ்ருதி ஸூத்ர கீதா வாக்யங்களினுல் மேற்சொல்லப்பட்ட ஸர்வஞ்ஞத்வாதி குணங்கள் ஸித்தமாய்க் கொண்டிருப்பதினுலும், 'நிற்குணம்' என்கிற பதத்திற்கு ஸகலதர்மரஹிதமென்று அர்த்தம் சொல்லுவதற்கு வராததினுல், ஸத்வரஜஸ்தமோகுணரஹிதனென்றே அர்த்தம் சொல்லவேணும்.

பி. வ :—ஸர்வஞ்ஞத்வாதி ஸகலகுணங்கள் ஸத்வரஜஸ்த மோகுணகார்யமாகையால், ப்ரஹ்மம் ஸத்வரஜஸ்தமோகுண ரஹிதமாயின், அதின் கார்யமான ஸர்வஞ்ஞத்வாதி எந்த தர்மங் களும் ப்ரஹ்மத்தினிடத்தில் இல்லை என்று ஸித்திக்கிறதல் லவா ?

வா. வ :—‘ பஶ்ய மே பார்த்த ரூபாணி ஶதஶோத ஸஹஸ் ரஶ: । நாநாவிதானி திவ்யானி நாநாவர்ணாக்ருதீனி ச (கீதா–11-5) என்கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில், ‘ திவ்யானி, அப்ராக்ரு தானி, நானாவர்ணாக்ருதீனி ’ முதலிய வாக்யங்களினால் பரப்ரஹ் மத்தின் ரூபங்களுக்கும், நீலபீதாதி வர்ணங்களுக்கும் அப்ராக்ரு தமானதென்று விஶேஷணம் கொடுத்திருப்பதினால் அந்த ரூபம் ப்ராக்ருதமானதல்ல (ஸத்வரஜஸ்தமோகுணரூப ப்ரக்ருதி கார்ய மானதல்ல.) ஸத்வரஜஸ்தம: கார்யமல்லாத வேறு ரூபாதி களுண்டென்று சங்கராசார்யரே ஸ்பஷ்டமாக சொல்லியிருப்பதி னால் ப்ரஹ்மத்தில் ஸத்வரஜஸ்தமோ குணங்கள் இல்லை என்று சொன்ன மாத்ரத்தினால் எந்த தர்மமும் இல்லை என்று ஸித்திக் கிறதில்லை.

பி. வ :—விஷ்ணுதாஸாசார்யரே ! ப்ராக்ருத மல்ல வென்று சொல்லியிருக்கிறதேயொழிய ஸத்வரஜஸ்தம: கார்யமல்லவென்று சங்கராசார்யர் சொல்லியிருக்கிறாரென்று நீர் எப்படி சொல்லுகி றீர் ?

வா. வி .—‘ மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ’ (கீதா 9-10.) என் கிற ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில்—‘ த்ரிகுணாத்மிகா அவித்யா லக்ஷணா ப்ரக்ருதி: ’ என்கிற வாக்யத்தினால் ப்ரக்ருதி த்ரிகுணாத் மகமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் ‘ அஜா மேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம் ’ (ஶ்வே.) இத்யாதி ஶ்ருதிகளிலும், புராணங்களிலும் ப்ரக்ருதி ஸத்வரஜஸ்தமோ குணாத்மகமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக ஈஶ்வரனிட குணங்கள் ப்ராக்ருதங்களல்ல என்று சொல்லப்பட்டிருப்பதினால் ஸத்வரஜஸ்தமோ குணங்க

ளல்ல என்று ஸித்தமாகிறது. மற்றும் ‘யதேகமவ்யக்த மனந்த ரூபம் விஶ்வம் புராணம் தமஸ: பரஸ்தாத்’ இது முதலிய ஶ்ருதிகளில் பரப்ரஹ்மத்தின் அனந்த ரூபங்களும், தம:பரம் = ஸத்வரஜஸ்தமோ குணாத்மக ப்ரக்ருதியை மீறியிருப்பது (ப்ரக்ருதிகார்யங்களல்ல) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் (பரமாத்மாவின் குணங்கள் அப்ராக்ருதங்களா யிருப்பதினால் = ஸத்வரஜஸ்தமோகுணகார்ய மல்லாததினால்) பரப்ரஹ்மம் ஸத்வரஜஸ்தமோ குணரஹிதமென்று சொன்னமாத்ரத்தினால் பரப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று ஸித்திக்காது.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

வா. வ:—(To the court) தர்மராஜப்ரபோ! பரப்ரஹ்மம் ஸர்வஜ்ஞத்வம், ஸர்வஶக்திமத்வம், ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், ஸர்வநியாமகத்வம், ஸ்வாமித்வம், ஸ்வதந்த்ரத்வம், ஸம்ஹாரகத்வம், ஞானதாத்ருத்வம், ஸர்வோத்தமத்வம், விசித்ரஶக்திமத்வம், சந்த்ரஸூர்யாத்யாதாரத்வம், ஸர்வப்ரகாஶகத்வம், கர்மபலதாத்ருத்வம், ஸர்வாஶ்ரயத்வம், ஸாக்ஷாத் த்ரஷ்ட்ருத்வம் முதலிய கல்யாணகுணங்களால் பூர்ணமானது. அந்த குணங்கள் பாரமார்த்திக ஸத்யமானவைகள் என்கிற விஷயத்தில் ஶ்ருதி, ஸூத்ரம், கீதா இவைகள் ஆதாரங்களாயிருக்கின்றன.

(1) ‘யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஞானமயம் தப: । தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாமரூப மன்னம் ச ஜாயதே’ என்கிற ஶ்ருதியினால் ப்ரஹ்மத்தின்ஸர்வஜ்ஞத்வம், ஸர்வப்ராப்திமத்வம், சதுர்முகோத்பாதகத்வம், நாமரூபாத்மக ப்ரபஞ்ச காரணத்வம் முதலிய குணங்கள் ஸித்தமாகின்றன. சங்கராசார்யரும் இந்த ஶ்ருதிக்கு இப்படியே அர்த்தம் செய்திருக்கிறார்.

(2) ‘பராஸ்ய ஶக்தி: விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக்ரியாச’ ‘ஸகாரணம் காரணாதிபாதிப:’ ‘தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தேவதானாம் பரமம் ச தைவதம் ।

பதிம் பதீனும் பரமம் பரஸ்தாத் விதேம தேவம் புவனேஶ மீட்யம்' 'ஏகோ தேவஸ் ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா | கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ: ஸாக்ஷீ சேதா கேவலோ நிற்குணஶ்ச' 'நித்யோ நித்யானும் சேதனஶ்சேதனுனும் ஏகோ பஹூனும் யோ விததாதி காமான்' 'ஏகோ வஶீ நிஷ்க்ரியாணும் பஹூனுமேகம் பீஜம் பஹுதா ய: கரோதி | தமாத்மஸ்தம் யேனுபஶ்யந்தி தீராஸ்தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்' என்கிற ஶ்வேதாஶ்வதர வாக்யங்களினுல் ப்ரஹ்மத்தின் ஞானபலக்ரியா ரூபமான ஶக்தி ஸித்தமாகிறது. மற்றும் பரமாத்மா ஜகத்துக்கு எந்தெந்த காரணங்களிருக்கின்றனவோ அவைகளுக் கெல்லாவற்றிற்கும் அதிபதி, மற்றும் எல்லாவற்றிற்கும் அதிபதி. ஜகத்துக்கு எந்த ஈஶ்வரர்கள் (நியமிப்பவர்கள்) உளரோ அவர்களெல்லோரையும் நியமிப்பவன், ஸர்வ தேவதைகளைவிட உத்தமமான தேவதை, ஸர்வபூஜ்யன், ஜகத்தைப் பாலிப்பவர்களை பாலிப்பவன், ஜகத்தை நேராக காணுகிறவன், என்று பரமாத்மனே அறியவேண்டும். ஏக: = அஸஹாயன், ப்ரதானன் (ஶ்ரேஷ்டன்) அல்லது ஜகத்தைவிட வேருனவன். க்ரீடாதி குணங்களுடன் கூடினவன், ஸர்வப்ராணிகளிலுமிருப்பவன், கேவலம் ஸர்வ ப்ராணிகளில் மாத்ரமேயல்ல. ஸர்வ பதார்த்தங்களிலு மிருப்பவன், அவ்வளவே யன்றி உள்ளிருந்து நியமிப்பவன், கர்மங்களின் பலன்களைக் கொடுப்பவன், ஸர்வ ப்ராணிகளுக்கு ஆதாரன், ஸர்வ ஜகத்தையும் நேராகக்காண்கிறவன். நிற்குண: = ஸத்வராஜஸ்தமோகுணரஹிதன், மற்றும் நித்ய பதார்த்தங்களுக்கு நித்யத்வத்தை யளிப்பவன். சேதனங்களுக்கு சைதன்யத்தை யளிப்பவன். ஸர்வ ஜனங்களுக்கும் அவரவர்களால் அபேக்ஷிக்கப்படும் ஸர்வ பதார்த்தங்களையும் ஸ்ருஜித்துக் கொடுப்பவன், மற்றும் ஸர்வஸ்வாமி. இத்தகைய தன்னிட அந்தர்யாமியான பரமாத்மனே யார் காண்கிருர்களோ அவர்களுக்கு ஶாஶ்வதமான ஸுகம் = மோக்ஷம் கிடைக்கிறது. இதரர்களுக்கு என்ருல்—'ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதம், ஸ்வாமி அல்ல, பூஜ்யமல்ல, ரக்ஷகமல்ல, நானே ப்ரஹ்மம்' என்று (மேற் சொல்லியதற்கு விருத்தமாக) அறிபவர்களுக்கு மோ

க்ஷம் கிடைக்காது. மோக்ஷம் கிடைக்காமல் போவதேயன்றி நஸுகம் = துக்கமே கிடைக்கிறது, என்று இவ்வாக்யங்களில் பரமாத்மனிட அநேக குணங்கள் (தர்மங்கள்) சொல்லப்பட்டிருக்கின்றன.

"உபே அஸ்மின் த்யாவா ப்ருதிவீ அந்தரேவ ஸமாஹிதே। உபாவக்னிஶ்ச வாயுஶ்ச ஸூர்யாசந்த்ரமஸாவுபௌ" இது முதலிய சாந்தோக்ய வாக்யங்கள், பரப்ரஹ்மம்—முக்தாமுக்தர்களான அக்னி, வாயு, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்ரங்கள் இவைகளே முதலியவைகளுக்கு ஆஶ்ரயம் என்று ஸூர்ய சந்த்ராத்யாதாரத்வம் சொல்லுகின்றன.

ஒவ்வொரு ஶப்தத்தினால் ஒவ்வொரு குணம் ப்ரதிபாதிக்கப்படுகிறது, 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' (கீதா 15.) 'ஸர்வே வேதா யத்பதமாமனந்தி' இது முதலிய வாக்யங்களில் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஸர்வ (அநந்தமான) வேதங்களும் பரமாத்மனை ப்ரதிபாதித்துக்கொண்டிருப்பதினால் அவனிடத்தில் அநேக குணங்களுண்டென்று ஸித்தமாகிறது.

வேதார்த்த நிர்ணயகங்களான—'அதாதோ ப்ரஹ்மஜிஞ்ஞாஸா' என்கிற முதலாவது ஸூத்ரம் முதல் 'அனாவ்ருத்திஶ்ஶப்தா தனாவ்ருத்திஶ் ஶப்தா॥த்' என்கிற கடைசி ஸூத்ரம் வரைக்குமுள்ள 564 ஸூத்ரங்களும் பரமாத்மாவின் அனந்த த்ர்மங்களை ப்ரதிபாதிக்கின்றன. த்ருஷ்டாந்தத்திற்காக தர்ம ப்ரதிபாதகங்களான சில ஸூத்ரங்களைச் சொல்லுகிறோம். 'அதாதோ ப்ரஹ்மஜிஞ்ஞாஸா' என்கிற ஸூத்ரம்—'ப்ரஹ்ம' என்கிற பதத்தினாலேயே 'அதகஸ்மாதுச்யதே ப்ரஹ்மேதி ப்ருஹ்ஹதி ப்ரும்ஹயதிச' இது முதலிய ஶ்ருத்யனு ஸாரமாக ப்ருஹத்வாத்யனேக குணங்களை ப்ரதிபாதிக்கிறது. மற்றும் ப்ரஹ்மத்தின் விசாரம் செய்யவேணுமென்று சொல்லியிருப்பதினால் ப்ரஹ்மத்தில் ஞேயத்வம் ஸித்தமாகிறது.

'ஜன்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரத்தினால் ப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜன்மாதி காரணத்வம் ஸித்தமாகிறது. 'ஶாஸ்த்ர யோனித்வாத்' என்கிற ஸூத்ரம் ஶாஸ்த்ரஜன்ய ஞானவிஷயத்

வரூப தர்மங்களைத் தெரிவிக்கிறது. அத்வைத மதவ்யாக்யானத்தின் படிக்கு—ஶாஸ்த்ர கர்த்ருத்வரூப தர்மத்தை அறிவிக்கிறது. அப்படியே 'அந்தஸ்தத்தர்மோபதேஶாத்' 'ஆகாஶஸ்தல்லிங்காத்' 'அத ஏவப்ராண:' 'ஜ்யோதிஶ் சரணாபிதானாத்' இது முதலிய ஸூத்ரங்கள் அநேக தர்மங்களைச் சொல்லுகின்றன.

'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்ட: மத்த: ஸ்ம்ருதிர் ஞானமபோஹனம் ச' 'ஈஶ்வரஸ் ஸர்வபூதானாம்' 'உத்தம: புருஷஸ்த்வன்ய;' 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' 'யோலோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:' 'பரம் ப்ரஹ்ம பரம்தாம பவித்ரம் பரமம் பவான்' 'ஸர்வ மேதத் ருதம் மன்யே யன்மாம் வதஸி கேஶவ' இவை முதலிய கீதா வாக்யங்கள் பரப்ரஹ்மத்தின் ஜகத்காரணத்வம், ஈஶ்வரத்வம், ஶிக்ஷகத்வம் முதலிய அநேக தர்மங்களைச் சொல்லிக்கொண்டே, அந்த எல்லா தர்மங்களும் நிஜமானது என்றும் பொய்யானதல்ல என்றும் சொல்லுகின்றன.

'பஶ்யாமி த்வாம் ஸர்வதோனந்த ரூபம்' 'த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம்' இது முதலிய கீதா வாக்யங்களினால் ஸித்தமான அர்ஜுனாதிகளின் ப்ரத்யக்ஷத்தினாலும்; 'யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோனிம்' இத்யாதி ஶ்ருதிவாக்யங்களினால் ஸித்தமான பரப்ரஹ்மத்தின் கர்த்ருத்வம், ருக்மவர்ணத்வம் (தங்கத்தைப்போன்ற நிறம்), ஸ்வாமித்வம், சதுர்முககாரணத்வம், அனந்தரூபத்வம் முதலிய தர்மங்கள் ஸித்தமாகின்றன. மற்றும்—'ஜகத்வ்ய வஸ்தா ப்ரஶாஸ்த்ருபூர்விகா, வ்யவஸ்தாத்வாத், ராஜ்யவ்யவஸ்தாவத்' இது முதலிய அனுமானத்தினாலும் நியாமகத்வாதி குணங்கள் ஸித்திக்கின்றன. இவ்விதமாக மேற் செய்யப்பட்ட விசாரங்களினால் ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி ஸகல கல்யாணகுண பரிபூர்ணமானதென்றே ஒப்புக்கொள்ள வேண்டியதென்று நம்மிட அபிப்ராயம் என்கிற விஷயத்தை கோர்டார் ஸமுகத்தில் விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறோம்.

## ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பி. வ:— (To the court) மை லார்ட்! பரப்ரஹ்மம் நிர் விசேஷம் = ஸகலதர்மரஹிதமானது. (அதினிடத்தில் ஸர்வஞ் ஞத்வாதி தர்மங்களில்லை) எனெனில் :—

(1) "கேவலோ நிற்குணஶ்ச" என்கிற ஶ்வேதாஶ்வதர ஶ்ருதி—ப்ரஹ்மம் நிற்குணம் (ஸகலதர்மரஹிதம்) என்று சொல்லுகிறது. 'நிற்குணம்' என்கிற பதத்திற்கு 'குணை: ஸத்வரஜஸ்தமாம்ஸி தை: ரஹிதம் நிற்குணம்' என்கிற அர்த் தத்தை சங்கராசார்யர் செய்திருக்கிறார். ஆகையால் 'நிற்குணம்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று ஸித்த மாகாது" என்று வாதி வகீல் சொல்லுவது சரியல்ல. எல்லா தர்மங்களும் ஸத்வரஜஸ்தமோகுண கார்யங்களாயிருப்பதினால் ப்ரஹ்மம் ஸத்வரஜஸ்தமோ குணங்களால் ரஹிதமென்று சொல்லுவதாயின் ப்ரஹ்மத்தில் ஸத்வரஜஸ்தம: கார்யங்களான தர்மங்களில்லை என்று ஸித்தமாகிறபடியால்—'நிற்குணம்' என் கிற பதத்தினால் ப்ரஹ்மம் ஸர்வதர்மரஹிதமென்று ஸித்த மாகிறது.

(2) 'அஸ்தூலமனண்வஹ்ரஸ்வம்' என்கிற ஶ்ருதியினால் ப்ரஹ்மம் ஸ்தூலமல்ல (பெரிதல்ல), ஹ்ரஸ்வமல்ல (குட்டை யல்ல), தீர்க்கமல்ல (நீட்டல்ல), ரக்தமல்ல, ஸ்நேகரூபமல்ல, சாயாரூபமல்ல, தமோரூபமல்ல, கந்தரூபமல்ல, சக்ஷுரிரூப மல்ல, வாகிந்த்ரியரூபமல்ல, தேஜோரூபமல்ல, வாயுரூபமல்ல, ஞானத்திற்கு காரணமல்ல, அந்தரரஹிதம், (உள்ளில்லாதது) பாஹ்யரஹிதம் (வெளியில்லாதது) புசிப்பதல்ல, ஜனங்களால் புசிக்கப்படுவதல்ல, என்று ப்ரஹ்மத்தில் ஸ்தூலத்வாதி அனேக தர்மங்களில்லை என்று நிஷேதிக்கப்படுகிறது.

(3) 'யத்த தத்ரேஶ்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுஃ: ஶ்ரோத்ரம் தத்பாணிபாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் | ததவ்யயம் யத்பூதயோனிம் பரிபஶ்யந்தி

தீரா:' என்கிற முண்டகஶ்ருதி பரப்ரஹ்மம், அத்ரேஶ்யம் = ஞானேந்த்ரியங்களினல் அடைவதற்கு யோக்யமானதல்ல, அக்ராஹ்யம் = கர்மேந்த்ரியங்களினுல் க்ரஹிப்பதற்கு யோக்ய மானதல்ல, அகோத்ரம் = கோத்ரரஹிதமானது, அவர்ணம் = ஸ்தூலத்வம், ஶுக்லத்வம் முதலிய தர்மரஹிதமானது, கண்ணில் லாதது, காதில்லாதது, கர்மேந்த்ரியங்களில்லாதது, நாஶரஹித மானது, விபும் = பலவிதமான பதார்த்த ரூபங்களை அடைபவன் என்று பரப்ரஹ்மத்திற்கு த்ருஶ்யத்வாதி தர்மங்களை நிஷேதிக் கிறது.

(4) 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற தைத்திரீய ஶ்ருதி ப்ரஹ்மம் நிர்விசேஷம் (ஸகல தர்மரஹிதம்) என்று அறிவிக்கிறது. எப்படி எனில்:—ப்ரஹ்மம் அதர்க்யமாக வும், அப்ரத்யக்ஷமாகவும் இருப்பதினுல், அதில் தர்மங்கள் (குணங்கள்) உண்டென்று ப்ரத்யக்ஷத்தினுலாவது, தர்க்கத்தினு லாவது (அனுமானம் = யுக்தியினுலாவது) அறியப்படாமலிருப் பதினுல் ஶப்தத்தினுலேயே அறியவேண்டும். ப்ரஹ்ம மென்னமோ அவாச்யமானது (ஶப்தத்தினுல் ப்ரதிபாத்யமல்லா தது) என்று இந்த ஶ்ருதி சொல்லிக்கொண்டிருப்பதால் ப்ரஹ் மத்தில் தர்மங்கள் ஸித்தமாகிறதில்லை. மற்றும் எப்படி பசனக் ரியை (சமையல் என்கிற வேலை) இருப்பதினுல் சமைப்பவன் பாசகன் என்கிற ஶப்தத்தினுல் சொல்லப் படுகிருனே, பண்ட = ஞானம் இருப்பதினுல் ஞானி பண்டிதனென்கிற ஶப்தத்தினுல் சொல்லப்படுகிருனே அப்படியே ப்ரஹ்மத்தில் தர்மங்களிருக்கு மாயின் அந்தந்த தர்மபோதகமான பதத்தினுல் ப்ரஹ்மம் வாச் யமாய் 'ப்ரஹ்மம் அவாச்யம்' என்பது பொருந்தாது. ப்ரஹ்மம் அவாச்யமென்று ஸித்தமாயிருப்பதினுல் ஸர்வதர்மரஹித மென்று ஸித்தமாகிறது.

(5) "அஶப்தமஸ்பர்ஶ மரூபமவ்யயம் ததாரஸம் நித்ய மகந்தவச்ச யத் | அனுத்யனந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ரமுச்யதே" என்கிற 1-3-15 வது காடக வாக்யம்— ப்ரஹ்மம் ஶப்தஸ்பர்ஶரூபரஸகந்தம் முதலிய குணங்

களால் ரஹிதமானது, நாமரஹிதமானது என்று ப்ரஹ்மத்தில் ஶப்தாதி குணங்களின் நிஷேதத்தைச்செய்கிறது. ஆகையால் இவ்வாக்யத்தினல் ப்ரஹ்மம் ஶப்தாதிதர்மங்களால் ரஹிதமான தென்று ஸித்தமாகிறது.

(6) "நிற்குணம் குணபோக்த்ரு ச" என்கிற 13–14–வது கீதாஶ்லோகத்தினல் ப்ரஹ்மம் நிற்குணம் (ஸகலதர்மரஹிதம்) என்று ஸித்தமாகிறது.

(7) "நஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ரஹி" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்திற்கு—வேதத்திலுள்ள சில வாக்கியங் கள் ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி குணயுக்தமென்று சொல்லு கின்றன, சில வாக்யங்கள் நிர்விஶேஷம் (ஸகலதர்மரஹிதம்) என்று சொல்லுகின்றன, இரண்டு வாக்யங்களும் ப்ரமாணங் ளாயிருப்பதினல் ப்ரஹ்மத்தின் ஸவிஶேஷம், நிற்விஶேஷம் என்கிற இரண்டு ரூபங்களையும் ஒப்புக்கொள்ளவேண்டுமா? ஒரே ரூபத்தை (ஸவிஶேஷம் அல்லது நிர்விஶேஷம்) ஒப்புக்கொள்ள வேண்டுமா என்கிற விசாரமுண்டாகவே, ப்ரஹ்மம் ஒரே ரூபமானதென்று ஒப்புக்கொள்ளவேண்டும், அந்த ரூபமும் நிர் விஶேஷமான ரூபமென்றே ஒப்புக்கொள்ளவேண்டு மென்று சங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறுர். ஆகையால் மேற் சொன்ன ஸூத்ரத்தினல் ப்ரஹ்மத்தின் நிற்விசேஷத்வம் (ஸகல தர்மராஹித்யம்) ஸித்தமாகிறது.

(8) 'தத்வமஸி' என்கிற வாக்யம் ஜீவர்களுக்கு ப்ரஹ்மத் துடன் அபேதத்தைச் சொல்லுகிறது. ப்ரஹ்மத்தினிடத்தில் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களிருக்குமாயின் அல்பஞ்ஞத்வாதி தர் மங்களுடன் கூடின ஜீவனுடன் ஐக்யம் பொருந்தாது. ஆகை யால் ப்ரஹ்மத்தில் தோன்றும் தர்மங்கள் மித்யா (முக்காலத் திலுமில்லாதது) என்று அர்த்தாத் ஸித்தமாகிறது.

(9) "நேஹ நாநாஸ்தி கிஞ்சன" என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத் தினிடத்தில், நாநா கிஞ்சன = எந்த தர்மங்களும், நாஸ்தி =

இல்லை என்று சொல்லுகிறதினுலும் ப்ரஹ்மம் குணரஹித மென்று ஸித்தமாகிறது.

(10) 1-1-20 வது ப்ரஹ்ம ஸூத்ர வ்யாக்யானத்தில் சங்கராசார்யர்—'மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூத குணைர்யுக்தம் மைவம் மாம் ஞாதுமர்ஹஸி' (மஹாபாரதம் ஶாந்திபர்வம் அ. 347.) என்கிற வாக்யத்தை ப்ரமாணமாக எடுத்துக்கொண்டு அநேக குணங்களுடன் கூடிய விஶ்வரூபம் மாயாமயம் (கல்பிதம்) என்று ஸித்தப்படுத்தி காட்டியிருக்கிறுர். ஆகையால் விஶ்வரூபமும், அதில் தோன்றும் குணங்களும் (தர்மங்களும்) மாயாமயமானவைகள் (பொய் = முக்காலத்திலுமில்லாதது) என்று ஸித்திக்கின்றன. ப்ரஹ்மத்தில் தர்மங்களை ப்ரதிபாதிக்கும் வேதவாக்யங்கள் நிஷேதிப்பதற்காக மித்யாதர்மங்களை அனுவாதம் செய்கின்றன. அவ்வாக்யங்களுக்கு அந்த தர்மங்களை ப்ரதிபாதிப்பதில் தாத்பர்யமில்லை.

மித்யா பதார்த்தங்களை அறிவிக்கும் (முத்துச்சிப்பியில் 'இதம் ரஜதம்' இது வெள்ளி என்று அறிவிக்கும்) ப்ரத்யக்ஷமெப்படி அப்ரமாணமாகிறதோ, அப்படியே மித்யையான ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை ப்ரதிபாதிக்கும் வேதவாக்யங்களுக்கு அத்வைதிகள் பௌத்தர்களைப்போல் அப்ராமாண்யத்தையே அங்கீகரித்திருக்கிறுர்களென்று அறியக்கூடாது. ஏனெனில்:—மித்யா பதார்த்தங்கள் வ்யாவஹாரிகங்களென்றும், ப்ராதிபாஸிகங்களென்றும் இரண்டுவிதமானவைகள். 'இதம் ரஜதம்' இது முதலிய ப்ரத்யக்ஷம் ப்ராதிபாஸிக பதார்த்தங்களை அறிவிக்கிறபடியால் அவை அப்ரமாணங்களாயினும், ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்கள் வ்யாவகாரிகமானவைகளாகையால் அந்த வ்யாவகாரிக ஸர்வஞ்ஞத்வாதிகளை ப்ரதிபாதிக்கும் வேதவாக்யங்களுக்கு தாத்விக ப்ராமாண்யம் பொருந்தாவிடினும், வ்யாவகாரிகப்ராமாண்யம் பொருந்துகிறபடியால் அந்த வேதவாக்யங்களுக்கு பௌத்தர்களைப்போல் ஸர்வதா அப்ராமாண்யத்தை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம்.

வஸ்துத: விசாரிக்குங்கால்—‘ அத்ர பிதா அபிதா பவதி, மாதா அமாதா பவதி, வேதா அவேதா: ’ என்கிற வேதமே தன்னிட மித்யாத்வத்தை (முக் காலத்திலுமில்லாத் தன்மையை) அறிவிக்கிறபடியால் வேதமும் மித்யையே (பொய்யே), வேதத்தின் ப்ராமாண்யமும் மித்யை (பொய்யே.)

வேதமே பொய்யாயின் எங்களிட அத்வைதமதம் எப்படி ஸித்திக்கும் ? வேரு மதங்களின் கண்டனம் எப்படி யாகும் ? என்று ஶங்கிப்பதற்கு அவகாஶமில்லை. ஏனெனில்:—‘ ப்ரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா ’ என்கிற நம்மிட அத்வைதமதத்தில் ஜகத்து மித்யை என்று ஒப்புக் கொண்டிருப்பதினுல், ஜகத்தை ஸாதிப்பதற்காக ப்ரமாணங்களின் ஆவஶ்யகமில்லை. ப்ரமாணங்களினுல் ஜகத்து ஸித்தமாயின் அந்த ஜகத்து ஸத்யமாய் அத்வைதமதமே மூழ்கிப் போகும். ப்ரஹ்ம மென்னமோ அஞ்ஞேயம், ஸ்வப்ரகாஶமானது. (இதர ப்ரமாணங் களினுல் அறியப்படாதது.) ஆகையால் ப்ரஹ்மத்தை ஸாதிப்பதற்கும் ப்ரமாண மாவஶ்யகமில்லை. ஜகத்தைப் போலவே நம்மிடமதம், இதர மதங்களின் கண்டனம் இவைகளெல்லாம் பொய்யாயிருப்பதினுல் ஸ்வமதத்தை ஸ்தாபிப்பதற்காகிலும், இதர மதத்தை கண்டிப்பதற்காகிலும் ப்ரமாணங்களின் ஆவஶ்யகதை இல்லை. ப்ரமாணங்களினுல் மதகண்டனம் ஸித்தமாயின் அதுவும் ஸித்தமாய் அத்வைதமதம் மூழ்குவதே.

இவ்விதமாக வேதம், ஸூத்ரம், கீதை, என்கிற ப்ரஸ்தான த்ரயத்தில் ப்ரஹ்மம் நிர்விஶேஷமென்று சொல்லியிருப்பதினுல் ப்ரஹ்மம் நிர்விஶேஷ மென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். தர்ம ப்ரபுக்கள் இவ்விஷயங்களை நன்ருய் ஆராய்ந்து சரியான தீர்மானம் கொடுக்கவேணுமாய்க் கோருகிறேம்.

---

## வாதிவகீல் ரீ ஆர்க்யுமேண்ட்.

(1) 'கேவலோ நிற்குணஶ்ச' என்கிற ஶ்ருதியிலும், 'நிற்குணம் குணபோக்த்ருச' என்கிற கீதா வாக்யத்திலுள்ள 'நிற்குண' மென்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ்தமோ குணரஹித மென்று சங்கராசார்யர் வ்யாக்யானம் செய்திருக்கிறார். ஶாஸ்த்ரங்களிலும் 'குண' பதத்திற்கு ஸத்வரஜஸ் தமோ குணங்களிலேயே விஶேஷமாக ப்ரயோக மிருப்பதினால் நிற்குண மென்கிற பதத்திற்கு ஸத்வரஜஸ் தமோ குணரஹிதமென்று அர்த்தம் செய்வதே யோக்யமாகிறது. மற்றும் அந்த 'நிற்குண' மென்கிற பதத்தின் பூர்வோத்தர வாக்யங்களில்—ப்ரஹ்மம் ஸ்வாபாவிகமான ஞான பலக்ரியா ரூபமான ஶக்தியுடன் கூடினது, ஜகத்துக்குக் காரணமானது, ஜகத்துக்கு எத்தனை காரணங்களுண்டோ, அவ்வெல்லாவற்றிற்கும் காரணத்வ ஶக்தியைக் கொடுப்பது, ஜகத்தில் எந்த ஈஶ்வரர்கள் (நியாமகர்கள்) உளரோ, அவ்வெல்லோருக்கும் ஈஶ்வரன் (நியாமகமானது), எல்லா தேவதைகளுக்கும் தேவத்வத்தைக் கொடுப்பது, ஜகத்தை ரக்ஷிப்பவர்களை ரக்ஷிப்பது, எல்லா ஜகத்துக்கும் ஸ்வாமி என்று ப்ரஹ்மத்தில் அநேக குணங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதினால் அந்த அநேக வாக்யங்களுக்கு விருத்தமாக 'நிற்குண' மென்கிற பதத்திற்கு ஸர்வதர்மரஹிதமென்று அர்த்தம் செய்வது பொருந்தாது. தவிர—வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பரப்ரஹ்மத்தின் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்கள் பொய் என்று சொல்லுவது அவைதிகர்களான நாஸ்திக ஜனங்களுக்கே தகுமேயொழிய, வேதத்திற்கு ப்ராமாண்யத்தை யொப்புக் கொள்ளும் வைதிகர்களுக்கு யோக்யமாகாது. வேதத்தில் சொல்லப்பட்டவைகள் பொய் என்பதும், வேதம் அப்ரமாண மென்பதும் ஒன்றேயாகிறது.

'நிற்குண:' என்கிற ஶ்ருதியினால் குணங்களை நிஷேதிப்பதற்காக 'யஸ்ஸர்வஞ்ஞ:' இது முதலிய வேதவாக்யங்கள் குணங்களை அனுவாதம் செய்கின்றன. அந்த குணங்களைச்

சொல்லும் விஷயத்தில் அவ்வேதவாக்யங்களுக்கு தாத்பர்ய மில்லை என்று ப்ரதிவாதிகள் சொல்லுவது சரியல்ல. ஏனெனில் :—'அயம் ஸர்ப:' இது ஸர்பம் (பாம்பு) என்று யாருக்காவது ப்ரமம் வந்திருக்குமாயின், அதை அனுவாதம் செய்து கண்டிக்க வேணுமேயொழிய, ப்ரஸக்தி இல்லாமலே இது ஸர்பமல்ல என்று நிஷேதிப்பது எப்படி யோக்யமல்லவோ அப்படியே—பரமாத்மனிடத்தில் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களிருக்கின்றன என்கிற ப்ரமம் எதினலாவது வந்திருக்குமாயின், அந்த குணங்களை இவ்வேதவாக்யம் அனுவாதம் செய்து பரமாத்மனிடத்தில் அந்த குணங்களில்லை என்று நிஷேதிக்கக்கூடும். பரமாத்மனிடத்தில் குணங்களுண்டென்று வேதத்தைத் தவிர வேறெதினலும் ஸித்தமாகாதிருப்பதினல், அதை அனுவாதம் செய்து, நிஷேதிக்கிறதென்பது ஸரியல்ல. மற்றும் அவ்வாக்யத்தில் 'அங்கு இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது அது யுக்தமல்ல' என்கிற அனுவாதத்தை யறிவிக்கும் அடையாளமுமில்லை.

வேதம் தானே பரமாத்மனிட குணங்களைச்சொல்லி தானே நிஷேதிப்பதைவிட *'ப்ரக்ஷாலனத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶனம் வரம்' (சேற்றை மெறித்து அலும்பிக்கொள்ளுவதைவிட மெறிக்காமலே இருப்பது மேலாகும்) என்று சொல்லியவாறு வேதம் அந்த குணங்களைச் சொல்லாமலிருப்பதே மேலாகும். மேற்சொல்லிய காரணங்களினல் 'யஸ்ஸர்ஞ்ஞ:' இது முதலிய ஶ்ருதிகள் குணங்களை நிஷேதிப்பதற்காக அனுவாதம் செய்கின்றன, குணங்களுண்டென்று சொல்லும் விஷயத்தில் அவ்வேதவாக்யத்திற்கு தாத்பர்யமில்லை என்று சொல்லுவது மிகவும் அயுக்தமாகிறது.

தவிர—ஸர்வஞ்ஞத்வ, ஸர்வஶக்திமத்வாதி தர்மங்களை நிஷேதிக்கும் வேதவாக்யமொன்றும் கிடையாது. எங்கெந்த

---

* சங்கராசார்யர் இந்த ந்யாயத்தை தம்மிட பாஷ்யத்தில் எடுத்துக்கொண்டு—'தானே சொல்லி தானே நிஷேதிப்பது யுக்தமல்ல' என்று சொல்லியிருக்கிறர்.

வாக்யம் பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறதோ அந்தந்த வாக்யம் பரப்ரஹ்மத்தின் அநேக குணங்களை சொல்லுகிறது. தர்மங்களைச் சொல்லாமல் பரப்ரஹ்மத்தின் அறிவு ஶப்தத்தினுலுண்டாவதற்கு ஸாத்யமில்லை. எப்படி 'பாசக:' என்கிற ஶப்தம் தன்னுல் போதிக்கப்படும் வஸ்துவினிடத்தில் பசனக்ரியையையும்; 'பாடகஃ' என்கிற ஶப்தம் படனக்ரியையையும்; 'ஶ்யாம' என்கிற ஶப்தம் ஶ்யாமவர்ணத்தையும்; 'ப்ராஹ்மணஃ' என்கிற பதம் ப்ராஹ்மணத்வத்தையும் போதிக்கிறதோ அப்படியே 'ப்ரஹ்ம' மென்கிற பதம் (ப்ரஹ்மத்தில்) ப்ருஹத்வாதி (பூர்ணத்வாதி) குணங்களை போதிக்கிறது, 'ஆத்மா' என்கிற ஶப்தத்தினுல்—'யச்சாப்னோதி யதாதத்தே யச்சாத்தி விஷயானிஹ। யச்சாஸ்ய ஸந்ததோ பாவஸ்தஸ்மாதாத்மேதி பண்யதே' இத்யாதி ப்ரமாணங்களை யனுஸரித்து ஜகத்கர்த்ருத்வம், ஸ்வாமித்வம் முதலிய குணங்கள் தோன்றுகின்றன. ப்ரதிவாதியினுல் சொல்லப்பட்ட 'கேவலோ நிற்குணஶ்ச' என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தில் ஸத்வரஜஸ்தமோகுணங்கள் இல்லை என்று அறிவிக்கிறதே யொழிய தர்மமே இல்லை என்று அறிவிக்கிறதில்லை. சங்கராசார்யரும் அப்படியே அர்த்தம் செய்திருக்கிருர்.

"எல்லாம் ஸத்வரஜஸ்தமோகுண கார்யமாகையினுல் ஸத்வரஜஸ்தமோகுண ரஹிதமென்று சொல்லுவதினுல், ஸத்வரஜஸ்தமோகுண கார்யமாயிருக்கும் எந்த தர்மமும் ப்ரஹ்மத்தில் இல்லை என்று அர்தாத் ஸித்தமாகிறது" என்று ப்ரதிவாதி சொல்லுவது யுக்தமல்ல. சங்கராசார்யரே "பஶ்யமே பார்த்த ரூபாணி ஶதஶோத ஸஹஸ்ரஶஃ। நாநாவிதானி திவ்யானி நாநா வர்ணுக்ருதீனிச" என்கிற 11-2 வது கீதா ஶ்லோகத்தின் வ்யாக்யானத்தில் பரமாத்மாவின் ரூபாதிகளுக்கு கொடுத்திருக்கும் 'திவ்யானி' என்கிற விஶேஷணத்திற்கு **அப்ராக்ருதானி** என்று அர்த்தம் செய்திருப்பதினுல் ஸத்வரஜஸ்தமோகுணரூப ப்ரக்ருதி கார்யமல்லாத ரூபாதிகளிருக்கின்றனவென்று ஸித்தமாகிறபடியால் எல்லாம் ஸத்வரஜஸ்தமோகுண கார்யமென்று சொல்லுவது யுக்தமல்ல. ஆகையால் 'நிற்குண' மென்கிற பதத்தினுல் ப்ரஹ்மம் தர்மரஹிதமென்று ஸித்தமாகமாட்டாது.

(2) 'யஸ்ஸர்வஞ்ஞ:' இது முதலிய வேதவாக்யங்களில் எந்த ஸர்வஞ்ஞத்வ ஸர்வஶக்திமத்வாதி தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளின் நிஷேதத்தை 'அஸ்தூலமனணு' என்கிற வாக்யம் செய்வதில்லை. 'அஸ்தூலமனணு' என்கிற வாக்யம் ஸ்தூலமல்ல ஸூக்ஷ்மமல்ல என்கிற இவை முதலிய சில தர்மங்களை நிஷேதிப்பதைப்போல் தோன்றினும் —'அணோரணீயான் மஹதோ மஹீயான்' இது முதலிய ஶ்ருதிகள் பரப்ரஹ்மத்தில் அணுத்வம் மஹத்வம் முதலிய தர்மங்களைச் சொல்லியிருப்பதினால் அணுத்வமஹத்வாதி எல்லா தர்மங்களையும் நிஷேதிப்பது பொருந்தாததினால் ப்ராக்ருதமான ஸ்தூலத்வ அணுத்வ தர்மங்களில்லை என்றே அர்த்தம் செய்ய வேணும்.

'அஸ்தூலமனணு' என்கிற வாக்யத்தின் முன்னிருக்கும் 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்கி' முதலிய அநேக வாக்யங்களில் த்ரஷ்ட்ருத்வம், நியமனகர்த்ருத்வம், தாரகத்வம், ஞானப்ரதத்வம், ஸர்வஞ்ஞத்வம், மந்த்ருத்வம், விஞ்ஞாத்ருத்வம், ஸர்வாதாரத்வம், ஞேயத்வம் முதலிய தர்மங்களைச் சொல்லியிருப்பதினால் பரப்ரஹ்மத்தில் 'யஸ்ஸர்வஞ்ஞ:' முதலிய ஶ்ருதி ஸித்தமான ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களே இல்லை என்பது 'மே மாதா வந்த்யா' (என்தாய் மலடி) என்று சொல்லுவதைப்போல் மிகவும் அயுக்த மாகிறது.

(3) 'யத்ததத்ரேஶ்ய மக்ராஹ்யம்' என்கிற வாக்யம் த்ருஶ்யத்வாதி இரண்டு மூன்று தர்மங்களை நிஷேதிப்பதைப்போல் தோன்றினும், 'யஸ் ஸர்வஞ்ஞ:' இது முதலிய ஶ்ருதிஸித்தமான ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை நிஷேதிக்காததினால் இந்த வாக்யத்தினால் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களின் நிஷேதம் செய்யப்பட்டிருக்கிறதென்பது மிகவும் அயுக்த மாகிறது என்கிற விஷயம் சிறுவர்களுக்கும் தெரிந்துக்கொண்டிருக்க, ப்ரதி வாதிக்கு தெரியாமலிருக்கும் விஷயத்தை கோர்டார் கவனிக்க வேண்டியது.

'ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய:' 'மனஸைவானு த்ரஷ்டவ்யம்' இத்யாத்யனேக வாக்யங்களினுலும், 'யத்தத த்ரேஶ்யம்' என்கிற வாக்யத்திற்கு முன்னிருக்கும் 'யத் பூத யோனிம் பரிபஶ்யந்தி தீரா:' என்கிற வாக்யத்தினுலும் பரமாத் மனிடத்தில் த்ருஶ்யத்வம் (அபரோக்ஷஞான விஷயத்வம்) ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருப்பதினுல் 'அத்ரேஶ்யம்' என் கிற பதத்திற்கு ப்ரஹ்மம் த்ருஶ்யமல்ல என்று அர்த்தம் செய் வது யுக்தமல்ல, ஸ்வவ்யாஹதமுமாகிறது. ஆகையால் 'த்ருஶ் யதே த்வக்ர்யயா புத்யா ஶுத்தேன மனஸா ஸதா' இத்யாதி வாக்யங்களை யனுஸரித்து அஶுத்தமான மனதினுல் ப்ரஹ்மம் த்ருஶ்யமல்ல (அறியப்படாதது) ஶுத்தமான மனதினுலேயே, த்ருஶ்யதே=அறியப்படுகிறது என்றே அர்த்தம் செய்யவேண் டும். மற்றும் 'ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்' 'பூதயோனிம்' இத் யாதி பதங்களினுல் ஸர்வவ்யாப்தத்வம், ஸூக்ஷ்மத்வம், பூத காரணத்வம் முதலிய தர்மங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

அவ்வாக்யத்திற்கு முன்னிருக்கும் 'யஸ்ஸர்வஞ்ஞ:' முத லிய வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களை ப்ரதிபாதிக்கிறதினுல் இவ்வாக்யமும் ப்ரஹ்மம் நிற்விஶேஷ மென்கிற விஷயத்தில் ஆதாரமாவதில்லை.

(4) 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற வாக்யமும் ப்ர ஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று போதிக்காது. ஏனெனில்:— அந்த வாக்யத்தில் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்று போதிக் கும் பதமே இல்லை. "ப்ரஹ்மத்தில் தர்மம் ஶப்தத்தினுலேயே ஸித்தமாகவேணும். யத:=எந்த பரமாத்மனிடமிருந்து ஶப்தம் திரும்பி வருகிறதோ என்று 'யதோவாசோ நிவர்த்தந்தே' என்கிற ஶ்ருதி சொல்லுகிறதினுல்—ப்ரஹ்மம் ஶப்தத்தினுல் வாச்யமல்லவென்று ஸித்திக்கிறது. எப்போது ப்ரஹ்மம் ஶப்தத்தினுல் வாச்யமாகிறதில்லையோ (ஶப்தத்தினுல் அவாச்ய மாயிற்றே) அப்போது ப்ரஹ்மத்தில் ஶப்தத்தினுல் தெரிய வரும் தர்மங்களெப்படி ஸித்தமாகும்? ஆகையால் 'யதோ வாசோ நிவர்தந்தே' என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தின் ஶப்தவாச்

யத்வத்தை நிஷேதித்துக்கொண்டே, ப்ரஹ்மம் ஸகலதர்மரஹித மென்கிற விஷயத்தில் ஆதாரமாகிறது" என்று ப்ரதிவாதி சொல்லுவது சரியல்ல. ஏனெனில்:—'யத:' என்கிற ஶப்தத் தினல் ப்ரஹ்மத்தின் அறிவு ஆகாவிடின், இவ்வாக்யத்தினல் ப்ரஹ்மத்தின் ஶப்தாவாச்யத்வம் (ப்ரஹ்ம் ஶப்தத்தினல் வாச்யமாகாமலிருக்கை) ஸித்தமாகிறதென்பது எப்படிப் பொருந்தும்? (பொருந்தாது). ப்ரஹ்மம் ஶப்தத்தினல் வாச்ய மாகாவிடினும், லக்ஷணவ்ருத்தியினல் போதமுண்டாய்க்கொண் டிருப்பதினல் 'யதோவாசோ நிவர்த்தந்தே' என்கிற ஶ்ருதி 'யத:' என்கிற பதத்தினல் லக்ஷணவ்ருத்தியினல் அறியப்படும் ப்ரஹ்மத்தில் வாச்யத்வத்தின் நிஷேதத்தைச் செய்கிறதென்று சொல்லுவதும் ஸரியல்ல. ஏனெனில்:—லக்ஷணவ்ருத்தியினல் ப்ரஹ்மத்தின் அறிவு உண்டாக வேண்டுமாயின் பூர்வத்தில் அந்த ப்ரஹ்மத்தின் ஞானம் வேண்டும். அந்த ப்ரஹ்மஞானம் ப்ரத்யக்ஷத்தினலாகிலும், அனுமானத்தினலாகிலும் உண்டா காததினல் ஶப்தத்தினலேயே உண்டாகவேண்டும். அந்த ஶப்த மும் லக்ஷணவ்ருத்தியினல் ப்ரஹ்மத்தின் ஞானத்தை உண் டாக்குகிறதெனின், அதற்கு பூர்வத்தில் ப்ரஹ்மத்தின் ஞானம் இருக்கவேண்டும். இப்படி அனவஸ்தா என்கிற தோஷம் வருகிறபடியால், லக்ஷணவ்ருத்தியினல் ப்ரஹ்மஞானம் உண்டா கிறதென்பது பொருந்தாது. ஶப்தம் லக்ஷணவ்ருத்தியினலும், ஶக்யஸம்பந்தாதி (முக்யவ்ருத்தியினல் போதிக்கப்படும் வஸ்து வின் ஸம்பந்தம் முதலிய) தர்மங்களுடன் கூடின வஸ்துவையே போதித்துக் கொண்டிருப்பதினல், லக்ஷணவ்ருத்தியினல் போத்யமாகும் ப்ரஹ்மத்தில் ஶக்யஸம்பந்தாதி தர்மங்கள் ஸித்தித்துக் கொண்டிருப்பதினல் 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தில் தர்மத்தின் நிஷேதத்தைச் செய்வ தில்லை.

(5) 'அஶப்தமஸ்பர்ஶமரூபமவ்யயம்' என்கிற வாக்யமும் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதம் என்று போதிக்காது. ஏனெ னில்:—இந்த வாக்யம் சில தர்மங்களை நிஷேதித்துக்கொண்டி ருந்தபோதிலும், ஸர்வஞ்ஞத்வாதி ஸகல தர்மங்களையும் நிஷே

திக்காது. அவ்வளவேயன்றி இவ்வாக்யத்திலேயே 'அனுத்ய னந்தம் மஹத: பரம் த்ருவம் நிசாய்ய தம் ம்ருத்யுமுகாத் ப்ர முச்யதே' என்று ப்ரஹ்மத்தில் உத்க்ருஷ்டத்வம், நிசாய்யத் வம், த்ருவத்வம், முதலிய குணங்கள் சொல்லப்பட்டிருக்கின் றன. மற்றும் உத்தரவாக்யத்தில் 'ஈஶானம் பூதபவ்யஸ்ய' 'யதஶ்சோதேதி ஸூர்யோஸ்தம் யத்ரச கச்சதி । தம் தேவாஸ் ஸர்வேர்பிதா:' இத்யாத்யனேக வாக்யங்கள் பரமாத்மாவின் அநேக குணங்களைச் சொல்லுகின்றன. ஆகையால் இவ்வாக்ய மும் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்கிற விஷயத்தில் ஆதார மாகிறதில்லை.

(6) 'நிற்குணம் குணபோக்த்ருச' என்கிற கீதாவாக்யமும் ப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்கிற விஷயத்தில் ஆதாரமாகிற தில்லை. எப்படி எனில்:—சங்கராசார்யரே 'நிற்குணம் ஸத் வரஜஸ்தமோகுணரஹிதம்' என்று அர்த்தம் செய்திருப்பதி னுல் நிற்குணமென்கிற பதத்தினுல் ஸகலதர்மரஹிதமென்று ஸித்தமாகமாட்டாது. மற்றும் 'பூதபர்த்ருச தத் ஞேயம்' 'ஜ்யோதிஷாம் ஜ்யோதி:' 'அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:' இவை முதலிய கீதாவாக்யங்களினுல் பரப்ரஹ்மத்தின் ரக்ஷண கர்த்ரு த்வம், நாஶகர்த்ருத்வம், ப்ரகாஶகர்த்ருத்வம், இவை முதலிய அநேக தர்மங்கள் ஸித்திக்கின்றன. ஆகையால் இந்த வாக்ய மும் பரப்ரஹ்மம் ஸகலதர்மரஹிதமென்கிற விஷயத்தில் ஆதார மாகிறதில்லை.

(7) 'ந ஸ்தானதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ரஹி' என்கிற ஸூத்ரத்தில் ப்ரஹ்மம் நிர்விஶேஷம் (ஸகல தர்மரஹி தம்) என்று போதிக்கும் பதமில்லாததினுல், இந்த ஸூத்ரமும் பரப்ரஹ்மம் ஸகல தர்மரஹிதமென்கிற விஷயத்தில் ஆதார மாகிறதில்லை. "சங்கராசார்யர் ப்ரஹ்மம் நிர்விஶேஷம் (ஸகல தர்ம ரஹிதம்) என்று இந்த ஸூத்திரத்திற்கு அர்த்தம் செய் திருக்க—'ந ஸ்தானதோபி' என்கிற ஸூத்ரத்தினுல் ப்ரஹ் மத்தினிடத்தில் நிர்விஶேஷத்வம் ஸித்தமாகாதென்பது எப் படி யுக்தமாகும்" என்று ப்ரதிவாதிகள் சொல்லுவது யுக்த

மல்ல. ஏனெனில் :—வாதிப்ரதிவாதி பாவத்தினுல் விசாரணை நடந்துக்கொண்டிருக்க,உபயமதங்களுக்கும் மான்யமான வேதாதிகளின் ஆதாரங்களைக்கொடுக்கவேணுமேயொழிய, ஸ்வஸ்வமத ப்ரவர்தகர்களான ஆசார்யரின் வாக்யத்தை ஆதாரமாகச் சொல்லக்கூடாது. மேற்சொன்னபடிக்கு விசாரிப்பதில் 'ந ஸ்தானதோபி' என்கிற ஸூத்ரத்தில் ப்ரஹ்மம் நிற்விசேஷமென்று போதிக்கும் பதம் இல்லாததினுல் இந்த ஸூத்ரம் ப்ரஹ்மம் நிற்விசேஷம் (ஸகலதர்மரஹிதம்) என்பதற்கு ஆதாரமாவதில்லை என்று தெரியவருகிறது.

(8) 'தத்வமஸி' என்கிற வாக்யமும் ப்ரஹ்மம் நிற்விஶேஷமென்று சொல்லுவதில்லை என்பதேயன்றி, அதற்கு விருத்தமாக 'ஸர்வேஶத்வஸ்வதந்த்ரத்வஸர்வஞ்ஞத்வாதிபிற்குணை: । ஸர்வோத்தமஸ்ஸத்யகாமஸ்ஸத்ப ஸங்கல்ப ஈஶ்வர: । தத்பதார்த்த:' என்கிற சங்கராசார்யரின் வாக்யத்தை யனுஸரித்தும், வாஸ்தவமாகவும் 'தத்' என்கிற பதம் ஸர்வோத்தமத்வம், ஸர்வஞ்ஞத்வம் முதலிய அனேக குணங்களுடன் கூடின ப்ரஹ்மத்தை போதிக்கிறது. இப்படி இவ்வாக்யமும் ப்ரஹ்மம் ஸவிசேஷமென்றே சொல்லுகிறது. இவ்வாக்யத்தின் விஶேஷ விசாரங்கள் மூன்ருவது இஷ்யூவில் நடந்து தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(9) 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யமும் ப்ரஹ்மம் (ஸகலதர்மரஹிதம்) என்று சொல்லுவதில்லை. ஏனெனில் :—இவ்வாக்யத்தில் ப்ரஹ்மம் நிற்விசேஷமென்று போதிக்கும் பதமில்லை. மற்றும்—'மனஸைவானுத்ரஷ்டவ்யம்' என்கிற பூர்வவாக்யத்தில் ப்ரஹ்மத்தில் ஞேயத்வதர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் 'யதஸ்சோதேதி ஸூர்ய:' 'ஈஶானோ பூதபவ்யஸ்ய' இவை முதலிய பூர்வோத்தர வாக்யங்கள்—சந்த்ர ஸூர்யாதி நியாமகத்வம், ஜகத்ஸ்வாமித்வம் இவை முதலிய அநேக குணங்களைச் சொல்லுகின்றன. இப்படியிருக்க மத்தியிலிருக்கும் இவ்வாக்யம் அந்த பூர்வோத்தர வாக்யங்களுக்கு விருத்தமாக ப்ரஹ்மத்தில் குணங்களில்லை என்று சொல்லுவது

எப்படிப் பொருந்தும்? ப்ரஹ்மத்தில் குணங்களில்லை என்று சொல்லுவதில் ஶ்ருதிக்கு தாத்பர்யமிருக்குமாயின் 'நேஹாஸ்தி கிஞ்சன' இஹ=இந்த ப்ரஹ்மத்தில், கிஞ்சன=எந்த குணமும், ந=இல்லை என்று சொன்ன மாத்ரத்தினாலேயே அபிப்ராயம் ஸித்தமாய்க் கொண்டிருக்க—'நாநா கிஞ்சன நாஸ்தி' என்று சொல்லியது வ்யர்த்தமாகிறது. ஆகையால் பரமாத்மாவை விட பின்னமான குணக்ரியாதிகளில்லை (குணக்ரியாதிகளுக்கும் பரமாத்மாவுக்கும் பேதமில்லை.) என்று அறிவிக்கிறதே யொழிய, குணக்ரியாதிகளே இல்லை என்று அறிவிக்கிறதில்லை. 'யஸ்ஸர்வஜ்ஞ:' இது முதலிய ஶ்ருதிகளினால் சொல்லப் படும் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்கள், மித்யா=பொய் என்று சொல்லின், மித்யாதர்மங்களை அறிவிக்கும் வேதத்திற்கும் பௌத்தர்களைப் போலவே அப்ராமாண்யத்தை ஒப்புக் கொள்ள வேண்டியதாகும். அப்படி ஒப்புக்கொள்ளுவது வைதிகர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களுக்கு யோக்யமானதல்ல. 'நாங்கள் வேதங்களுக்கு வ்யாவஹாரிக ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளுகிறோம், பௌத்தர்களைப் போல் வேதத்திற்கு அப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ள மாட்டோம்' என்று சொல்லுவது யுக்தமல்ல. வ்யாவஹாரிக ப்ராமாண்யத்தை ஒப்புக் கொள்ளுவதும், அப்ராமாண்ய மென்பதும் ஒன்றே யாகிறது. இந்த விசாரம் பூர்வத்திலேயே நடந்திருக்கிறது.

"வேதத்தில்—ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் பாக மென்றும், ப்ரஹ்மத்தை விட வேரான ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்கள், யஜ்ஞம் தேவதைகள், ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்ம சர்யாத்யாஶ்ரமங்கள் இவைகளே முதலியவைகளை ப்ரதிபாதிக்கும் பாகமென்றும் இரண்டு பாகங்களுண்டு. அதில் ஸர்வஜ்ஞத்வாதி தர்மங்களை ப்ரதிபாதிக்கும் வேதங்களுக்கு நாங்கள் அப்ராமாண்யத்தை ஒப்புக் கொண்டாலும், ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் வேதங்களுக்கு ப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். பௌத்தர்கள் எல்லா வேதங்களையும் அப்ரமாண மென்கிறார்கள். இவ்விதமாக நம் அத்வைத மதத்திற்கும் பௌத்த

மதத்திற்கும் பேத முண்டு" என்று ப்ரதிவாதிகள் சொல்லுவது அயுக்தமாகிறது.

அத்வைத மதத்தில்-பரப்ரஹ்மம் ஸ்வப்ரகாஶம், இதரா வேத்யம், அவாச்யம், அஞ்ஞேயம் என்றிருப்பதினால் வேதத்தினால் ப்ரஹ்மம் போதிக்கப் படுவதற்கு ஶக்யமல்ல. ஆகையால் ப்ரஹ்மத்தின் விஷயத்தில் வேதம் ப்ரமாண மாகமாட்டாது. ஜகத்து மித்யையானதால் ஜகத் விஷயத்திலும் ப்ரமாண மல்ல. அர்த்தாத் எல்லா வேதங்களும் அப்ரமாண மென்றே ஆகிறது. ஆகையால் வேத ப்ரதிபாத்யமான ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்கள் பொய் என்று சொல்லக்கூடாது.

(10) 'மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூதகுணைர்யுக்தம் மைவம் த்வம் ஞாதுமர்ஹஸி' என்கிற மஹாபாரத ஶாந்தி பர்வம் 347-வது அத்யாயத்திலுள்ள ஶ்லோகத்தையும் அதற்கு பூர்வவாக்யத்தையும் விசாரிக்குங்கால் விஶ்வ ரூபத்திற்கு மாயிகத்வத்தை (அவித்யாகல்பிதத்வத்தை= மித்யாத்வத்தை) ச் சொல்லுவதில்லை என்று ஸித்தமாகிறது. எப்படி யெனின்:—பூர்வவாக்யத்தில் நாரதர் பரமாத்மனிடத்திற்கு வந்து 'நமஸ்தே தேவதேவேஶ.......ப்ராஹ்மணப்ரிய விஶ்வமூர்த்தே, மஹாமூர்தே, பாந்தவ, பக்தவத்ஸல, ப்ரஹ்மண்ய தேவ, பக்தோஹம் த்வாம் தித்ருக்ஷுரேகாந்த தர்ஶநாய நமோ நமஃ' தேவதேவேஶ = தேவதைகளுக்கு தேவதைகளாயிருப்பவர்களுக்கு ஸ்வாமியானவனே, ப்ராஹ்மணப்ரிய, விஶ்வமூர்தே, மஹா மூர்தே, பந்தோ, பக்தானுமத்யந்தப்ரிய (பகவன்) பக்தனான நான் உன்னிட தர்ஶனத்திற்காக வந்திருக்கிறேன் என்று 346-வது அத்யாயத்தில் ப்ரார்த்தித்துக் கொண்டிருக்க, 347-வது அத்யாயத்தில்—'ஏவம் ஸ்துதஸ்ஸ பகவான் குஹ்யை: தத்யைஶ்ச நாமபி:। பகவான் விஶ்வத்ருக் ஸிஹ்ம: ஸர்வமூர்திமய: ப்ரபு:। தர்ஶயாமாஸ முனயே ரூபம் தத் பரமம் ஹரிஃ' என்கிற ஶ்லோகத்தில் 'தத்யை: நாமபி:' நிஜமான தர்மங்களைச் சொல்லும் பதங்களினால் துதிக்கப்பட்ட, ஸர்வஞ்ஞனான, ஸர்வ ஶ்ரேஷ்டனான பகவான் (நாராயணன்) அந்த நாரதருக்கு விஶ்வ

ரூபத்தை காட்டினன் என்று பரப்ரஹ்மத்தில் சொல்லப்பட்ட தேவதேவத்வம், ப்ராஹ்மணப்ரியத்வம், பக்தவத்ஸலத்வம் முதலிய குணங்கள் நிஜமானவைகளே, மற்றும் விஶ்வரூபமும் நிஜமானதே, பொய்யல்ல என்று 'தத்யை:' என்கிற பதத்தினுல் ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் 'ஸஹஸ்ர நயன: ஸ்ரீமான் ஶதஶீர்ஷஸ்ஸஹஸ்ரபாத் । ஸஹஸ்ரோதர பாஹுஶ்ச........ஓங்கார முத்கிரன்வக்த்ராத் ஸாவித்ரீம் ச ததன்வயாம் । ஶேஷேப்யஶ்சைவ வக்த்ரேப்ய: சதுர்வேதான் கிறன் பஹுவின் । ஆரண்யகம் ஜகௌ தேவோ ஹரிர்நாராயணோ வஶீ । தம் ப்ரஸன்னம்ப்ரஸன்னாத்மா வவந்தே பரமேஶ்வரம் । தமுவாச நதம் மூர்த்னா தேவானுமாதிரவ்யய:' (ம. பா. ஶாந்தி. அ. 347. ஶ்லோகம் 7, 8, 10, 12.) இவை முதலிய ஶ்லோகங்களினுல், ஸஹஸ்ரநயனுதிகளுடன் கூடிய, ஸகல வேதங்களையும் உச்சரிக்கும், விஶ்வமூர்த்திக்கே—தேவானுமாதி:= தேவதைகளுக்கு காரணன், அவ்யய:=நாஶமில்லாதவன் என்கிற விஶேஷணங்களைக் கொடுத்திருப்பதினுல் நாஶரஹிதமான தேவதைகளுக்கு காரணமான அந்த விஶ்வரூபம் எப்படி பொய்யாகும்? (மாயிகம் = அவித்யாகல்பிதம் எப்படியாகும்?) ஆகையால் அந்த விஶ்வரூபம் மாயிகமல்ல (அவித்யாகல்பிதம் = பொய் அல்ல) என்று ஸித்தமாகிறது.

'மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன்மாம் பஶ்யஸி நாரத'। என்கிற ஶ்லோகத்தில் இந்த விஶ்வரூபத்திற்கு மாயிகத்வம் (அவித்யாகல்பிதத்வம்) சொல்லப்பட்டிருக்கிற தென்று ப்ரதிவாதி சொல்லுவது பூர்வோத்தர வாக்யங்களின் பேரில் த்ருஷ்டி கொடுக்காததின் பரிணுமமே யாகிறது. எப்படி யெனில்:—

"ஏகதஶ்ச த்விதஶ்சைவ த்ருதஶ்சைவ மஹர்ஷய: । இமம் தேஶமனுப்ராப்தா மம தர்ஶனலாலஸா: (12) ந ச மாம் தே தத்ருஶிரே ந ச த்ரக்ஷ்யதி கஶ்சன । ருதே ஹ்யேகாந்திக ஶ்ரேஷ்டாத் த்வம் சைவைகாந்திகோ மம (13," என்று பகவானுல் நாரதருக்கு தன்னிட ரூபத்தைக் காட்டி, என்னிட தர்ஶனத்திற்காக ஏகத த்வித த்ருத என்கிற மஹரிஷிகள் வந்தி

ருந்தனர். அவர்கள் என்னைக் காணுவதற்கு திறமையுள்ளவர் களாகவில்லை. ஏகாந்த பக்தர்கள் தவிர வேறு யாரும் என்னைக் காணுவதற்கு திரமையுள்ளவர்களாகமாட்டார்கள். ஓய் நாரதரே! நீர் ஏகாந்த பக்தர்களில் ஶ்ரேஷ்டராகையால் உமக்கு நான் தர்ஶனம் கொடுத்தேன் என்று பகவான் நாரதரின் பேரில் பளுவைச் சுமக்கவே, ரூபமுள்ள கடபடாதி பதார்த்தங்கள் எப்படி நம்மிட ப்ரயத்னத்தினுலேயே காணப்படுகின்றவோ, அந்த பதார்த்தங்கள் காணப்படுவதற்கு பக்தி முதலிய உபாயங்களொன்றும் தேவையில்லையோ அப்படியே நீயும் (பகவானும்) ரூபமுள்ளவனுகையால் காணப்படுகிருய். ஆகையால் உன்னிட தர்ஶனத்திற்காக ஏகாந்தபக்தி ஏன் வேண்டும்? வீணுய் என் பேரில் ஏன் பளுவைச் சுமைக்கிருய் என்கிற நாரதரிட மனதிலுள்ள ஶங்கையை அவரிட முகஜாடையினுல் பகவான் அறிந்து—ஓய் நாரதரே! 'ஏதத் த்வயா ந விஞ்ஞேயம் ரூபவானிதி த்ருஶ்யதே। இச்சன் முஹூர்த்தான்னஶ்யேயம் ஈஶோஹம் ஜகதோ குரு:। மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யன் மாம் பஶ்யஸி நாரத। ஸர்வபூதகுணைர்யுக்தம் மைவம் மாம் ஞாதுமர்ஹஸி।' கடபடாதி பதார்த்தங்கள் ரூபமுள்ளவைகளாயிருப்பதினுல் ஏகாந்தபக்தி இல்லாமலே எப்படி காணப்படுகின்றனவோ அப்படியே நானும் (பகவானும்) ரூபமுடையவனுகையால் பக்தி இல்லாமலே காணப்படுவேனென்று நினைக்காதே. உனக்கு நான் காணப்படக்கூடாதென்று எனக்குத் தோன்றுமாயின் ஒரு நொடியில் காணுமற் போவேன். நான் கடபடாதிகளைப் போன்றவனல்ல. என்னிடத்தில் காணுமற்போகும் திறமையுண்டு. நான் ஜகத்துக்கு குரு. ஆகையால் என்னிட இச்சையினுலேயே நான் காணப்படுவேன். இச்சை இல்லாவிடில் காணப்படமாட்டேன். நான் இவனுக்கு காணப்படவேண்டுமென்று எனக்கு இச்சையுண்டாகவேணுமாயின் அவர்கள் என்னிடத்தில் பக்தி செய்யவேண்டும். என்னிடத்தில் பக்தி செய்யாமல் அவனுக்கு தர்ஶனம் கொடுக்கவேணுமென்கிற எண்ணம் எனக்கு உண்டாகாது. எண்ணமுண்டாகாமல் நான் காணப்படுபவனல்ல. நீர் அடைந்த இந்த என்னிட தர்ஶனம் என்

இச்சையினுலேயே உண்டாயிற்று. காணுமற்போவதே முதலிய திறமையுடன் கூடின என்னை 'ஏவம்' ரூபமுள்ள கடபடாதிகளைப்போல் நம்மிட ப்ரயத்னத்தினுலேயே காணப்படுபவன், (அவனிட தர்ஸனத்திற்கு பக்த்யாதிகளின் ஆவஶ்யகமில்லை) என்று நீர் நினைக்கவேண்டாம் என்று பூர்வோத்தர வாக்யங்களின் ஸம்பந்தத்தினுல் அர்த்தமாகிறது. ஆகையால் விஶ்வரூபம் மாயாமயம் (அவித்யாகல்பிதம் = மித்யை) என்கிற விஷயத்தில் இந்த வாக்யம் ஆதாரமாவதில்லை.

கீதையில்:—'அநேக வக்த்ரநயன மநேகாத்புத தர்ஶனம் । அநேகதிவ்யாபரணம் திவ்யானேகோத்யதாயுதம் । திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தானுலேபனம் । ஸர்வாஶ்சர்யமயம் தேவம் அனந்தம் விஶ்வதோமுகம்' (கீ. 11-10, 11.) இத்யாதி ஶ்லோகங்களினுல் இந்த விஶ்வரூபம் அநேக குணங்களுடன் கூடினது, அநேக ஆஶ்சர்யமான பதார்த்தங்கள் இந்த விஶ்வரூபத்தில் காணப்படுகின்றன. அநேகமான, திவ்ய = அப்ராக்ருதமான (அமாயிகமான = அவித்யாகல்பிதமல்லாத) ஸத்யமான ஆபரணங்கள், அப்ராக்ருதமான ஆயுதங்கள், அப்ராக்ருதமான மாலைகள், வஸ்த்ரங்கள், அப்ராக்ருதமான கந்தம் முதலியவைகளுடன் கூடினது. மற்றும் அனந்தம் = நாஶமில்லாதது என்று அந்த விஶ்வரூபம் நாஶரஹிதமென்றும், அப்ராக்ருதமான (அவித்யாகல்பிதமல்லாத = பொய்யல்லாத) ஸத்யமான ஆபரணங்களுடன் கூடினதென்றும் சொல்லியிருப்பதினுலும், சங்கராசார்யரும் அந்த விஶ்வரூபத்திற்கு 'திவ்யானி' என்கிற பதத்தினுல் ஸத்வரஜஸ்தமோகுணத்மகப்ரக்ருதி (அவித்யா) கார்யமல்ல, அப்ராக்ருதம் என்று சொல்லியிருப்பதினுலும் அந்த விஶ்வரூபம் மாயிகம் (அவித்யாகல்பிதம்) எப்படியாகும்? ஆகமாட்டாது.

'த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம் த்வமஸ்ய விஶ்வஸ்ய பரம் நிதானம் । த்வமவ்யய: ஶாஶ்வததர்மகோப்தா ஸநாதனஸ்த்வம் புருஷோ மதோ மே । அநாதிமத்யாந்தமனந்தவீர்யம்' (கீதா. 11-13, 19.) என்கிற ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட விஶ்வரூபத்தைக் குறித்து நீ அக்ஷரமான = நாஶரஹிதமான

ப்ரஹ்மமென்று அறியவேண்டும். நீ இவ்வெல்லா ஜகத்துக்கும் ஆஶ்ரயன், நீ நாஶரஹிதன், ஶாஶ்வதமான தர்மத்தை ரக்ஷிப்பவன், ஆதிமத்யாந்தங்களில்லாதவன் என்று விஶ்வரூபத்தின் நித்யத்வம், தர்மரக்ஷகத்வம், முதலிய தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விஶ்வரூபம் பொய்யாயின் இவைகளெல்லாம் பொருந்தாது. ஆகையால், விஶ்வரூபம் பொய்யல்ல வென்று ஸித்தமாகிறது.

இப்படி ஸர்வஞ்ஞத்வாத்யனந்த கல்யாண குணங்களுடன் கூடினதென்கிற விஷயத்தில் ஶ்ருதிஸூத்ரகீதாரூபமான ப்ரஸ்தானத்ரயங்களின் ஆதாரங்களிருக்கின்றன. ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி தர்மங்களினால் ரஹிதமென்கிற விஷயத்தில் ஒரு ஆதாரமுமில்லை. ஆகையால் ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வம் முதலிய அநந்தகல்யாண குணங்களுடன் கூடினது என்கிற நம்மிட விண்ணப்பத்தை கோர்டார் கவனிக்கவேணுமாய் கோருகிறோம்.

---

ஹிந்தி பிரசார் பிரஸ், திருவல்லிக்கேணி, மதராஸ்.

## இப்புத்தகம்

பெங்களூர் பஸவன்குடி போஸ்ட்
உத்திராதிமடம் பில்டிங்க்ஸ

எஸ்.எம்.எஸ்.ஏ. ஸபை லைப்ரேரியன்
வி. என். தேசிகாசார்யாரிடத்திலும்,

மதருஸ் திருவல்லிக்கேணி சிங்காராசாரி தெருவு,
13 நெ. உத்திராதி மடத்திலிருக்கும்
எஸ். ராமாசாரியாரிடத்திலும் கிடைக்கும்.